# விடியும் முன்

பாலாஜி க. குமார்

**EXT. DOCKYARD, RAILWAY TRACKS - NIGHT**

ஆள் ஆரவாரமற்ற இரயில் பணிமனை நிலையம். ராக்ஷச இடிகளுடன் மழை பெய்துக் கொண்டிருக்கிறது. மழையின் சட சட சத்தத்தை கிழித்துக் கொண்டு ஒரு சிறுமியின் கால்களும், அதை தொடர்ந்து ஒரு பெண்ணின் கால்களும் சேற்றில் சுவட்டை பதித்தவாறு ஓடுகின்றன.

**HIGH ANGLE (CONTINUING ACTION)**

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பழைய இரயில் வண்டியை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

அந்த சிறுமி ஓட முடியாமல் இருமியபடி கீழே விழுகிறாள். பார்ப்பதற்கு சுமார் பதினைந்து வயதிருக்கும் இவள் பெயர் நந்தினி.

உடன் ஓடிவந்த பெண் மூச்சி வாங்கியபடி நந்தினி அருகில் நிற்கிறாள். அவளின் வலது கன்னம், வாங்கிய அடியின் அடையாளமாய் புடைத்துக் கொண்டிருக்கிறது. சுமார் முப்பது வயதிருக்கும் இவளின் பெயர் ரேகா.

NANDHINI
என்னால முடியல.

REKHA
வந்தாச்சு இன்னும் கொஞ்ச தூரந்தான்.

பக்கத்து தண்டவாளத்தில் சீறிப் பாய்ந்து கடக்கும் இரயில் வண்டியின் விளக்கு வெளிச்சம், நந்தினியின் முகத்தை சற்றுத் தெளிவாகக் காட்டுகிறது. முகத்தின் பாதியை இரத்த படலம் மறைத்துக் கொண்டிருக்க, பயந்துபோன ரேகா, நந்தினியின் முகத்தை தொட்டு பார்க்கிறாள்.

NANDHINI
உனக்கு ஒன்னும் அடிபடலியே??

இறைச்சலோடு ஒரு டிரான்ஸிஸ்டரின் சத்தம் எங்கிருந்தோ கேட்கிறது.

CUT TO:

**EXT. DOCKYARD, BOGIE - NIGHT**

நின்றுக்கொண்டிருந்த இரயில் வண்டி பெட்டியில், ரேகா முதலில் ஏறிய பின் நந்தினிக்கும் கை கொடுக்கிறாள்.

**INT. DOCKYARD, BOGIE - NIGHT (CONTINUING ACTION)**

இருள் சூழ்ந்த அந்த பெட்டியில் இருவரும் ஒரு ஓரமாக உட்காருகின்றனர்.

(CONTINUED)

CONTINUED:

NANDHINI
எனக்கு பயமா இருக்கு..!

நந்தினி தனது கைகளை நெஞ்சோடு கட்டிக்கொண்டு ஜுரத்தில் நடுங்கிக் கொண்டிருக்கிறாள்.

REKHA
அங்க எதுமே நடக்கல. எல்லாத்தையும் மறந்திடு.

நந்தினியின் நெற்றியை தனது கைகளால் தொட்டு பார்க்கிறாள் ரேகா.

REKHA (CONT'D)
அய்யோ! உடம்பு ஏன் இப்டி கொதிக்குது.?
எந்திரி...

காய்ச்சலை உணர்ந்த ரேகா, நந்தினியின் மேலாடையை அவிழ்த்து, பிழிந்து காயப்போடுகிறாள். மழையில் நனைந்திருந்த அவளின் புடவை முன்தானையை பிழிந்து, நந்தினியின் முகத்தில் இருக்கும் இரத்தத்தை துடைக்கிறாள்.

REKHA (CONT'D)
இந்த பக்கம் திரும்பு.

NANDHINI
இப்பொ எங்க போக போறோம்?

REKHA
ஒரு பத்திரமான இடத்துக்குதான் போறோம்.

ரேகா அவளின் சேலையை சரி செய்து கொள்கிறாள்.

REKHA (CONT'D)
நீ இங்கயே இரு. நான் போய் உனக்கு எதாவது மருந்து வாங்கிட்டு வரேன். சரியா?

NANDHINI
என்ன தனியா விடாத அக்கா. நானும் வரேன்.

REKHA
வேண்டாம் கண்ணு..சொன்னா கேளு. உனக்கு ஜுரம் வேர அடிக்குது. சீக்கிரம் வந்திடுரேன்.

கிளம்பி செல்லவிருந்த ரேகாவின் சேலையை நந்தினியின் கைகள் பிடித்து இழுக்கிறது.

NANDHINI
வந்திடுவ இல்ல??

பரிவுடன் ரேகா நந்தினியின் கண்களை பார்த்து உறுதிப்படுத்துகிறாள்.

(CONTINUED)

CONTINUED: (2)

ANGLE ON NANDHINI(SLOW MOTION)

நந்தினி இருட்டில் தனியே இருக்கிறாள். அறுவருப்பான சப்தங்கள் இருட்டோடு சேர்ந்து அவளை சூழ்கின்றன.

HARD CUT TO:

TITLE: VIDIYUM MUNN

**EXT. BEACH HOUSE - NIGHT**

பௌர்ணமி இரவில், இடிகள் சத்தமாக கர்ஜித்து கொண்டிருக்க, மின்னல் கோட்டின் வெளிச்சத்தில் ஒரு மிகப்பெரிய வீடு, அந்த வீட்டின் வெளி கதவில், கம்பிகளுக்கு பதில் இரும்பு பாம்புகள் நெளிந்து கொண்டிருக்கின்றன.

**INT. BEACH HOUSE, BEDROOM - NIGHT**

சின்னையா - அதிகம் பேசாத, சராசரி இளைஞுனுக்கு அப்பாற்பட்ட ஒருவன். ஒரு இருட்டான அறையில் அமர்ந்து, பிரிக்காத சிகரேட் பெட்டியை விரல்களின் இடையே சுற்றியபடி ஏதோ ஒன்றை உற்று பார்த்து கொண்டிருக்கிறான்.

சின்னையாவின் ஆட்கள் மணியும் வேலுவும் அறைக்குள் வருகின்றனர். அறையில் வினோதமான முனகல் சத்தம் கேட்கிறது. வேலு எதுவும் சொல்வதற்குள், மணி அதன் விளைவுகளை அறிந்து பின் வாங்குகிறான். அமைதியாக இருப்பதுதான் சரி என்பதை வேலுவுக்கு தெரியப்படுத்துகிறான்.

ஒரு சிறிய அமைதியான இடைவெளிக்கு பின், தனது பேனாவின் முனையால் ஒரு சிறுமியின் உள்ளாடையை, மணி பார்ப்பதற்காக தூக்கி காண்பிக்கிறான் சின்னையா.

CHINNAIAH
(sonorous voice)
இவ யாருன்னு கண்டுபிடிக்கனும்.

சின்னையாவை மணி சில நொடிகள் உற்று பார்க்கிறான். அப்படியே வேலு பக்கம் திரும்பி, மெதுவாக தலையை சிமிட்டுகிறான்.

CUT TO:

**EXT. CROSSROAD - NIGHT**

அக்குவாஃபீனா பாட்டிலை வைத்து தனது முகத்தை கழுவிகொண்டிருக்கிறான் மணி.

VELU
அண்ணே, நம்ம பச்சமுத்து.

MANI
ம்ம்ம்...

(CONTINUED)

CONTINUED:

முகத்தை கழுவியப்படி பச்சமுத்துவை திரும்பி பார்க்கிறான். பதட்டத்துடன் பச்சமுத்து நின்றுக்கொண்டிருக்கிறான்.

MANI (CONT'D)
(clears his throat)
நைட்டு பெரியையா-வுக்கு வண்டி ஓட்டுனது நீதானே?

அவன் கண்களில் தெரியும் பயத்தையும், நெற்றியில் உருண்டோடும் வியர்வை துளிகளையும், மணி கவனிக்கத் தவறவில்லை.

PACHAMUTHU
ஆமாங்க.

MANI (CONT'D)
பொண்ண சப்ளை பண்ணது யாரு??

PACHAMUTHU
அது வந்து... சிங்காரம்னு...

வாயை கொப்பளித்து, தண்ணியை துப்புகிறான் மணி.

MANI
யாரு, இந்த சலூன் வச்சிருக்கானே... அந்த சிங்காரமா?

PACHAMUTHU
ஆமாங்க.

சிறிது தண்ணீர் குடித்துவிட்டு, பச்சமுத்துவை முனைப்பாக பார்க்கிறான்.

PACHAMUTHU (CONT'D)
என்ன பிரச்சனைனு... கேக்கலாமா?

மெலிதாக, அவன் கண்களை பார்த்து சிரிக்கிறான்.

MANI
(to velu)
வேலு, கூட்டிட்டு போ.

நடக்கவிருப்பது என்னவென்று தெரியாமல், வேலுவுடன் செல்கிறான் பச்சமுத்து. இருவரும் சிறு தூரம் செல்ல, திடீரென வேலு தனது துப்பாக்கியால் பச்சமுத்துவை நெற்றிபொட்டில் சுடுகிறான்.

பாதாள சாக்கடையின் திறப்பை திறந்து பச்சமுத்துவை உள்ளே தள்ளுகிறான்.

CUT TO:

**EXT. SALOON - NIGHT**

சந்தேகத்துக்குறிய இடத்தில் ஒரு சலூன், அதன் கதவுகள் மூடியப்படி இருக்க, உள்ளே ஒரு கைப்பேசியின் அலறல் சப்தம் கேட்க தொடங்குகிறது.

SOMEONE (O.S.)
ஹெல்லோ? ஒன் நிமிட்.
(beat)
டேய்! ஆல்பர்ட்டு...

**INT. SALOON - NIGHT (CONTINUING ACTION)**

சலூனில் வேலை பார்க்கும் ஒரு விடலை பையன், ஆல்பர்ட்.

SOMEONE
...இந்தா பேசு.

சிங்காரத்திடமிருந்து கைப்பேசியை வாங்கிக்கொண்டு, திரைக்கு பின்னால் இருக்கும் அறையினுள் மறைகிறான்.

WE PULL BACK TO REVEAL:

கையில் இருக்கும் பணத்தை எண்ணிக்கொண்டு அறையின் ஓரமாக உட்கார்ந்திருக்கும் சிங்காரம் ஒரு விபச்சார ப்ரோக்கர்.

SINGARAM
(sotto)
எல்லா எலிசபத்து பேரனுங்க. தமிழ் தெரிஞ்சுகிட்டே, தெரியாத மாதிரி பீட்டர் உடுவானுங்க.

மரத்தில்லான நாற்காலிகள், ஒரு பெரிய கண்ணாடி மற்றும் சுவர்கள் முழுவதும் வசீகரமான பெண்களின் படங்கள் சலூனை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றன.

உள்ளே அமைந்திருக்கும் அறையில் ஆல்பர்ட் கைப்பேசியில் பேசிக்கொண்டிருக்க, ஒரு வீடியோ பதிவுக்கருவி திரைக்கு அப்பால் இருக்கும் ஏதோ ஒன்றை பதிவு செய்ய தயாராய் இருந்தது. உற்றுப்பார்த்தால் ஒரு ஆணின் உருவம் உள்ளாடையோடு அங்கும் இங்கும் நடந்துக்கொண்டிருக்கிறது.

ALBERT (O.S.)
நேம்? ரெஃபர்ட் பை?
(repeats loudly)
பாலாஜி, ஜி.எம்....ஐசிஐசி பேங்க்?

ஆல்பர்ட், சிங்காரத்தின் ஒப்புதலுக்காக அவனை பார்த்து கொண்டிருந்தான். பணத்தை எண்ணிக் கொண்டே அவனிடம் தலையை ஆட்டியபடி சம்மதத்தை தெரிவிக்கிறான்.

ALBERT (O.S.)
ஒகே. ரெடி! ஏஜ்?..ம்ம்.. சைஸ்?.. ம்ம்.. ஸ்டேட்?..
ம்ம்..

(CONTINUED)

CONTINUED:

சில விரிவான தகவல்களை ஒரு சிறிய காகிதத்தில் அக்கறை இன்றி எழுதுகிறான்.

SINGARAM (CONT'D)
(quizzically, sotto)
ஸ்டேட் ஆ??

ALBERT (O.S.)
ஒகே...ஐ வில் கால் பேக் இன் 10 மினிட்ஸ்.

SINGARAM
(to Albert)
என்னவான்டா?

அந்த சிறிய காகிதத்தை சிங்காரத்திடம் கொடுத்துவிட்டு, வீடியோ பதிவை தொடங்குகிறான், ஆல்பர்ட்.

SINGARAM (CONT'D)
(studies the note)
இவன் கேக்குறத ஆர்டர் கொடுத்து செஞ்சாதான் உண்டு.
(thinks)
பேசாம நம்ம ஒமன குட்டிய அனுப்பிவச்சிட்டா?

ALBERT
(looks up from camera)
யாரு, லத்திகாவா? அவளுக்கு சைஸுதான்...

SINGARAM
டேப்பா டா வச்சி அளக்க போறான்? அனுப்பு டா. அவ பாத்துக்குவா.

ALBERT
(shrugs)
ஒகே.

பணத்தை எண்ணிக் கொண்டிருக்கும் சிங்காரம், சில ரூபா நோட்டுகளை உருவி எதிரே அமர்ந்திருக்கும் ப்ரியாவிடம் நீட்டுகிறான்.

கையில் ஒரு சிகரெட்டுடன் சுவற்றில் சாய்ந்தபடி, கலைப்புடன் ஒரு நீள் இருக்கையில் அமர்ந்திருக்கிறாள் ப்ரியா. புருவத்தை தூக்கியப்படி சிங்காரத்தை முனைப்பாக பார்க்கிறாள்.

SINGARAM
(to priya)
என்ன பாக்குற? உன் ரேட் 5 தௌசன். டேக்ஸி அப் அண்ட் டௌன் ஐநூறு. ரூம் ரெண்ட் எட்நூறு. என் கமிஷன் ஆயிரத்தி இருநூறு. போக மிச்சம் ஆயிரத்தி ஐநூறு.

(CONTINUED)

CONTINUED: (2)

சலிப்படைந்த ப்ரியா, பணத்தை வாங்கி கொண்டு திறந்திருக்கும் அவளின் பையில் போடுகிறாள்.

PRIYA
அடுத்த ஒரு வாரத்துக்கு என்ன புக் பன்னாதே.

SINGARAM
என் பேபி?

PRIYA
காலேஜ் எக்ஸாம்ஸ்.

SINGARAM
அப்ப ஒரு படம் நடிச்சிட்டு போ.

PRIYA
ஏன், கூட நீ நடிக்கிறியா??

SINGARAM
ஹ..ம்ம்..அது சரி.. ஷில்பா டார்லிங்க், அப்பொ
அடுத்த வாரம் நீ நிறையா காசு பாக்கலாம்.
(beat)
உடம்ப பத்திரம்மா பாத்துக்க.

ஆங்கில இதழ் ஒன்றை படித்து கொண்டு, மர நாற்காலியில் அமர்ந்திருக்கிறாள் ஷில்பா.

SHILPA
(in hindi)
க்யா??

ஷில்பா, சிங்காரத்தை சலூனில் இருக்கும் கண்ணாடியில் பார்த்து கேட்கிறாள்.

SINGARAM
இது ஒன்னு.
(in broken hindi)
அக்லே ஹஃப்த்தே ஜாதா பைஸா.

SHILPA (CONT'D)
(hindi)
டீக் ஹே.

திடீரென சலூனின் வெளி கதவுகள் தட்டப்படுகிறது...

சலூனில் இருந்த அனைவரும், செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்தியபடி சிங்காரத்தை முனைப்பாக பார்க்கிறார்கள்.

SINGARAM
ஷ்! கூல். ரேகாவா இருக்கும்.

கதவுகள் மறுபடியும் பயங்கரமாக தட்டப்படுகிறது.

(CONTINUED)

CONTINUED: (3)

SINGARAM
நாட் கூல்.. உள்ள போ...உள்ள போ.

சிக்கலான அந்நேரத்தில், பெண்கள் இருவரையும் அறைக்குள் தள்ளி, தட்டப்பட்ட கதவுகள் அருகே செல்கிறான்.

SINGARAM
(whispers, to Albert)
லைட் ஆ்ஃப் பண்ணு டா.

தட்டப்பட்ட கதவுகளை திறப்பதற்க்கு முன்னால், சலூனில் இருக்கும் எல்லா விளக்கையும் அனைக்கிறான். இடம் முழுவதும் இருளால் சூழப்படுகிறது.

MANI (O.S.)
தொர டா. உள்ள இருக்கன்னு தெரியும்.

கதுவுகளில் துழை வழியாக எட்டி பார்க்க, நிற்பது மணி என்பதை அடையாளம் கண்டு கொள்கிறான்.

**EXT. SALOON - NIGHT (CONTINUING ACTION)**

சில நொடிகளுக்கு பின்னர் கதவுகள் திறக்கப்படுகிறது.

SINGARAM
மணியா? நான் போலீஸ்னு நினைச்சிட்டேன்.

உள்ளே வந்த மணி, சலூனை நோட்டம் விடுகிறான்.

SINGARAM
என்ன இவ்ளோ தூரம்? கூப்டிருந்தா நானே வந்திருப்பன் இல்ல.??

MANI
சரி அப்ப வா, போகலாம்.

SINGARAM
இப்பொ கொஞ்சம் பிசியா இருக்கேன், காலையில...

சிங்காரத்தை மெதுவாக பார்த்தபடி அவனை முறைக்கிறான்.

MANI
(intimidatingly)
காலையில...?

SINGARAM (CONT’D)
(stutters)
நீங்க போய்கிட்டே இருங்க, இதோ பின்னாடியே வரேன்.

(CONTINUED)

CONTINUED:

MANI
ம்ம்...சீக்கிரமா வா.

**INT. SALOON - NIGHT (CONTINUING ACTION)**

பின்னால் இருந்த அறைக்குள், திரையை ஒதுக்கி விட்டு நுழைகிறான்.

SINGARAM
(to Albert, sotto)
டேய்...ரேகா-க்கு ஒரு கால் போட்டு, எங்க
இருக்கான்னு பாரு.

ALBERT
யாரு? நம்ம பழைய ரேகா வா?

SINGARAM
ஷ்...ஷ்! ஆமாடா. ஒரு முக்கியமான மேட்டரா
அனுப்புச்சிருக்கேன். கால போடு.

ரேகாவை அழைப்பதற்காக ஆல்பர்ட் தன் கைப்பேசியை எடுக்கிறான்...

CUT TO:

**INT. DOCKYARD, BOGIE - NIGHT**

திறந்து வைக்கப் பட்டிருக்கும் பிஸ்கட் பேக்கடின் அருகே இருந்த ரேகாவின் கைப்பேசி அடிக்கத் தொடங்குகிறது. அழைப்பவர் யார் என்பதை அறிந்த ரேகா, கைப்பேசியை சட்டை செய்யாமல் இருக்கிறாள்.

NANDHINI
யாரு ஃபோனு?

REKHA
அது யாரும் இல்ல.

ஒரு பாட்டில் தண்ணீரும், காய்ச்சலுக்கான மாத்திரையையும் நந்தினியிடம் கொடுக்கிறாள் ரேகா.

REKHA (CONT’D)
இந்தா, இத சீக்கிரம் முழுங்கு, ட்ரேய்னுக்கு டைம்
ஆயிடுச்சு.

விருப்பமே இல்லாமல், ரேகாவிடமிருந்து அதை வாங்கி கொள்கிறாள்.

CUT BACK TO:

**INT. SALOON - NIGHT**

ஆல்பர்ட் கூறுகிறான்.

ALBERT
ஃபோன் எடுக்க மாட்டேங்கிறா.

SINGARAM
(hurries up)
ஒரு பத்து நிமிஷம் கழிச்சி திருப்பி ட்ரை பண்ணு..
அப்படியே இதுங்கள சீக்கிரம் அடிச்சி கிளப்பு.

ஆல்பர்ட்-இடம் கூறிவிட்டு அங்கிருந்து வெளியே செல்கிறான்.

**EXT. SALOON - NIGHT**

ஒரு பெரிய கருப்பு கலர் காரின் பக்கத்தில் மணி நின்றுக்கொண்டிருக்க, சிங்காரம் அவனை நோக்கி செல்கிறான்.

SINGARAM
(confused)
மணி, என்ன நடக்குது??

MANI
உள்ள போ, எல்லாம் விவரமா பேசலாம்.

வேலு கார் கதவுகளை திறக்க, சிங்காரம் அதனுள் ஏறுகிறான்.

SINGARAM
(sotto)
என்னங்கப்பா ஒரே படம் காட்டுறீங்க.?

காரின் கதவுகள் மூடப்படுகிறது.

**I/E. CHINNAIAH'S SUV - NIGHT (CONTINUING ACTION)**

உள்ளே பார்த்தால் சின்னையா தனது கையில் ஒரு பேனாவை சுற்றியபடி அமர்ந்திருக்கிறான்.

SINGARAM
(climbing)
சின்னையா?

சிங்காரத்தின் பேச்சில் நடுக்கம் தெரிகிறது. சின்னையா எந்த ஒரு பதிலும் கூறாமல் அமைதி காக்கிறான்.

கிளம்ப தொடங்கிய காரின் வைப்பர் ப்ளேடுகள் வீசத்தொடங்கியது.

ஆள் நடமாட்டமற்ற தெருவினுள் அந்த கார் அமைதியாக செல்கிறது.

(CONTINUED)

CONTINUED:

மூவரும் அமைதியாக இருக்க, அந்த நிசப்தத்தை சிங்காரத்தால் சமாளிக்க முடியவில்லை.

SINGARAM (CONT'D)
(hesitatingly)
எங்க..போகிறோம்?

மணி, காரின் கண்ணாடியை சரி செய்தபடி பின்னே அமர்ந்திருக்கும் சிங்காரத்தை பார்க்கிறான்.

MANI
தொழில் எல்லாம் எப்படி நடக்குது?

SINGARAM
(sotto)
அட...அதை கேக்கதானா?? நான் என்னமோ
நினைச்சிட்டன்.
சுமாரா போகுது, சார். எவன் சார் இப்ப எல்லாம்
சலூனுக்கு வரான்?? அவன் அவன் பார்லர்
கீர்லர்னு..

MANI
(cuts in)
நா அந்த தொழில பத்தி கேட்க்கல.

எதை பற்றி பேச்சு போய்க்கொண்டிருக்கிறது என்பதை சிங்காரத்தால் புரிந்துகொள்ள முடியவில்லை.

SINGARAM
அதுவா? அதுவும் சுமார்தான். இப்ப எல்லாம்
அவன் அவன் சாட்டிங்க், டேட்டிங்க்னு தானே
பிக்கப் பண்ணிக்கிறான்.

சிங்காரத்தின் பிதற்றலை கேட்டுக்கொண்டிருந்தபடி தன் கையில் இருக்கும் பேனாவை அழுத்திக்கொண்டிருக்கிறான் சின்னையா.

MANI
(cuts in)
அப்போ உள்ள உக்காத்தி வச்சிருக்கியே,
அதுங்கெல்லாம்??

அழுத்திக்கொண்டிருந்த பேனாவின் சப்தம், சிங்காரத்தை மனக் குழப்பத்திற்குள்ளாக்கியது.

SINGARAM
சிங்காரத்தை நம்பியும் சில பேர் இருக்காங்கள்ள.

மணி பேச்சை நிறுத்திவிட்டு சிங்காரத்தின் கண்களை பார்க்கிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

SINGARAM (CONT'D)
பின்னே என்ன, சார். ஸ்காட்ச் குடிக்குறதும்,
காய்ச்சி குடிக்குறதும் ஒன்னாயிடுமா?
(...)
ஒவ்வொருத்தருக்கும் ஒரு டேஸ்டு. டேஸ்டுக்கேத்த
மாதிரி நான் தான அனுப்பி வைப்பேன்.

அழுத்தி கொண்டிருந்த பேனாவை நிறுத்தி சின்னையா பேச தொடங்குகிறான்.

CHINNAIAH
(sternly)
எங்கப்பாவுக்கு நேத்து அனுப்பி வச்சியே, அது
மாதிரியா?

அதிர்ச்சியடைந்த சிங்காரம் திரும்பியபடி சின்னையாவை பார்க்கிறான்.

SINGARAM
(sotto)
என்ன சொல்றீங்க?

CHINNAIAH
நீதான அனுப்பி வச்சே?

SINGARAM
அய்யா கேட்டு, நான் எப்படி இல்லைன்னு சொல்ல
முடியும்?

இரயில்வே கேட்டின் முன்னால் கார் நிற்க்கிறது. சீறிப்பாய்ந்து வந்து கொண்டிருக்கும் ஒரு இரயில் வண்டியின் சப்தம் கேட்க தொடங்குகிறது.

CHINNAIAH
யார் அவ?

சிங்காரத்தின் கண்கள், சின்னையாவையும் அவன் கையில் வைத்திருக்கும் பேனாவையும் பார்த்தபடி அலைந்துக்கொண்டிருக்கிறது.

SINGARAM
அது வந்து...

பேனாவின் அழுத்தல் சத்தம், அவன் பேச்சை பின்தொடர்கிறது.

CHINNAIAH
என்ன வயசு?

சிங்காரத்தினால், பிடி கொடுக்காமல் பேசியும் நழுவ முடியவில்லை.

SINGARAM
(sotto)
ஒரு பன்னிரெண்டு...பதிமூன்று இருக்கும்.

(CONTINUED)

CONTINUED: (3)

CHINNAIAH
என்னது?

SINGARAM
(clears his throat)
கரெக்டா தெரியலை, சார்.

CHINNAIAH
(cuts in)
அங்க என்ன நடந்துச்சுனாவது தெரியுமா?

SINGARAM
(confused)
எனக்கு எதும் தெரியாது. கூட போனது ரேகா தான்.

விபரங்களை கேட்ட சின்னையா, பேனாவை அழுத்திக்கொண்டிருந்த செயலை நிறுத்துகிறான்.

SINGARAM (CONT'D)
சின்ன பொண்ணுதானு... அவளையும் கூட அனுப்பி வச்சேன்.

CHINNAIAH
(resumes the click)
இப்போ அவங்க எங்க?

SINGARAM
இதோ...

கையில் அணிந்திருந்த கடிகாரத்தை பார்த்தபடி அவனின் கைப்பேசியில் ரேகாவை அழைக்கிறான். எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை. இரயில் வண்டி மிக வேகமாக அவர்களை கடந்து செல்கிறது.

மூடப்பட்டிருந்த இரயில்வே கதவுகள் திறக்கப்படுகிறது.

SINGARAM (CONT'D)
எடுக்கலையே.

திடீரென தன் கையில் வைத்திருக்கும் பேனாவை சிங்காரத்தின் கால்களில் சொருகுகிறான், சின்னையா.

என்ன நடந்திருக்கிறது என்று தெரியவே அவனுக்கு சில நொடிகள் ஆயின. சிங்காரத்தின் தொடை தசையில் அந்த பேனா மிக ஆழமாக ஊடுருவி நின்றுக்கொண்டிருந்தது.

SINGARAM (CONT'D)
ஆ.....!! ஆஆ...!

பொறுத்துகொள்ள முடியாத வலியுடன் தன் காலை பிடித்து கொள்கிறான், சிங்காரம்.

**EXT. RAILWAY GATE - NIGHT (CONTINUING ACTION)**

நிறுத்தப்பட்ட காரின் வெளியே சிங்காரம் வீசப்படுகிறான். உருண்டு விழுந்த சிங்காரம் தன் தொடையை பிடித்தபடி வலியில் கத்துகிறான்.

SINGARAM
ஆ....!

காரினுள் இருந்த சின்னையா, சிங்காரத்தின் பக்கம் திரும்பி, அவன் கண்களை உற்றுப் பார்க்கிறான்.

CHINNAIAH
அந்த ரெண்டு பேர் எனக்கு வேணும்.

மழை பெய்ய தொடங்குகிறது.

CHINNAIAH (CONT'D)
இருபத்தி நாலு மணி நேரம். உன் உயிர்...உன் கையிலே.

காரின் கதவுகள் மூடப்பட்டு, அந்த இடத்திலிருந்து கிளம்பியது.

CUT TO:

**INT. SALOON - NIGHT**

ப்ரியா, ஷில்பா, ஆல்பர்ட் மூவரும் சலூனில் நின்று கொண்டிருக்க, சிங்காரத்தின் காலில் சொருகியிருக்கும் பேனாவை பார்வையிடுகிறார் ஒரு மருத்துவர்.

வித விதமான மருத்துவ கருவிகள், கவுன்டரின் மேலே பரப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

SINGARAM
(into phone)
ஆமா அண்ணே...ரேகா...ம்ம் ரேகா தான்...
...அங்க வந்தாளா அண்ணே? என்னது?
(to the doctor)
...டேய் டேய் டேய்...
(back on the phone)
இல்ல அண்ணே..உங்கள இல்ல...இங்க...

கருவியை தேடியப்படி மருத்துவரின் கைகள் இறுதியாக ஒரு கொரடின் பக்கம் வந்து நிற்க்கிறது.

SINGARAM (CONT'D)
பாக்கலையா? கொஞ்சம் விசாரிச்சு பாருங்க அண்ணே...சரி-ன..சரி வச்சிடுரேன்.

கொரடின் உதவியால் பேனாவை வெடுக்கென்று பிடுங்குகிறார்.

CONTINUED:

SINGARAM (CONT'D)
(screams)
ஆஆஆஆஆஆஆ.......!

MATCH CUT TO:

**INT. GANESH LODGE, PIMP'S ROOM - NIGHT**

வயதான ஒரு விபச்சார தரகரின் விறைகளை, இருக்கமாக பிடித்து அழுத்திக்கொண்டிருக்கிறான் சிங்காரம்.

OLDER PIMP
ஐயோ...ஐயோ... இதுக்கு அப்பறமும் நான் ஏன்யா பொய் சொல்ல போறேன்... ரேகா இங்க வரலை யா. கை-ய எடு-யா.

மெதுவாக பிடியை தளர்த்தினான் சிங்காரம்.

SWISH CUT:

**INT. POLICE STATION - NIGHT**

சிங்காரம் ஒரு காவலாளியை தன் கைப்பேசியில் தொடர்பு கொள்கிறான்.

SUB-INSPECTOR
சிங்கரம், ஈ.சி.ஆர் சைட்ல எந்த ரெய்டும் நடக்கலையா.

சில குறிப்புகளை எழுதுவதற்காக ஒரு பேப்பர் மற்றும் பேனாவையும் எடுக்கிறார்.

SUB-INSPECTOR (CONT'D)
ச்..! சரி. பொண்ணு பேரு என்ன? ம்ம்.. ரேகா தானே? என்னால என்ன பண்ண முடியும்னு பாக்குறேன். வை.

படாரென்று தொலைபேசியை வைத்தபடி, குறிப்புகள் எழுதிய காகித்தத்தை குப்பையில் போடுகிறார் அந்த காவலாளி.

**EXT. GANESH LODGE, WALL - NIGHT**

சிங்காரம் சுவற்றில் காலை வைத்தபடி தொலைபேசியை நெற்றியில் தட்டியபடி யோசிக்க தொடங்குகிறான். 'ஆப்னா தேஷ்' என்கிற படத்திலிருந்து 'துனியா மேய்ன் லாகான் கோ' என்ற பாட்டு கேட்க தொடங்கியது.

**EXT. STREET - NIGHT**

அரக்கு நிற பஜாஜ் எம்-80யை ஆல்பர்ட் ஓட்டிக்கொண்டிருக்க, அவனுக்கு பின்னால் கவலையுடன் சிங்கரம் அமர்ந்திருக்கிறான்.

**INT. CABRET JOINT - NIGHT**

அதிக சப்ததுடன் டிஸ்கோ இசையின் ஒலி கேட்கதொடங்கியது. இரவில் நடக்கும் கூத்தாட்ட கிளப்பில் ஆடும் பெண்களின் நிழற்வடிவம் தென்படுகிறது. அதிக சத்தத்தினால் கேட்க முடியாமல் அவ்விடத்தின் நிர்வாகி, சிங்காரத்தின் பேச்சிற்க்கு காது கொடுக்கிறான். முடியாது என்று அந்த நிர்வாகி கூற, சிங்காரம் அவ்விடத்திலருந்து வெளியே தள்ள படுகிறான்.

**EXT. CABARET JOINT - NIGHT**

சிங்காரம், ஆல்பர்ட் இருவரும் அடித்து வெளியே தள்ளப்படுகிறார்கள். கைகளை உதறியபடி பார்க்க, சிவப்பு விளக்குடன் ஒரு அம்பாஸிடர் கார் நின்று கொண்டிருக்கிறது.

**EXT. BRIDGE - NIGHT(SERIES OF SHOTS)**

ஸ்கூட்டரை ஓட்டி கொண்டு சிங்காரம், ஆல்பர்ட் இருவரும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்காரத்தின் கைப்பேசி அடிக்கத் தொடங்கியது.

**INT.  MASSAGE PARLOR - NIGHT**

ஒரு மசாஜ் பார்லரின் ஒரு ஓரத்தில், வரிசையாக சில அறைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேளை பார்க்கும் ஒரு பெண் சிங்காரத்திடம் தலையை ஆட்டுகிறாள். ஒரு இளமையான பெண்ணும் ஆணும் கை கோர்த்து செல்வதை ஆல்பர்ட் பார்க்கிறான்.

**EXT. STREET CORNER - NIGHT**

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பஜாஜ் எம்-80யில் அமர்ந்தபடி, தனக்கு உண்டாகி இருக்கும் காயத்தை பார்க்கிறான் சிங்காரம். தன் கைப்பேசியில் யாரையோ அழைக்க தொடங்குகிறான். பின்புறம் பார்த்தால், ஆல்பர்ட் ஒரு சிலரிடம் விசாரித்து கொண்டிருக்க, அவனின் கைப்பேசி அடித்து கொண்டே இருந்தபடி காணப்படுகிறாது.

**EXT. DOOR WITH PEEP HOLE - NIGHT**

பொட்டு சேட்டு என்று பெயரிடப்பட்ட ஒருவன், தன் நெற்றியில் பெரிய பொட்டுடன் பட்டு உடை அணிந்து காணப்படுகிறான். வாயினுள் புகையிலையை மென்றுக் கொண்டிருக்க, கதவை சாத்துவதற்க்கு முன்னால், சிங்காரத்தை பார்த்து முறைக்கிறான்.

(CONTINUED)

CONTINUED:

சிங்காரம் மற்றும் ஆல்பர்ட் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து கொள்கின்றனர்.

FADE TO BLACK.

ஸ்கூட்டரை உதைத்து ஆல்பர்ட் ஸ்டார்ட் செய்ய, சிங்காரம் அவனை நோக்கி வருகிறான்.

SINGARAM
டேய், இன்னும் ஒரு தடவை கால் போடுறா. எடுக்குறாளானு பார்க்கலாம்.

ஆல்பர்ட் தன் கைப்பேசியை வெளியே எடுக்கிறான்.

CUT TO:

**INT. TRAIN - NIGHT (CONTINUING ACTION)**

மிக கூட்டமான ஒரு இரயில் பெட்டியினுள் அனைவரும் தூங்கியபடி இருக்கிறார்கள்.

கதவின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த பழக்கூடையும், கோணி பைகளுக்கும் அப்பால், நந்தினியும் ரேகாவும் மிக நெருக்கமாக அமர்ந்திருக்கின்றனர். தூக்கத்தால் சொக்கத் தொடங்குகிறது நந்தினியின் கண்கள்.

தன் கைப்பேசியின் பேட்டரி உறையை அவிழ்த்து, உள்ளே இருந்த சிம் கார்டை, இரயில் ஜன்னல் வழியாக தூக்கி எரிகிறாள்.

SINGARAM (V.O.)
என்ன? அடிக்குதா?

ALBERT (V.O.)
சுவிட்ச்-ஆஃப் பண்ணிட்டா, பாஸ்.

SINGARAM (V.O.)
என்னது?

CUT BACK TO:

**EXT. DOOR WITH PEEP HOLE - NIGHT (CONTINUING ACTION)**

கைப்பேசியை பிடுங்கி தன் காதில் வைத்து கேட்கிறான், சிங்காரம்.

SINGARAM
சுவிட்ச் ஆஃப் ஆ? முண்ட, வேணும்னே பண்றா டா.

சில நொடிகளுக்கு அப்பால்,

(CONTINUED)

CONTINUED:

SINGARAM (CONT’D)
(sotto)
எங்கடா போய் தொலைஞ்சிருப்பா?

ஆல்பர்ட் தலை சாய்க்கிறான்.

ALBERT
தெரியல பாஸ். ஒரு வேல பாம்பே கீம்பே போயிருப்பாளோ.

SINGARAM
ச்ச ச்ச..என்னடா பேசுற?

ALBERT
(yawns)
பாம்பே ஒன்னும் அவளுக்கு புதுசு இல்ல பாஸ். பண கஷ்டம், கூட வேற ஒரு குட்டி பொண்ணு. கூட்டிட்டு போய் வித்திடலாம் இல்ல?

ஆல்பர்டின் சட்டையை பிடித்து இழுக்கிறான் சிங்காரம்.

SINGARAM
டேய், என்னடா சொல்ற?

ALBERT
(matter of factly)
பாஸ், நானா இருந்தா அதான் செய்வேன்.

சிங்காரம் தெளிவாக அந்த சூழ்நிலையை புரிந்து கொள்கிறான்.

SWISH CUT:

**EXT. RAILWAY STATION - NIGHT**

காலையில் சரியாக 6 மணியளவில்.

SWISH CUT:

**INT. RAILWAY STATION, TICKET CAGE - NIGHT**

சிங்காரம், டிக்கெட் கவுன்டரினுள் எட்டிப் பார்க்கிறான்.

SINGARAM
பாம்பேக்கு காலையில ட்ரேயின் எதாவது போச்சா?

உள்ளே வேலை பார்க்கும் க்ளெர்க், அவனை பார்க்கிறார்.

(CONTINUED)

CONTINUED:

CLERK
அஞ்சரை மணிக்கு, பாம்பே மெயில். ஆன் டைம். கிளம்பிடிச்சு.

ALBERT
பாஸ், இப்ப என்ன பண்றது?

பற்களை கடித்தபடி கால்களால் நொண்டியடித்துக்கொண்டு பதட்டத்துடன் காணப்படுகிறான், சிங்காரம்.

**INT. TRAIN - EARLY MORNING**

ரேகா, நந்தினி உட்கார்ந்திருக்க, அவர்களுக்கு அருகே வயதாகிய ஒரு பெண், வாழைப்பழ குவியல்களுக்கு நடுவே அமர்ந்திருந்தாள்.

பயணச் சீட்டை சரி பார்க்கும் டி.டி.ஆர் அங்கே வருகிறார்.

TTR
டிக்கெட் கொடுங்க?

பயண சீட்டுகளை தன் மேலாடையில் வைத்திருந்த ரேகா, அதை எடுத்து டி.டி.ஆர் இடம் கொடுக்கிறாள், டி.டி.ஆர் அதை வாங்கி சரி பார்க்கிறார்.

TTR (CONT'D)
இங்க உக்காற கூடாது மா. அடுத்த ஸ்டேஷன்ல சீட் எதாவது காலி ஆகும், உள்ள போய் உட்காறுங்க.

சரி பார்த்த பயணச் சீட்டுகளை, ரேகாவிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து செல்கிறார்.

நந்தினி மிகவும் பசியுடன் இருக்கிறாள்.

NANDHINI
இன்னும் ரொம்ப நேரம் ஆகுமா?

REKHA
ஆமா.

நந்தினி பெருமூச்சு விடுகிறாள்.

NANDHINI
(sotto)
பசிக்குது.

REKHA
அடுத்த ஸ்டேஷன்ல எதாவது சாப்பிடலாம். பேசாம படுத்து தூங்கு.

பசியால் தன் வயிற்றை பற்றிக் கொள்ள, அருகே அமர்ந்திருந்த அந்த வயதாகிய பெண், நந்தினியை பார்க்கிறாள்.

(CONTINUED)

CONTINUED:

OLD LADY
இந்தா பாபா. பழம் எடுத்துக்கோ.

அந்த பெண் ஒரு வாழை பழத்தை நந்தினியிடம் எடுத்து கொடுக்க, நந்தினி அதை வாங்கி கொள்வதா வேண்டாமா என்று தெரியாமல் ரேகாவை பார்க்கிறாள்.

OLD LADY (CONT'D)
அம்மா ஒன்னும் சொல்லாது. நீ சாப்பிடு.

ரேகா சம்மதம் தெரிவிக்கிறாள்.

NANDHINI
(whispers)
அந்த பாட்டி உன்ன போய் என் அம்மானு நெனைச்சிட்டு இருக்காங்க.

நந்தினியின் சிரிப்பு ரேகாவிற்க்கு புதிராய் இருந்தது.

REKHA
அதுல என்ன சிரிப்பு?

NANDHINI
இல்ல, என் அம்மா எவ்வளவு அழகா இருப்பாங்க தெரியுமா.

REKHA
உன் அம்மா இப்ப எங்க இருக்காங்க?

இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து கொண்டிருக்க. நந்தினி தனக்கு தூக்கம் வருகிறது என்று கொட்டாவி விட்ட படி நடிக்கிறாள்.

NANDHINI
எனக்கு ரொம்ப தூக்கம் வருது.

ரேகாவிடம் இருந்து திரும்பி, அருகே இருந்த கதவில் சாய்ந்து கொள்கிறாள். அவளின் மனது, எங்கோ இருக்க, கண்கள் இரண்டும் துறந்தபடி காணப்பட்டது.

CUT TO:

**INT. LANKAN'S HOUSE - EARLY MORNING**

சுமார் 40 வயதிருக்கும், லங்கன். தனது கைப்பேசியில் யாரிடமோ மிகவும் முக்கியமாக பேசி கொண்டிருக்கிறான்.

அவனின் மேஜையில் இருக்கும் விபரத் தாளைப் பார்த்தால், ஹாக் ஐ டிடெக்டிவ் ஏஜென்ஸி என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறான் என்று தெரிகிறது.

இவன் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் எடுக்கப்பட்டிருந்த புகை படங்கள், ஆங்காங்கே அவ்விடத்தில் தொங்க வைக்கப்பட்டிருக்கிறது.

(CONTINUED)

CONTINUED:

LANKAN
(on phone)
யோவ். இவ்ளொ நேரம் நான் என்ன கதையா சொல்லிட்டு இருக்கேன்? இப்பொ நீ எங்கிருக்க, மாயா ஓட என்ன பண்ணிட்டு இருக்கே..எல்லாத்தையும் அழகா படம் புடிச்சி வச்சிருக்கேன். மேட்டர் என்னனா, இத உன் வைஃபுக்கு அனுப்பட்டுமா வேண்டாமா?

பின்னால் தொங்கிக்கொண்டிருந்த அவனின் சட்டையில் ஒரு பூச்சி நின்று கொண்டிருக்கிறது, அதை பார்த்த லங்கன், அந்த பூச்சியை சுண்டி விட்டான்.

LANKAN (CONT'D)
(a brief silence)
ம்ம்..சரி...சரி.. ஃபோட்டொ ஓட ஒரு பையன அனுப்பி வெக்கிறன், நம்ப பேசின அமௌன்ட செட்டில் பண்ணிடு. உன் வைஃபுக்கு நீ க்ளீன்னு ஒரு சர்ட்டிஃபிகேட் நான் கொடுத்துடுரேன்.

பேசி முடித்த லங்கன், தன் கைப்பேசியிலிருந்து மற்றொரு நம்பருக்கு அழைக்கிறான்.

LANKAN (CONT'D)
(to assistant)
டேய், நான்தான்டா. தூங்குறியா? சரி சரி...தூங்கு..காலையில போய் அவன்கிட்ட ஃபோட்டொ கொடுத்திட்டு பணத்த வாங்கிடு. எல்லாம் பேசிட்டேன்.
(beat)
அதான்டா, அந்த மாயா மேட்டரு.

யாரோ கதவை தட்டிய சப்தம் கேட்க, லங்கன் கதவை நோக்கி செல்கிறான்.

LANKAN (CONT'D)
அப்படியே அந்த ஃபோட்டோவ இன்னொரு காப்பி போட்டு, அவன் பொண்டாட்டிகிட்டயும் கொடுத்துடு. தொழில நேர்மை ரொம்ப முக்கியம் இல்ல? ம்ம்..என்ன கரெக்ட்டா.

திறந்து பார்த்தால் சிங்காரம் காயமடைந்த காலுடன் மழையில் நனைந்தபடி நின்றுக்கொண்டிருக்கிறான்.

LANKAN (CONT'D)
சிங்காரம்? என்ன இந்த நேரத்தில?

SINGARAM
ஒரு முக்கியமான மேட்டர் ஒன்னு பேசனும். உள்ள வரலாமா?

சிங்காரத்தின் கால்களை பார்த்த லங்கன், தலையை வெளியே நீட்டி நோட்டம் விடுகிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

LANKAN

**EXT. LANKAN'S HOUSE - EARLY MORNING**

சிங்காரம் உள்ளே செல்ல, லங்கன் மெதுவாக கதவை மூடுகிறான்.

**EXT. TRAIN - EARLY MORNING**

சென்று கொண்டிருக்கும் இரயில் வண்டி.

**INT. TRAIN - EARLY MORNING**

நந்தினி ரேகாவின் தோளில் தன் தலையை வைத்து சாய்ந்து கொண்டிருக்க, மெதுவாக நகர்ந்தபடி நந்தினியை இதமாக்குகிறாள்.

ரேகாவின் நினைவுகள் எங்கோ செல்ல, இரயில் வண்டி ஆடியபடி சென்றுகொண்டிருக்கிறது. தெளிவற்ற சப்தங்கள் அவளின் நினைவில் வளர்ந்து கொண்டே செல்கிறது.

MATCH CUT TO:

**INT. REKHA'A HOUSE, OUTSIDE DOOR - NIGHT (FLASHBACK)**

வீட்டின் கதவுகளை பூட்டிவிட்டு, எதொ இருண்ட பாதையில் செல்கிறாள். சிமெண்ட் தரையில் நடந்து கொண்டிருக்க அவள் காலனிகள் தேய்வு சப்தங்களை உண்டாக்குகிறது.

**EXT. STREET - NIGHT (FLASHBACK)**

ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு தெருவில், கையில் ஒரு குடையுடன் நடந்து கொண்டிருக்கிறாள் ரேகா. மழைத் துளிகள் அவளின் முகத்தில் விழுவதை பெரிதாக எடுக்காமல் அதை துடைத்துவிட்டு, மீண்டும் நடக்க தொடங்குகிறாள்.

வெளிச்சமான ஒரு தெரு அவளுக்கு முன்னால் தெரிய, ஒரு கான்டஸ்ஸா கார் வளைவில் திரும்பி அவள் பக்கத்தி வந்து மெதுவாக நின்றது. ரேகா சந்தேகத்துடன் பார்க்கிறாள். காரின் கண்ணாடிகள் கீழே இறங்க, உள்ளே பார்த்தால் சிங்காரம்.

SINGARAM
என்ன ரேகா? சௌக்கியமா?

உள்ளே இருப்பவர் யார் என்று தெரிந்தும், அவள் மீண்டும் நடக்க தொடங்குகிறாள்.

REKHA
சிங்காரம்...நீயா?

அருகே, அந்த கார் அவளுடன் ஊற ஆர்ம்பிக்கிறது.

(CONTINUED)

SINGARAM
நானேதான். நம்பர் மாத்தியாச்சு, வீட மாத்தியாச்சு. இருந்தாலும் அய்யா கண்டு பிடிச்சிட்டேன் பாத்தியா?

REKHA
அதிசயமா இருக்கு. என்ன திடீர்னு, இத்தன வருஷம் கழிச்சு?

சிங்காரத்தின் முகத்தில் புன்சிரிப்பு.

SINGARAM
வண்டில ஏறுரது.

REKHA
இல்ல, நான் கொஞ்சம் அவசரமா போய்ட்டிருக்கேன்.

SINGARAM
அட, வந்து ஏறு ரேகா. கணேஷ் லாட்ஜுக்கு தான? நான் ட்ராப் பண்றேன் வா.

**I/E. CONTESSA, STREET - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

முதலில் ரேகா தயங்கியபடி நிற்க, மழையின் காரணத்தால் வேறெதுவும் யோசிக்காமல் சுற்றிவந்து காரின் முன் பக்கத்தில் ஏறிக்கொள்கிறாள்.

கார் கண்ணாடிகளை மூடுகிறான் சிங்காரம்.

SINGARAM
பாம்பேலருந்து வந்தியே, ஒரு தடவயாவது என்ன வந்து பாக்கனும்னு தோணுச்சா.

REKHA
ஏன் கேக்க மாட்ட? வண்டி எடு.

சிங்காரம் அவளை பார்க்கிறான்.

SINGARAM
உன்ன இந்த மாதிரி பாக்குறதுக்கு பாவமா இருக்கு, ரேகா.
(sighs)
எப்படி இருந்த ஆளு, நீ? போனது பென்ஸ்-ல, பிஸினஸ் தாஜ்-ல. பப் என்ன, டிஸ்கோ என்ன?

REKHA
பழைய கதையெல்லாம் எதுக்கு இப்பொ? எனக்கும் வயசாகுதில்ல?

CONTINUED:

SINGARAM
அதுக்காக? இன்னும் எத்தன நாளுக்கு இப்படி? நூத்துக்கும், அம்பதுக்கும்? என்ன பாத்தியா? காலத்துக்கு ஏத்த மாதிரி தொழில மாத்திட்டு போய்டே இருக்கனும்.

கியரை குறைத்து காரை மெதுவாக ஓட்டுகிறான்.

SINGARAM (CONT'D)
இப்பவும் ஒன்னும் கெட்டு போகல. கைல சம்ம மேட்டர் ஒன்னு இருக்கு. நீ மட்டும் மனசு வெச்சா, லைஃபே மாறிடும்.

REKHA
(sarcastic)
யாருக்கு? எனக்கா. உனக்கா?

SINGARAM
ரெண்டு பேருக்கும் தான். உனக்கும் பணம், எனக்கும் பணம். லைஃப்ல நினைச்சு பாக்க முடியாத அமௌன்ட். நிம்மதியா செட்டில் ஆயிடலாம்...என்ன சொல்ற?

REKHA
நான் என்ன பண்ணனும்?

SINGARAM
உனக்கு பெரியையா தெரியுமா?

REKHA
யாரு, இந்த பீர் ஃபேக்ட்டரி...எல்லாம் வச்சிருக்காரெ? அவரா?

SINGARAM
(nods)
அவருக்கு... ஒரு பொண்ணு வேணுமாம்.

REKHA
அவருக்கா? நானா?

SINGARAM
(chuckles)
ம்ம்..அவர் என கணேஷ் லாட்ஜ் கஸ்டமர்னு நினச்சிட்டியா?

ரேகா கடுப்போடு சிங்காரத்தை பார்க்கிறாள்.

SINGARAM
(change tone)
பெரியையா ஓட டேஸ்டே வேற. அவருக்கு தேவை, பத்துலேர்ந்து, பன்னன்டு வயசு.

(CONTINUED)

CONTINUED: (2)

REKHA
என்ன, தத்து எடுக்க போறாரா?

SINGARAM
நக்கலு?

REKHA
பன்னன்டு வயசுனா, அது குழந்த; பொண்ணு
இல்ல.

SINGARAM
இருந்துட்டு போட்டும், குடுக்கிற அமௌன்டே
வயசுக்கு தான்.

REKHA
அப்போ நான் எதுக்கு?

SINGARAM
(smiles)
பொண்ண பிடிச்சு தரதே நீ தானே, டார்லிங்க்.

ரேகாவின் முகம் மாறுகிறது.

REKHA
எனக்கு அந்த மாதிரி பொண்ணு யாரையும்
தெரியாது.

சின்ன ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்து, தன் உதட்டிற்க்கு ஆடம்பரமாக தோற்றமளிக்கும் சாயத்தை போட்டு கொள்கிறாள்.

REKHA (CONT’D)
(looks him in the
eye)
கணேஷ் லாட்ஜ் வந்திருச்சு. வண்டிய நிறுத்து.

சிங்காரம் காரை நிறுத்துகிறான்.

SINGARAM
பொண்ண தெரியலனா என்ன ரேகா?
உனக்கு தான் துரைசிங்கத்த தெரியுமே.
அவன்கிட்ட கேளு.

வெறுக்கத்தக்க பார்வையுடன் சிங்காரத்தை பார்க்கிறாள் ரேகா.

REKHA
(after two beats)
அதான பாத்தேன். நீ என்ன தான் பேண்ட்
போட்டு, குறுந்தாடி வச்சாலும், உன் புத்தி மாறல,
சிங்காரம்.

(CONTINUED)

CONTINUED: (3)

SINGARAM
பிஸினஸ் பேபி. நம்ம என்ன பேங்கலயா லோன் போட முடியும்?

பேசுவதை நிறுத்திவிட்டு கையில் இருந்த கண்ணாடியை பையினுள் வைக்கிறாள்.

REKHA
என்னால துரைசிங்கத்தலாம் போய் கேக்க முடியாது. வேற எதாவது வேல இருந்தா சொல்லு.

SINGARAM
(off her look)
என்ன ரேகா? பொழைக்க தெரியாத ஆளா இருக்க. உனக்கு புரியற மாதிரி ஒரு கதை சொல்றேன்... கேளு. ஒரு ஊர்ல ஒரு ராஜா...

**EXT. GANESH LODGE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

ரேகா கணேஷ் லாட்ஜை நோக்கி நடந்து கொண்டிருக்கிறாள்.

SINGARAM (V.O.)
...இருந்தான்.

**INT. GANESH LODGE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

முன்னாள் பார்த்த முதுமையான விபச்சார தரகர், அறையின் சாவிகளை சுண்டிவிடுகிறான். அதை எடுத்து கொண்டு அவ்விடத்திலிருந்து செல்கிறாள் ரேகா.

SINGARAM (V.O.)
அந்த ராஜா ஆசையா ஒரு நாய வளத்தானா.

**INT. GANESH LODGE, STAIRWELL - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

லாட்ஜின் அசுத்தமான படிகட்டுகளில் ஏறுகிறாள் ரேகா.

SINGARAM (V.O.)
அந்த நாய்னா அவனுக்கு ரொம்ப உயிராம்..

**INT. GANESH LODGE, CORRIDOR/ROOM - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

ரேகா ஒரு அறைகுள் செல்கிறாள்.

CONTINUED:

SINGARAM (V.O.)
ஒரு நாளு அந்த ராஜா, அந்த நாயோட
வேட்டையாட காட்டுக்கு போனானா.

SERIES OF SHOTS

அ. ரேகா, தன் முகத்தில் வண்ணம் பூசிக் கொண்டு தயாராகுவது, அழுக்கான கண்ணாடியின் எதிரொளியில் தெரிகிறது.

SINGARAM (V.O.)
போனவன், வேட்டயாடுற சோக்குல, காட்ல வழி
தெரியாம தொலஞ்சு போயிட்டானா.

...பார்ப்பதற்க்கே அறுவருப்பாக இருக்கும் ஒரு மெத்தையின் ஓரத்தில் சென்று அமர்கிறாள்.

ஆ. கண்ணாடியின் வழியாகவே பார்த்துக் கொண்டிருக்க, பயங்கர குண்டான ஒரு மனிதன் தன் உதட்டை நக்கி கொண்டு உள்ளே நுழைந்து, சில நேரம் கழித்து அவர் வெளியே செல்கிறார்.

SINGARAM (V.O.)
மூணு நாள் தேடியும், அவனுக்கு திருப்பி வர வழி
கண்டு பிடிக்க முடியலயாம்.

இ. இன்னொரு வாடிக்கையாளர், சந்தர்பத்தை பயன்படுத்தி கொள்வதற்காக அறைகுள் போக, எல்லாம் முடிந்தவுடன், சில நேரம் கழித்து அவரும் வெழியே செல்கிறார்.

SINGARAM (V.O.)
பசி வேற அவன் கண்ண கட்டுச்சு...

ஈ. மூன்றாவதாக ஒரு வாடிக்கையாளர் உள்ளே செல்கிறார்..

SINGARAM (V.O.)
உயிரே போயிடும் போல இருந்தது அவனுக்கு.

**EXT. GANESH LODGE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

சிங்காரம் மெதுவாக கைப்பேசியை தன் காதில் பக்கத்தில் கொண்டு வருகிறான். தூரமான ஒரு இடத்தில் ஒரு தொலைப்பேசி அடிக்க தொடங்குகிறது...

SINGARAM (V.O.)
அப்போ அவனுக்கு ஒரு யோசனை வந்துச்சாம்.

**INT. POLICE STATION - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

முன்னாள் பார்த்த அந்த காவலாளி தொலைப்பேசியில் தொடர்புகொள்கிறார்.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM (V.O.)
அப்படியே அந்த நாய திரும்பி ஒரு பார்வே பாத்தானாம்.

**EXT. POLICE STATION - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

சீறியப்படி ஒரு காவல் துறையினரின் வண்டி, வளாகத்திற்க்குள் வருகிறது.

SINGARAM
அதுவும் வால ஆட்டிகிட்டே அவன பாத்துச்சாம்.

**EXT. GANESH LODGE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

கணேஷ் லாட்ஜின் வெளியே அந்த காவல் துறையினரின் வண்டி வந்து நிற்கிறது. சுமார் நான்கு காவலாளிகள் லாட்ஜினுள்ளே செல்கின்றனர்.

**INT. GANESH LODGE, STAIRWELL - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

மிக வேகமாக படிகட்டுகளை ஏற தொடங்கினர்.

SINGARAM
கொன்ன பாவன் தின்னா போச்சுன்னு..

**INT. GANESH LODGE, CORRIDOR/ROOM - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION) (SERIES OF SHOTS)**

அ. காவலாளிகள் அவ்விடத்தை முற்றுகையிடுகின்றனர்.

ஆ. அங்கே இருந்த ஒரு காவலாளி கதவை தட்டுகிறார்.

இ. இரண்டாவதாக ஒருவர் மற்றொரு கதவை மிதித்து திறக்கிறார்.

ஈ. அங்கே இருந்த ஒரு பெண்ணை அறையின் வெளியே இழுத்து வருகிறார் மற்றொருவர்.

**EXT. GANESH LODGE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

சிங்காரம் அவ்விடத்தை பார்த்து கொண்டிருக்க, சில பெண்களை கீழே இழுத்து வந்து, காவல் துறையனரின் வண்டியில் தள்ளுகின்றனர்.

அவர்களில் ஒன்றான ரேகா ஜீப்பின் உள்ளே தள்ளப்பட்டு, அவ்விடத்திலிரிந்து மிக வேகமாக செல்கிறது.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM (V.O.)
...உயிரா வளத்த அந்த நாய ஒரே போடு போட்டு அடிச்சு சாப்டானாம்.

இருளில் நின்றுக்கொண்டிருந்த சிங்காரம், வெளிச்சத்திற்க்கு வந்து புகை பிடிக்க தொடங்குகிறான்.

SINGARAM (V.O.)
இப்ப, அந்த ராஜா செஞ்சது சரியா, தப்பா?

சென்று கொண்டிருக்கும் ஜீப்பை பார்த்து தனக்குள் சிரித்து கொள்கிறான்.

**INT. POLICE STATION, CELL (FLASHBACK) (CONTINUING ACTION)**

காவல் நிலையத்தின் ஒரு அறையில் இன்னும் சில பெண்கலோடு ஒர் ஓரமாக அமர்ந்திருக்கிறாள் ரேகா.

REKHA (V.O.)
என்ன... இப்பொ நான் சரின்னு சொல்லனுமா?

**INT. POLICE STATION - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

உள்ளே வந்த சிங்காரம் மறைமுகமாக அந்த காவலாளிக்கு வணக்கம் இடுகிறான்.

SINGARAM (V.O.)
அது உன் இஷ்டம். ஆனா ஒன்னு...

**INT. POLICE STATION, CELL (FLASHBACK) (CONTINUING ACTION)**

அறையின் கதவுகள் திறக்கப்பட ரேகா அங்கிருந்து வெளியே வருகிறாள்.

SINGARAM (V.O.)
...இந்த உலகத்தில ரெண்டே பேருதான், ரேகா.

**INT. POLICE STATION - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

ஒரு பதிவு புத்தகத்தில் கையெழுத்திட்டபடி ரேகாவை பார்க்கிறான், சிங்காரம்.

SINGARAM
ஒன்னு ராஜா, இன்னொன்னு நாய்...

**EXT. POLICE STATION - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

வெளியே வந்த இருவரும் சிங்காரத்தின் காரை நோக்கி நடந்தனர்.

SINGARAM (V.O.)
...நீ அந்த ராஜாவா வாழ போறியா, இல்ல அந்த நாயா சாகப்போறியா?

காரினுள் ஏறிய சிங்காரம் ரேகாவின் கண்களை பார்க்கிறான்.

SINGARAM
நல்ல யோசிச்சு சொல்லு, நான் சலூன்ல தான் இருப்பன்.

சொல்லவந்ததை சொல்லிவிட்டு அங்கிருந்து செல்கிறான், சிங்காரம். நடந்ததையும், நடக்கவிருப்பதையும் யோசித்து கோண்டிருக்க ஒரு ஓரமாக கம்பளம் போர்த்தி கொண்டிருக்கும் முதுமையான பாட்டி ஒன்றை பார்க்கிறாள், ரேகா. அவளின் எதிர்காலம் கண்முன்னே தெரிகிறது.

**INT. REKHA'A HOUSE - NIGHT (FLASHBACK) (CONTINUING ACTION)**

என்ன செய்வதென்று தெரியாமல் ரேகா, தன் மெத்தையில் படுத்துக்கொண்டு சிங்காரம் சொன்னபடி யோசித்து கொண்டிருக்கிறாள். கூறை மின் விசிரி ஒன்று, மேல் நிலையில் சுற்றி கொண்டிருக்கிறது.

SINGARAM (CONT'D)
நம்ம தொழிலுக்கு சென்டிமென்ட் எல்லாம் வேலைக்காகாது ரேகா. வைரத்த உத்து பாத்தா, அதுவும் கரிகட்டதான்

விசிறியின் இலைப் பரப்புகள்...

WIPES TO:

**I/E. CONTESSA, STREET - DAY (FLASHBACK)**

சிங்காரம் ரேகாவும் அருகருகே அமர்ந்திருக்க கான்டஸா மெதுவா ஒரு தார் சாலையில் பயனித்து கொண்டிருக்கிறது.

REKHA
துரைசிங்கத்து கிட்ட என்னனு கேக்குறது? நான் அவன பாத்து ரொம்ப நாள் ஆயிடுச்சு, சிங்காரம்.

சிங்காரம், தான் காரின் டேஷ்போர்டில் இருந்த பண கட்டுகளை பார்த்து தலையை ஆட்டியபடி ரேகாவை பார்த்து தன்னம்பிக்கையுடன் சிரிக்கிறான்.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM
பொண்ணு ஒரு நாளைக்கு மட்டும் வேணும்னு
கேளு..உனக்குனா தருவான்.

காரின் ஜன்னல் வழியாக பார்த்து கொண்டிருந்தால் ரேகா. அவளின் முகம் மிக கவலையுடன் காணப்படுகிறது.

**EXT. DORAI SINGAM HOUSE, PORTICO - DAY (FLASHBACK)**

ஒடுக்கமான வழிநடை பாதை ஒன்று தெரியப்பட, அதன் மேல் நிலையில் பல வண்ணங்களில் பாலித்தீன் உறைகள், சூரிய வெளிச்சத்தை உள்ளே வரவிடாதபடி விரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த பாதையில் ரேகா போய்க்கொண்டிருக்க, அவளை பின் தொடர்ந்து சிங்காரமும் சென்றுக் கொண்டிருக்கிறான். குண்டர்கள் அதிகம் நிறைந்த அவ்விடத்தில், தெளிவற்ற சப்தங்கள் கேட்க தொடங்குகிறது.

எழிதாக சுட்டிக்காட்டும் வகையில் அவ்விடத்தில் இருந்த ஒரே பெண் ரேகா மட்டும் தான். அங்கிருந்த ஆட்கள் அவளை கூட்டிக்கொண்டு செல்ல, தொலைவாக கட்டிடம் ஒன்றை நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள். அவளை பின்தொடர்ந்த சிங்காரத்தை பார்த்த சிலர், சிறுபிள்ளை தனமாக சிரிக்கத் தொடங்கினர்.

இன்னொரு குண்டர்களின் கூட்டம் ஒரு ஓரமாக அமர்ந்தபடி அதிக சப்ததுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். 'பாம்பின் பிடி' என்ற ஒரு விளையாட்டு நடந்துகொண்டிருக்கிறது.

கீழே வைக்கப்பட்டிருக்கும் ஒரு பெட்டியை சுற்றி ஆட்கள் நின்று கொண்டிருக்க, அந்த பெட்டியை மிக கடுமையாக அடித்து, துறக்கப்படுகிறது,

பெட்டியின் உள்ளே பார்த்தால், கொடிய விஷம் வாய்ந்த கருநாகம் ஒன்று கோவத்துடன் சீறிக் கோண்டு தாக்குவதற்க்கு தயார் நிலையில் உள்ளது. சுருண்டு இருந்த அதன் உடம்பிற்க்கு நடுவே சின்ன சின்ன சோழிகள் போடப்பட்டிருந்தது. இந்த விளையாட்டு, உள்ளே போடப்பட்டிருந்த சோழிகளை பாம்பின் பிடியில் மாட்டாமல் எடுக்கவேண்டும்.

அந்த கொந்தளிப்பின் அருகே இருவரும் சென்றுக்கொண்டிருக்க, சிங்காரம் ஒருவரை கூப்பிடுகிறான்.

SINGARAM
அய்யா...

வயதான ஒரு அடியாள் திரும்பி பார்க்கிறான்.

SINGARAM (CONT'D)
நாங்க துரைசிங்கத்த பாக்க வந்திருக்கோம்.

மீண்டும் அந்த விளையாட்டிற்க்கு செல்ல கூச்சல் சப்தம் அதிகமாக தொடங்குகிறது.

(CONTINUED)

CONTINUED:

HENCHMAN
(at crowd, ignoring
singaram)
என்னடா? காலியா? தூக்கு தூக்கு, தூக்கிட்டு போ.

பாம்பினால் கொத்தபட்ட ஒருவனை தூக்கி செல்கிறார்கள். தற்காலிகமாக விளையாட்டு நிறுத்தப்படுகிறது.

HENCHMAN (CONT'D)
(back to singaram)
நீ யாரு?

SINGARAM
ரேகானு சொன்னா, அவருக்கு தெரியும்.

அங்கே வந்துகொண்டிருந்த துணிச்சல் வாய்ந்த ஒருவன் ரேகாவை கண்டு கொள்கிறான்.

DEVILISH GUY
என்ன ரேகா...
(beat)
...இவ்வளவு தூரம்?

SINGARAM (CONT'D)
அய்யாவ..

திரும்பியபடி இருவரையும் பார்த்து முறைக்கிறான்.

REKHA
அவர பாக்கனும்.

பேசிகொண்டே போக ஒரு அடியாளை பார்த்து தலையை ஆட்டுகிறான்.

DEVILISH GUY
(to henchman)
நம்ம ஆளுதான், ஒத்து.

தன்னை பின்தோடர சொல்கிறான்.

HENCHMAN
(to singaram)
நீ எங்கடா பொற? நில்லு

SINGARAM
(hesitatingly)
இல்ல..ரேகா..

HENCHMAN
அதான் போற இல்ல?

கூட்டத்தில் இருந்த ஒருவன் ஒரு அடியாளை பார்த்து கத்துகிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

SOMEONE
(to henchman)
அண்ண, இங்க ஒரு கை கொறையுது.

HENCHMAN
(to singaram)
போறியா?

திகைத்து போய் நிற்கிறான் சிங்காரம்.

**INT. DORAI SINGAM HOUSE, CHAMBER - DAY (FLASHBACK)**

அறை மிகவும் இருட்டாக இருக்க, மங்கலாக எறியும் விளக்கு ஒன்று ஒரு மூலையில் தொங்கி கொண்டிருக்கிறது. ரேகா உள்ளே கொண்டு வரப்படுகிறாள்.

விளக்கை கொஞ்சம் சரி செய்ய, உள்ளே ஒரு அழுக்கடைந்த அறை ஒன்றை பார்க்கிறாள், ரேகா. அதுதான் இந்த கோட்டையின் தலைமை அறை.

சுமார் நான்கு பேர் சுற்றி நின்றுக்கொண்டிருக்க, அவர்களுக்கு அப்பால் ஒரு பெரிய திரையின் உள்ளே, துரைசிங்கம் ஒரு வினோதமான முறையில் மிகவும் குண்டான ஒரு மனிதன் அமர்ந்திருக்கிறான். மருத்துவ சாதன பொருட்கள் அவனை சுற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அவனின் வடிவம் மட்டுமே தெரிய, பயங்கரமான குரலுடன் தன் பேச்சை தொடங்குகிறான்.

DORAI SINGAM
வா, ரேகா.

ரேகா முன்னே செல்வதற்க்கு தயங்குகிறாள்.

DORAI SINGAM (CONT'D)
பயப்படாத. பக்கத்துல வா.

மெதுவாக முன்னே நகர்கிறாள்.

DORAI SINGAM (CONT'D)
ம்ம்..இன்னும் கொஞ்சம்.

ஓரளவு அவன் பக்கத்தில் வந்து நிற்க, துரைசிங்கம் தன் எறிந்த கைகளை திறையை மெதுவாக திறந்து நழுவியப்படி ரேகாவை நோட்டம் விடுகிறான்.

DORAI SINGAM (CONT'D)
பாத்து ரொம்ப நாள் ஆச்சு. நல்லா இருக்கியா?

குனிந்த தலையை நிமுறாமல் அவன் கேட்கும் கேள்விக்கு தலையை சிமிட்டுகிறாள். அவள் துரைசிங்கத்தை பார்க்க நேறிட, திறந்து வைத்திருந்த திரையை கீழே விடுகிறான்.

CONTINUED:

DORAI SINGAM (CONT'D)
கூப்பிடாம நீயே வந்திருக்க.
(...)
என்ன விஷயம்?

REKHA
எனக்கு நீங்க ஒரு உதவி பன்னனும்.

DORAI SINGAM
என்ன வேணும், கேளு?

REKHA
ஒரு பொண்ணு...வேணும்.

சில மௌனமானா நொடிகளுக்கு பின்னால்...

DORAI SINGAM
பொண்ணா? என்னத்துக்கு?

REKHA
அது வந்து...

DORAI SINGAM
உனக்கே நல்லா தெரியும், நா லோக்கல்ல யாருக்கும் பொண்ண விக்குறது இல்ல.

REKHA
ஒரே ஒரு நாளைக்கு மட்டும்.

DORAI SINGAM
எதுக்கு? வெளிய நிக்குற மாமா பயலுக்கா?
(...)
என்னயும் அவன் தொழில செய்ய சொல்றானா?

ரேகா எந்த ஒரு பதிலும் கூறவில்லை.

DORAI SINGAM (CONT'D)
ராணி மாதிரி என் கூட இரு-ன. நீ என்னடா-னா இன்னும் இந்த கேடு கெட்ட நாய நம்பி சுத்திட்டு இருக்க.

REKHA
கொஞ்சம் யோசிச்சு சொல்லுங்க.

DORAI SINGAM
அவனலாம் நம்பி, நான் பொண்ண தரமுடியாது.

REKHA
எனக்காக பண்ணுங்களேன்?

CONTINUED: (2)

அவநம்பிக்கை சூழ்ந்த அவ்விடத்தில், ரேகாவின் சலுகை உள்ளே வர தொடங்கியது. அந்த சலுகையை மறுத்தான் துரைசிங்கம்.

DORAI SINGAM
ஆழம் தெரியாம கால விடுற ரேகா.

பையில் வைத்திருந்த பண கட்டுகளை எடுத்து அங்கிருந்த மேஜையின் மேல் வைக்கிறாள் ரேகா.

DORAI SINGAM (CONT'D)
உனக்கு நான் வெல பேசுர காலம் போய், இப்ப
எனக்கு நீ வெல பேசறியா?
(beat)
இருக்கட்டும்.
(to someone)
எவண்டா அங்க!

துணிச்சலுடன் தோற்றம் அளித்த அந்த அடியாள் பக்கத்தில் வருகிறான்.

DORAI SINGAM (CONT'D)
ரேகா என்ன பாக்க வரல...தொழில் பேச
வந்திருக்கா. கூட்டிட்டு போய் அவ கேக்குறத
குடுத்து அனுப்பு.

திரும்பியபடி கிளம்ப தொடங்கினாள் ரேகா.

REKHA
நான் கிளம்பட்டுமா?

DORAI SINGAM
பொண்ணு நாளைக்குல்ல வரனும்னு அவன்கிட்ட
தெளிவா சொல்லு. வரல! எனக்கு அவனும்
ஒன்னுதான், நீயும் ஒன்னுதான். பாத்து நடந்துகொ.

பணகட்டுகளை பார்த்துக் கொண்டிருந்த துரைசிங்கம் தெள்ள தெளிவாக ஒரு சில விஷயங்களை உணர்கிறான்.

CUT TO:

**I/E. AMBASSADOR, STREET - DAY (FLASHBACK)**

ரேகாவிம் கண்கள் கட்டப்படுகிறது. துரைசிங்கத்தின் அடியாள் காரை ஓட்ட தொடங்குகிறான்.

BLACK SCREEN(CONTINUOUS)

ஒரு சில சுறுசுறுப்பான தெருவின் வழியாக அந்த கார் சென்றுக்கொண்டிருக்கிறது. சென்றுக்கொண்டிருந்த கார் ஒரு வழியாக மூடி இருந்த இரயில்வே கதவின் முன் வந்து நின்றது. இரயில் வண்டி ஒன்று அவ்வழியாக சென்று கொண்டிருக்கிறது.

(CONTINUED)

CONTINUED:

கார் கிளம்புவதற்க்கு சில பிரச்சனை செய்த நிலையில், பின்னால் நின்று கொண்டிருந்த வாகனங்கள் அனைத்தும் கூச்சல் எழுப்ப தொடங்குகிறது.

INTER CUTS TO:

BLURRY FLASHES

1. கார் முக்கி கொண்டு செல்லும் ஒரு காட்சி.

2. வைப்பர் ப்ளேட்களின் வீசல்கள்.

3. ரேகாவின் கண்கள் கட்டப்பட்டது.

4. தூரத்திலிருந்து எடுத்த புகைப்படம் - தெருவின் வழியாக சென்றுக்கொண்டிருந்த காரை கண்காணிப்பது.

BACK TO BLACK

கதவுகள் திறக்கப்பட அதை திறக்கும் சப்தம் ஒன்று கேட்கிறது. மெதுவாக அங்கு வந்த கார், உள்ளே செல்கிறது.

**EXT. CROOKED HOUSE - DAY (FLASHBACK)**

அது ஒரு பாழடைந்த வீடு. காரின் உள்ளே இருந்தவர்கள் வெளியே இறங்கி அந்த வீட்டின் பழைய கதவுகளுக்கு அருகே விழிப்போடு செல்கின்றனர்.

கதவுகள் தட்டப்பட்டு சில நொடிகளுக்கு அப்பால், அங்கே பாதுகாப்பிற்காக இருந்த, சாமியார் என்ற ஒருவன் தன் வழுக்கைத் தலையை வெளியே நீட்டுகிறான்.

DEVILISH GUY
என்ன சாமி? இன்னும் கிளம்பலையா?

SAMIYAR
காலைலதான, ட்ரேய்ன்னு.

DEVILISH GUY
சரி ஒத்து.
(to rekha)
பாத்து குனிஞ்சி வா. தலைய கிலைய முட்டிக்காத.

தலையை குனிந்து, அந்த வழியாக நடந்து செல்கிறாள் ரேகா.

**INT. CROOKED HOUSE, DARK PASSAGE - DAY (FLASHBACK)**

மிகவும் குறுகலான அந்த வழி, படிகட்டுகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. வழியின் இருப்புறத்திலும் அறைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. காற்றோட்டமே இல்லாத ஒரு சிறிய அறைக்குள் செல்கின்றனர். அந்த அறைகுள் நாற்றம் மிக பலமாக இருக்கிறது.

CONTINUED:

DEVILISH GUY
இங்கே நில்லு, நான் போய் இட்டாறேன்.

தலையை சிமிட்டுகிறாள் ரேகா.

ரேகா உடன் வந்தவன் மட்டும் படிகட்டுகளை ஏறி மறைகிறேன். தனது மூக்கை மோடிக்கொண்டு கீழேயே நிற்க்கிறாள் ரேகா.

**INT. CROOKED HOUSE, UPSTAIRS - DAY (FLASHBACK)**

DEVILISH GUY
(shouts)
ஹே..எந்திரி எல்லாம்.

விளக்கின் ஸ்விட்ச்சை போட மங்களான ஒளி அந்த அறையை பிரகாசமாக்குகிறது.

சுமார் 9-இல் இருந்து 12 வயதுள்ள பெண் குழந்தைகள் அடைத்துவைக்க பட்டிருக்கிறார்கள். மிகவும் பயந்தும், குழம்பிச்யும் போய் இருக்கிறார்கள். உள்ளே சென்றவனின் உத்தரவுபடி அனைவரும் எழுந்து நிற்கிறார்கள்.

DEVILISH GUY (CONT'D)
உனக்கு என்ன தனியா சொல்லனுமா? வா வா வா.

அந்த குழந்தைகள் அனைவரும் வருசையில் நிற்க, அவர்களை கூர்ந்து பார்க்க தொடங்கினான்.

**INT. CROOKED HOUSE, DARK PASSAGE - DAY (FLASHBACK)**

சுவற்றில் சாய்ந்தபடி, தன் கண்களை மூடிகொள்கிறாள் ரேகா. இஷ்டமே இல்லாமல் செய்யும் இந்த செயல் அவளுக்கு பிடிக்கவில்லை.

**INT. CROOKED HOUSE, UPSTAIRS - DAY (FLASHBACK)**

அடியாள்- குழந்தைகளை வரிசையில் நிற்கும்படி கத்துகிறான்.

DEVILISH GUY
நீ என்ன செவுடா?

நின்றுக்கொண்டிருந்த குழந்தைகள் அனைவரையும் பார்த்துக் கொண்டே வர, ஒரு குழந்தையின் முன் நிற்கிறான்.

DEVILISH GUY (CONT'D)
(a beat later)
ஏய், நீ வா.

அவன் கூப்பிட அந்த குழந்தை கொஞ்சம் முன்னே வருகிறாள்.

(CONTINUED)

CONTINUED:

NEW ANGLE - MEDIUM(SLOW MOTION)

குழந்தையை இழுத்துக் கொண்டு அந்த அடியாள் அறைக்கு வெழியே வருகிறான். அவள் தான் நந்தினி.

**INT. CROOKED HOUSE, DARK PASSAGE - DAY (FLASHBACK)**

ரேகாவி கண்கள் நந்தினியை பார்த்துக்கொண்டே இருக்க, அந்த குழந்தை படிகட்டுகளிச் இறங்கி வருகிறாள்.

DEVILISH GUY
பாத்துக்கோ. இது நல்ல வெவரமான நண்டு.

REKHA
(noda)
ம்ம்.

DEVILISH GUY
இங்கே இரு. நா கார் ரெடி பண்ணிட்டு கூப்பிடுறேன்.

சொல்லிவிட்டு மிக அவசரமாக செல்கிறான்.

ரேகா, நந்தினி இருவரும் தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறார்கள். வறண்டு போன நந்தினியின் உதடுகள், சீவப்பெறாத அசுத்தமாக இருந்த முடி, ரேகாவை மிகவும் பரிவடைய வைக்கிறது.

வெறும் காலில் நின்று கொண்டிருந்த அவள் மண்ணில் தன் காலால் வரைய தொடங்குகிறாள்.

NANDHINI
என்ன பனியன் கம்பெனிக்கு கூட்டிட்டு போ போறீங்களா?

ரேகா தினறுகிறாள்.

REKHA
(hesitatingly)
இல்ல.

நந்தினியின் முகம் கொஞ்சம் வருத்ததுடன் காணப்பட்டது.

NANDHINI
அப்போ பட்டாசு ஃபேக்ட்ரியா?

ரேகா தன் தலையை சிமிட்டுகிறாள்.

NANDHINI (CONT'D)
அப்ப, வேற எங்க போ போறொம்?

(CONTINUED)

CONTINUED:

வெளியே சென்ற அந்த அடியாள் வரும் சப்தம் கேட்கத் தொடங்கியது. தலையை குனிந்தபடி நின்றாள் நந்தினி.

NANDHINI (CONT'D)
அய்யயோ அவன் வந்துட்டான்.

DEVILISH GUY
வா. கிளம்பு.

அந்த அடியாள் முன்னாள் போக, ரேகா நந்தினி இருவரின் கண்களும் கட்டப்பட்டு அவன் அருகாமையில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

CUT TO:

**EXT. BRIDGE - DAY (FLASHBACK)**

வேகமாக செல்ல தொடங்கும் அம்பாசிடர் கார். ரேகா, நந்தினி இருவரும் காரின் வெளியே இறங்குதல்.

BOOM DOWN TO REVEAL:

சிங்காரம் தன் கான்டஸா காரில் சாய்ந்து கொண்டிருக்க, ரேகா நந்தினியை கூட்டி கொண்டு சிங்காரத்தின் வருகிறாள்.

JUMP CUT TO:

**I/E. CONTESSA, BRIDGE - DAY (FLASHBACK)**

பின் இருக்கையில் நந்தினி அமர்ந்து கொண்டிருக்க, இருவரும் காரின் வெழியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

REKHA
எங்க கூட்டிட்டு போறேன்னு கேக்குறா.

SINGARAM
அதுக்கு நீ என்ன சொன்ன?

REKHA
என்னனு சொல்றது?

SINGARAM
லூஸ்ல விடு. பாத்துக்கலாம்.

REKHA
பொண்ண பாத்தா பாவமா இருக்கு, சிங்காரம்.

SINGARAM
ஏன், என்ன பாத்தா பாவமா இல்லயா? உள்ள குடுத்தியே காசு, அவ்வளவும் மீட்டர் வட்டி.

(CONTINUED)

CONTINUED:

REKHA
இல்ல, ரொம்ப சின்ன பொண்ணா இருக்கா..

SINGARAM
(frustrated)
எப்படியும் துரைசிங்கம் பாம்பேக்கு விக்கபோறான்
(beat)
பாம்பே போய் மட்டும் அவ என்ன, சாஃப்ட்வேர் கம்பெனிலியா வேல பாக்க போறா? அங்கேயும் இதே எலவு தான். என்ன, நீ ஒரு நாள் முன்னாடி கூட்டிட்டு வந்துட்டே.

REKHA
நா வேனுனா பொண்ண திருப்பி குடுத்திட்டு காச வாங்கிட்டு வரவா?

கோவமான சிங்காரம், ரேகாவின் முடியை இழுக்கிறான்.

SINGARAM
என்னடி பேசுற...பிச்சகார நாய? பாதி கெணறு தாண்டியாச்சு, இப்ப சண்டித்தனம் எதுவும் பண்ணாத. வாய மூடிகிட்டு பேசாம வண்டில ஏறு.

விருப்பமே இல்லாத அவள் காரின் முன் இருக்கையில் ஏறாமல் தயக்கத்துடன் பின் இருக்கையில் ரேகா நந்தினியுடன் அமர்ந்துகொள்கிறாள்...

**I/E. CONTESSA, HIGHWAY - DAY (FLASHBACK)**

மூவரும் காரில் சென்று கொண்டிருக்க, கைகளை காட்டியபடி அமர்ந்திருந்த நந்தினியிடம் ரேகா சிப்ஸ் பேக்கட் ஒன்றை கொடுக்கிறாள்.

REKHA
வேனுனா எடுத்துக்க?

நந்தினி தனக்கு வேண்டாம் என்று தலையை ஆட்டுகிறாள்.

NANDHINI
என்ன எங்க கூட்டிட்டு போறீங்க?

சிங்காரம் தன் காரின் பின் பார்க்கும் கண்ணாடி வழியாக அவளை பார்க்கிறான்.

REKHA
ம்ம்??

அவளிடம் பேச முயற்ச்சி செய்கிறாள்.

REKHA (CONT'D)
அது இருக்கட்டும், உன் பேர் என்ன?

காரில் சென்றுக்கொண்டிருந்த ஒரு சிறிய சலவையகம் ஒன்றை பார்க்கிறாள் நந்தினி.

(CONTINUED)

CONTINUED:

NANDHINI
(cooly)
நந்தினி.

சிங்காரம் கண்ணாடியின் வழியாகப் பார்க்கிறான்.

REKHA
பேர் நல்லா இருக்கே.

NANDHINI
பதில் சொல்லுங்க. என்ன எங்க கூட்டிட்டு
போறீங்க?

ரேகா பின்னால் திரும்பி பார்க்கிறாள்.

REKHA
வீட்டுக்கு.

NANDHINI
யார் வீட்டுக்கு?

SINGARAM
அஹ்ன்..உன் வீட்டுக்கு.

ஒரு சில நொடிகளுக்கு பின்.

NANDHINI
நான் அங்க வரல.
(...)
வண்டிய நிப்பாட்டுங்க.

SINGARAM
என்னது?

NANDHINI
(assertively)
வண்டிய நிப்பாட்டுங்க!.

நந்தினி காரின் கதவை திறக்கிறாள்.

SINGARAM
(yelling)
ஏய்!...ஏய்! என்ன பண்ணற?

நிலை தடுமாறி சென்ற காரை கட்டுப்படுத்தி, ரோட்டின் ஓரமாக நிறுத்துகிறான் சிங்காரம்.

காரின் கதவுகளை திறந்து, சுறு சுறுப்பாக நடக்க தொடங்கினாள் நந்தினி. அவளை பின் தொடர்ந்து ஓடுகிறான் சிங்காரம்.

**EXT. CULVERT - DAY (FLASHBACK)**

ரோட்டின் ஓரமாக இருந்த கல்வர்டின் மேல் அமர்ந்துக்கொள்கிறாள்.

சிங்காரம் நின்று கொண்டிருந்த இடத்தில், ரேகாவும் இணைகிறாள்.

SINGARAM
இதுதான் குழந்தையா? பாத்தல? உன்னையும் என்னயும் சேத்து முழுங்கிடும். போ..என்னனு பாரு.

தன் காரின் மேலே சாய்ந்தபடி, சிகரெட் ஒன்றை பற்றவைக்கிறான்.

ரேகா, அமர்ந்துக்கொண்டிருந்த நந்தினியை நோக்கி நடக்கிறாள்.

பக்கத்தில் வந்த ரேகாவை பார்த்த நந்தினி வேறு எங்கயோ பார்க்க தொடங்குகிறாள்.

REKHA
விழுந்திருந்தா என்ன ஆயிருக்கும் தெரியுமா?

NANDHINI
ஹன்? செத்து போயிருப்பேன்.

REKHA
இப்பொ, என்ன பண்ணறதா உத்தேசம்?

NANDHINI
நான் எதோ பண்ணிட்டு போறேன். நீ போய் உன் வேலைய பாரு.

REKHA
சின்ன பொண்ணு மாதிரி பதில் சொல்லு.

NANDHINI
நான் ஒன்னு சின்ன பொண்ணு இல்ல.

கொஞ்சம் முன்னால் நகர்கிறாள் ரேகா.

REKHA
என்ன... அப்போ, உனக்கு ஒரு முப்பது, முப்பதஞ்சு வயசு இருக்குமா?

NANDHINI
ஹன்...அது என் தங்கச்சிக்கு.

ரேகாவின் சிரிப்புர்க்கு நந்தினியும் விழ தொடங்கினாள்...

SINGARAM'S POV

ரேகா, நந்தினி, இருவரும் இணைய தொடங்குகின்றனர்.

நந்தினி அமர்ந்து கொண்டிருந்த கல்வெட்டிற்க்கு செல்கிறோம்.

CONTINUED:

REKHA
எனக்கு ரொம்ப பசிக்குதுபா, பிரியானி சாப்பிடனும்
போல இருக்கு, உனக்கு?

REKHA (CONT'D)
அப்ப எந்திரிச்சி வா. போய் சாப்பிடலாம்.

நந்தினி தயங்குகிறாள்.

REKHA (CONT'D)
உன் வீட்டுக்கு எல்லாம் ஒண்ணும் போல. வா.

இருவரும் காரை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள். அமர்ந்திருந்த ரேகாவின் நினைவுகள் எங்கோ செல்ல தொடங்குகிறது. அவளை பின்தொடர்ந்து...

SEGUE BACK TO:

**INT. TRAIN - DAY**

சென்றுக்கொண்டிருந்த இரயில்வண்டி கீச் என்ற கோறமான சப்தத்துடன் வந்து நிற்கிறது. ஆழ்ந்த சிந்தனையில் இருந்து எழுகிறாள் ரேகா. இரயில்வண்டி பெட்டிகளின் கதவுகள் திறந்திருக்கிறது. ஒலி எலுப்பும் சப்த்தமும் கேட்க தொடங்குகிறது...

ரேகாவும், நந்தினியும் ஒரே இடத்தில் அமர்ந்திருக்க நந்தினி தூங்கிக் கொண்டிருக்கிறாள்.

REKHA
எந்திரி வா. உள்ள போய் இடம் இருக்கானு
பாப்போம்.

ஆரவார சப்த்தங்கள் சூழ்ந்த அந்த பெட்டியில், ஒரு சிலர் கீழே இறங்குகின்றனர்.

கூட்டத்தை பொருட்படுத்தாமல் அங்கிருந்து எழுந்து இருவரும் உள்ளே செல்ல தொடங்குகின்றனர்.

ஜன்னலின் அருகே இரண்டு இருக்கைகள் கிடைக்க, நந்தினி அங்கே அமர்ந்து ஜன்னலின் கதவுகளை திறக்கிறாள்.

MATCH CUT TO:

**INT. LANKAN'S HOUSE - DAY**

மேஜையின் செருகு பெட்டியை மூடுகிறான் லங்கன். சிகரெட் பெட்டியிலிருந்து ஒன்றை எடுத்து பற்றவைக்கிறான்.

LANKAN
(to himself,loudly)
கேட்டது பெரியையா..குடுத்தது துரைசிங்கம்...கூட
போனது ரேகா.
(MORE)

(CONTINUED)

CONTINUED:

LANKAN (CONT'D)
(to singaram)
அங்கே என்னதான்டா நடந்திருக்கும்?

SINGARAM
அதுங்க ரெண்டுத்தையும் கண்டுப்பிடிச்சாதான்டா, என்ன நடந்துச்சுன்னு தெரியும்.

சிங்காரத்தின் கால்களை உற்றுப் பார்க்கிறான் லங்கன்.

LANKAN
பேனாவாலயா டா குத்தினான்?

SINGARAM
நல்ல வேள கைல பேனா வச்சிருந்தான். கத்தியா மட்டும் இருந்துச்சு, காலு காரோட போயிருக்கும்.

LANKAN
பாத்தா குறி காலுக்கு வச்ச மாதிரி தெரியலயே.

SINGARAM
டேய்..பொண்ண கண்டு பிடிக்குறதுக்கு வழிய சொல்லுடா.

LANKAN
என்ன சொல்ல சொல்ற? பொண்ணுக்கு பன்னண்டு வயசு. எல்லாம் பெரிய தலைங்க. கண்டுபிடிக்க இருவத்தி நாளு மணி நேரம். தெளிவா ஒரு க்ளு-உம் கிடையாது
(...)
மொட்ட தலைக்கும் மொலங்காளுக்கும் முடிச்சி போட சொன்னா, மசுருக்கு நான் எங்க டா போவன்?

SINGARAM
அதெல்லாம் தெரியாது. எல்லாம் தெளிவா இருந்தா, நான் ஏன் உன்கிட்ட வரேன்?
(...)
நீதான் எதாவது பண்ணி கண்டு பிடிக்கனும்.

LANKAN
நான் என்ன மந்திர வாதியா? மை போட்டு கண்டு பிடிக்குறதுக்கு? அதும் இல்லாம, மேட்டரு செம்ம ரிஸ்க்கு. வேளைக்கே ஆகாது மாமா.

SINGARAM
என்னடா இப்படி சொல்லிட்ட? நீயே முடியாதுனா, நா எங்க போவன்.

CONTINUED: (2)

LANKAN
புரியுது. நீயே குத்து வாங்கி உக்காந்திட்டிருக்க. ஆனா ஒன்னுமே இல்லாம இவ்வளவு பெரிய ரிஸ்க்கு நான் எடுத்து..உள்ள இறங்கி...எப்படி சிங்காரம்?

SINGARAM
நீ எச்ச கைல காக்கா கூட விரட்ட மாட்டனு எனக்கு தெரியும், இந்தா.

ஒரு பழைய ஏர் இந்தியா பையை எடுத்துவந்து மேஜையில் வைக்கிறான்.

LANKAN
என்னடா?

SINGARAM
நீ ரொம்ப நாளா கேட்டுட்டு இருந்தியே. எடுத்துக்க.

லங்கன் ஆச்சரியப்படுகிறான்.

LANKAN
நெஜமாவா? தரவே மாட்டன்ன!

SINGARAM
உசுரோட இதுவா முக்கியம்? வச்சிக்கோ. வச்சிக்கோ.

பையை திறந்து உள்ளே இருப்பதை சரிப்பார்க்கிறான்.

LANKAN
கரெக்ட், உசுருதான் முக்கியம்.

பையில் இருந்ததை பார்த்த லங்கனின் முகம் அதிக பொலிவுடன் காணப்பட்டது. அந்த பையை பூட்டியபடி, சுவற்றில் அமைக்கப்பட்டிருந்த லாக்கரின் உள்ளே வைக்கிறான்.

செருகுபெட்டியிலிருந்து கைத்துனைபொறி, சிகரெட் பெக்கட், லைட்டர் மற்றும் தனது துப்பாக்கியை எடுத்து மேஜையின் மேல் வைக்கிறான்.

LANKAN (CONT'D)
செரி, எங்க போயிருப்பானு நினைக்கிற?

கேட்டது கிடைத்தவுடன் கண்ணாடியின் முன்னாள் நின்று சட்டையை போட்டுக்கொண்டு தலையை வாரியப்படி தயாராகிறான்.

SINGARAM
நான் லோக்கல்ல விசாரிச்சி பாத்துட்டன். அவ எங்கயும் இல்ல. எனக்கு தெரிஞ்சி கண்டிப்பா பாம்பே தான் போயிருப்பா.

(CONTINUED)

CONTINUED: (3)

LANKAN
பாம்பே? எத வச்சு சொல்ற?

SINGARAM
அவ பாம்பேல நாலு வருஷம் இருந்தவ டா.

மேஜையின் மேல் எடுத்து வைத்த எல்லா பொருட்களையும் ஒன்றொன்றாக தன் சட்டையின் பாக்கெட்களுக்குள் வைத்து சட்டையை பெண்டின் உள் சொருகியப்படி தாயாராகிறான்.

LANKAN
அதுனால?

SINGARAM
லோக்கல்ல காணும்ன உடனே, ஸ்டேஷன்ல போய் பாத்தன். காலைல பாம்பேக்கு ஒரு ட்ரேய்னு போச்சுனான்.

LANKAN
நீ ஏறினத பாத்தியா?

SINGARAM
ஏறி இருக்கலாம் இல்ல?

LANKAN
சிங்காரம், பாம்பே எனக்கு ஒரு சப்ப மேட்டரு. ஆனா பாம்பேன்னு இறங்கிட்டு, வேற எங்கேயாவதுனா, நீ சொல்ற டைம் குள்ள திருப்பி வர முடியாது.
(off his look)
கௌம்புறதுக்கு முன்னாடி பாம்பே தானானு ஒரு தடவ கன்ஃப்ர்ம் பன்னிப்போம்.

கைகளை முறித்தப்படி மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் விளக்கை அணைக்கிறான் லங்கன்.

SINGARAM
எப்படி டா கன்ஃபர்ம் பன்ன போர?

LANKAN
ரேகா வீடு எங்க?

CUT TO:

**EXT. PLAYGROUND - DAY**

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சில குழந்தைகள் வீட்டின் பால்கனியை பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

(CONTINUED)

CONTINUED:

ஊஞ்சல் ஒன்று ஆடிக்கொண்டிருக்க, 12 வயதாகிய ஒரு சிறுவன், அவன் வயதில் இருக்கும் ஒரு சிறுமியை உட்காரவைத்து தள்ளிக் கொண்டிருக்கிறான். இருவரும் சந்தோஷமாக ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சூரிய வெளிச்சத்தால் உண்டாகிய அந்த வீட்டின் மேல் தலை நிழல்கள் அதற்கு எதிர்புறம் இருக்கும் ரோட்டின் மேல் தெரிகிறது.

அங்கு பறந்து கொண்டிருந்த பட்டாம்பூச்சி ஒன்று அந்த சிறுமியை திசை திருப்புகிறது.

வயதான ஒரு மனிதனின் நிழல் பூமியில் தெரிய ஒரு சில நொடிகள் அங்கே காத்திருக்கிறான்...

OLDER MAN (O.S.)
டேஇ..விளையாடுனது போதும். அவள மேல கூட்டிட்டு வா.

ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த இருவரையும் மேலே வருமாறு அவர் அழைக்க, அதை கேட்டு இருவரும் மேலே செல்கின்றனர்.

அந்த சிறுமி பறந்து கொண்டிருந்த பட்டாம்பூச்சியை பிடிக்க முயற்சி செய்ய அது அவளை விட்டு தூரம் பறந்து சென்றுவிட்டது.

**INT. CHINNAIAH'S BALCONY - DAY (CONTINUOS)**

தனக்கு முன்னால் பறந்து வந்த படாம்பூச்சியை பார்த்தவுடன், பழைய நினைவுகளில் மூழ்கிவிட்டான் சின்னையா. மேலே பார்த்தபடி ஏதோ ஒன்றை யோசித்து கொண்டிருக்கிறான்.

மணி பால்கனியின் உள்ளே வர,

CHINNAIAH (O.S.)
கார் ரெடி பண்ணு.

தலையை சிமிட்டியபடி அங்கிருந்து வெளியே செல்கிறான் மணி.

CUT TO:

**INT. REKHA'A HOUSE, OUTSIDE DOOR - DAY**

கையில் வைத்திருந்த கருவியை பயன்படுத்தி, பூட்டை உடைத்து உள்ளே செல்கிறான் லங்கன். சிங்காரம் அவனை பின் தொடர்கிறான்.

**INT. REKHA'A HOUSE - DAY**

உள்ளே சென்ற லங்கன் அங்கிருந்த ஒரு பொருளை கூட விடாமல் நோட்டம் விடுகிறான்.

(CONTINUED)

CONTINUED:

LANKAN
லோசல்ல ஒழுங்கா விசாரிச்சியா?

சிங்காரமும் அவனுடன் இணைந்து செயல்படுகிறான்.

SINGARAM
எல்லாம் விசாரிச்சு. காலைலேந்து ஃபோன் அடிக்கிறேன்..அடிக்கிறேன்...முண்ட எடுக்கவே இல்ல. திடீர்னு பாத்தா ஃபோன் ஸ்விட்ச் ஆஃப். அவ ப்ளான் பண்ணிதாண்டா பொண்ன தூக்கிட்டு போய்ட்டா.

LANKAN
ப்ளான் பண்ணி போறவ, இப்படியா வீட்ட விட்டு போவா?

SINGARAM
இங்க என்ன இருக்கு எடுத்திட்டு போக?

வார இதழ் ஒன்றின் மேல் இருந்த சில 100 ரூபாய் நோட்டுகளை பார்த்த சிங்காரம், லங்கனுக்கு தெரியாமல் அதை எடுத்து தன் பையில் வைத்து கொள்கிறான்.

LANKAN
(off his look)
போ. மச மசன்னு நிக்காம...போய், அட்ரெஸ், நம்பர் எதாவது கெடைக்குதானு பாரு.

ஆடையை சரிப்பார்க்கும் ஒரு பெரிய கண்ணடியை நோக்கி லங்கன் சென்று கொண்டிருக்க, அந்த கண்ணாடியின் ஓரத்தில் சொறுகியிருந்த புகைப்படம் ஒன்றை எடுக்கிறான்.

சிங்காரம் ஆர்வமே இல்லாமல் தன் தலையை ஆட்டுகிறான்.

சொருகியிருந்த புகைப்படத்தை எடுத்து லங்கன் பார்த்து கொண்டிருக்க, சிங்காரம் அவன் பக்கத்தில் வருகிறான். புகைப்படத்தில் ரேகாவுடன் இணைந்து பச்சை புடவை அணிந்திருக்கும் ஒரு பெண் நிற்க்கிறாள்.

சாய்ந்தபடி லங்கனின் கையில் இருந்த புகைப்படத்தை பார்க்கிறான், சிங்காரம்.

SINGARAM
லெஃப்ட்ல நிக்குதே...அதான்..ரேகா.

LANKAN
(sniffs at it)
ம்ம்..பார்ட்டி சும்மா டக்கரா இருக்கா.

மிகவும் ஆர்வமாக அந்த படத்தைபார்த்து கொண்டிருக்கிறான்.

SINGARAM
ரோம்ப காஞ்சி போயிருக்க போல.

(CONTINUED)

CONTINUED: (2)

சிங்காரத்தை பார்த்து முறைக்கிறான், லங்கன்

LANKAN
(off his look)
கூட நிக்குதே பச்ச புடவ... அது?

SINGARAM
எங்க காமி.

லங்கனின் கையில் இருந்த அந்த புகைப்படத்தை பிடுங்கி வெளிச்சமான ஒரு இடத்திற்க்கு சென்று ரேகாவுடன் இருக்கும் அந்த பெண்ணை உற்று பார்க்கிறான். நூலளவு கொஞ்சம் புகையிலையை எடுத்த லங்கன் தன் வாயில் போட்டு மெல்ல தொடங்கினான்.

SINGARAM (CONT'D)
பாத்த மூஞ்சி மாதிரி இல்லயே.
(beat)
கண்டிப்பா பார்ட்டி லோக்கல் கெடையாது.

சிங்காரம் வைத்திருந்த அந்த படத்தை மறுபடியும் பிடுங்கிக்கிறான், லங்கன்.

LANKAN (CONT'D)
(off his look)
என்ன பாக்குற? போ. சொன்ன வேலைய போய்
பாரு.

வேறு வழி இல்லாமல் அந்த அறையின் மற்றொரு பகுதிக்கு சென்று தேட தொடங்குகிறான்.

SINGARAM
இந்த குப்பையில என்னத்த தெடுறது?

பேசிக்கொண்டே அடுப்பறைக்குள் செல்கிறான்.

**I/E. CHINNAIAH'S SUV, MUD ROAD/WELL - DAY**

சுற்றி பார்க்க இடம் முழுவதும் காலியாக சமநிலையில் இருக்க சின்னையாவின் கார் மட்டும் அந்த மண் ரோட்டில் சென்று கொண்டிருக்கிறது. அந்த இடத்தின் ஒரு பகுதியில் நீண்ட நாளாக இருக்கும் ஒரு கிணற்றை உற்று பார்க்கிறான், சின்னையா. அதை பார்த்து கொண்டே காரின் கதவை திறக்கிறான்.

CUT BACK TO:

**INT. REKHA'A HOUSE - DAY**

பழைய அலமாறி ஒன்றை திறந்து அதிலிருந்து ஒரு ரங்கநாதர் கடவுளின் புகைப்படத்தை எடுக்கிறான், லங்கன். புகைப்படத்திலிருந்து எதாவது துப்பு கிடைக்குமா என்று அதை உற்று பார்த்து கொண்டிருக்கிறான்.

(CONTINUED)

CONTINUED:

அடுப்பறையில் இருந்த சிங்காரம், நிலைப்பெட்டி ஒன்றின் பக்கத்தில் சென்று அதை திறந்து பாக்கிறான். உள்ளே இருந்த ஒரு தகரப்பெட்டி அதிக சப்த்தத்துடன் உருண்டு விழ அதனுள் இருந்த சில பொருட்கள் தரையில் சிதறியப்படி காணப்படுகிறது. பச்சை புடவையில் இருந்த அந்த பெண்ணும், ரேகாவும் இருக்கும் சில புகைப்படங்கள் சிங்காரத்தின் கண்களில் தென்படுகிறது. எல்லா படங்களும் பாம்பேயில் எடுக்கப்பட்டது. அங்கிருந்த ஏதோ ஒன்று அவனின் கவனத்தை ஈர்த்தது.

SINGARAM
(surprised)
டேய்! டேய்! டேய்!

கையில் சில புகைப்படங்களுடன் அடுப்பறையில் இருந்து ஓடி வருகிறான்.

SINGARAM (CONT'D)
அந்த பச்ச புடவ பாம்பே காரி. இதோ பாரு எல்லாம் பாம்பேல எடுத்த ஃபோட்டோ.

லங்கனிடம் அதை கொடுக்கிறான்.

LANKAN
பாம்பே வா?

SINGARAM
ரேகாக்கு பாம்பேல ரேஷன் கார்டே இருக்கு டா. அங்க தான்டா போயிட்றுக்கா.

சிவப்பு வண்ண புத்தகம் ஒன்றை லங்கனிடம் கொடுக்கிறான் சிங்காரம். அதை பார்த்த லங்கனின் முகம் வாடியப்படி தென்படுகிறது.

SINGARAM (CONT'D)
வா கிளம்பலாம்.

LANKAN
இருடா, அவசரப்படாத.

SINGARAM
ஏய், தொங்குறது என் உசுருடா. நீ கேட்டது கன்ஃபர்மேஷன். கன்ஃபர்ம் ஆயிடுச்சு இல்ல? வா கிளம்பலாம்.

LANKAN
சரி. பாம்பே ட்ரேயின் எத்தன மணிக்கு கிளம்புச்சுன்ன?

SINGARAM
ஆறு மணி.

லங்கன் தன் கை கடிகாரத்தை பார்க்கிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

LANKAN
இப்பொகூட வண்டிய ஒரு தட்டு தட்டுனா ட்ரேயின் பார்டர தாண்டுறதுகுள்ள மடக்கிடலாம்.

SINGARAM
இப்ப சொன்னியே, இது மேட்டரு.

CUT TO:

**EXT. MUD ROAD/WELL - DAY**

ஊர் எல்லையில் தனித்து இருக்கும் ஒரு கிணற்றின் முன்னால் நின்றபடி அதை உற்றுப் பார்க்கிறான், சின்னையா.

வெகு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்ததால் மணியை சின்னையாவிடம் பேச சொல்கிறான், வேலு.

பக்கத்தில் வந்த மணியை கூட கவனிக்காமல் ஆழ்ந்த சிந்தனையில் அந்த கிணற்றை தொடர்ந்து பார்த்து கொண்டிருக்கிறான், சின்னையா. ஒரு நீளமான இடைவேளிக்கு பின் சின்னையா தனக்குத் தானே பேசிகொள்கிறான்...

CHINNAIAH
நம்ம எதாவது பன்னனும், இல்ல?

**INT. TRAIN - DAY**

நந்தினி, ரேகா இருவரும் எதிரெதிரே உட்கார்ந்திருந்தனர். இரயில்வண்டி சென்று கொண்டிருக்க, நந்தினி அரைத்தூக்கத்தில் இருக்கிறாள்.

தூக்கத்திலிருந்து எழுந்த நந்தினி ஜன்னலின் அடிக்கட்டையில் இருந்த ஒரு டீ கப்பை பார்த்து கொண்டே இருக்கிறாள்.

NANDHINI
இது எனக்கா?

REKHA
(nods)
ம்ம்..

நந்தினி அதை எடுத்து கொள்கிறாள்.

NANDHINI
நீ சாப்டியா?

REKHA
ம்..சாப்ட்டன். ஊதி குடி.

அவளை அன்பாக பார்த்த ரேகா தனக்குதானே சிரித்து கொள்கிறாள்.

(CONTINUED)

CONTINUED:

REKHA (CONT'D)
வீடுனா உனக்கு பிடிக்காதா?

நந்தினி அந்த டீயை குடிக்க தொடங்கினாள்.

NANDHINI
பிடிக்காது

REKHA
ஏன்?

NANDHINI
(snaps at her)
அதபத்தி பேசவேண்டாம். எனக்கு பிடிக்கல.

மீதம் இருந்த அந்த டீ கப்பை கீழே இறக்கி தனது வாயை துடைத்து கொள்கிறாள்.

REKHA
சரி... நீ எந்த தைரியத்துல ஓடி வந்த?

NANDHINI
(off her look)
பிடிக்கல, ஓடி வந்துட்டன்.

சில நொடிகள்...

REKHA
(looking inside)
நானும் ஒன்ன மாதிரிதான்..ஒரு வேகத்துல ஓடி வந்தவ.
(beat)
ஆனா இந்த உலகம் இருக்கே..அது ரொம்ப மோசமானது கண்ணு.

NANDHINI
(looking her in the eye)
அப்போ, நீ ஏன் என்ன அந்த கெழவன் கிட்ட கூட்டிட்டு போன?

ரேகாவிற்க்கு என்ன சொல்வதேன்று தெரியவில்லை.

REKHA
பெரிய தப்பு பண்ணிட்டன். உன்ன பத்தி யோசிக்கல.

ஜன்னல் வழியாக பார்த்து கொண்டிருக்கிறாள்.

CONTINUED: (2)

REKHA (CONT'D)
ஒரு ஒரு மனுஷனுக்குள்ள ஒரு சாத்தான் இருக்குனு சொல்லுவாங்க, அத சிங்காரம் காமிச்சான், அதே மாதிரி கடவுளும் இருக்காருனு நீ காட்டிட்ட.

நந்தினியின் கண்களை பார்த்து பேசுகிறாள்.

NANDHINI
நீ அப்படியே என் அம்மா மாதிரியே பேசுற.

REKHA
இப்பொ மட்டும் அம்மாங்குற?

NANDHINI
நான், நீ பேசுறத சொன்னேன்.

நக்கலாக பேசிக்கொண்டிருப்பதை ரசிக்கிறாள் ரேகா.

REKHA
அம்மானா உனக்கு ரொம்ப பிடிக்குமா?

ஆம் என்று தலையை ஆட்டுகிறாள், நந்தினி.

REKHA (CONT'D)
இப்பொ உன் அம்மா எங்க?

NANDHINI
அம்மா...செத்து போச்சு.

REKHA
அதான் வீடுனா பிடிக்காதா?

தலையை ஆட்டியபடி திரும்பிகொள்கிறாள் நந்தினி. மினுமினுப்புடன் காணப்படுகிறது அவளின் கண்கள்.

REKHA (CONT'D)
இனிமே உன் வீட பத்தி நான் பேசல, சரியா?

நந்தினி, ரேகா பேசியதை பெரிதாக எடுக்கவில்லை.

REKHA (CONT'D)
(changes subject)
சரி..நெஜமாவே உன் தங்கச்சிக்கு முப்பத்தஞ்சு வயசா?

'ஓ என்கிட்டயே வா' என்பது போன்ற ஒரு பார்வையுடன் ரேக்காவை பார்த்து தன்னம்பிக்கையிலாமல் சிரிக்கிறாள்.

CUT TO:

**EXT. TRAIN BRIDGE - DAY**

இரயில்வண்டி அதை தாண்டி செல்கிறது...

CUT TO:

**INT. HOSPITAL, PATIENT ROOM - DAY**

நோயாளி ஒருவரிடம் அங்கிருந்த மருத்துவர் மெல்லிய குரலில் பேச தொடங்குகிறார்.

DOCTOR
மேனன்...மிஸ்டர் மேனன்..உங்ள பாக்க யார் வந்திருக்கன்னு பாருங்க?

50 வயதில் மேனன் என்ற ஒருவர் தன் வாயிலிருந்து எச்சில் வழிந்தபடி, கை கால் விளங்காமல் அமர்ந்து கொண்டிருக்கிறார். அவரின் முகத்தில் எந்த ஒரு மாறுதலும் தெரியவில்லை.

அங்கிருந்து அந்த மருத்துவர் விலக, அவருக்கு பின்னால் சின்னையா நின்று கொண்டிருக்கிறான்.

DOCTOR (CONT'D)
அவருக்கு நல்லா அடையாளம் எல்லாம் தெரியும்...

தனது புருவங்களை தூக்கியப்படி மேனனை பார்த்து கொண்டிருக்கிறான் சின்னையா.

DOCTOR (CONT'D)
..நீங்கபேசினா நல்லா புரிஞ்சுக்குவாரு. பேசுங்க.

அவர் பக்கத்தில் சென்ற சின்னையாவின் முகத்தில் புலப்படாத சிரிப்பு தெரிகிறது.

CHINNAIAH
நினைவு இருக்கா?

சின்னையாவை அடையளம் கண்ட மேனன் பயத்துடன் முறுக்கியிருந்த தன் கைகளை ஆட்ட தொடங்குகிறார்.

CUT TO:

**INT. HOSPITAL, CORRIDOR - DAY**

சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த மேனனை இடைவழியாக தள்ளி வருகிறான் சின்னையா.

**EXT. HOSPITAL, PORCH - DAY**

மேனனை காரில் ஏற்றுவதற்க்கு மணியும் வேலுவும் உதவி செய்கின்றனர்.

CUT BACK TO:

**EXT. MUD ROAD/WELL - DAY**

அந்த பழைய கிணறு அமைந்திருந்த இடத்திற்க்கு செல்ல, சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த மேனனை கிணற்றை நோக்கி தள்ளி செல்கிறான், சின்னையா. மணி, வேலு இருவரும் சின்னையாவை பின் தொடர்கின்றனர்.

மேனனின் முகம் ஒரு வழியாக இழுத்து கொண்டிருக்க சின்னையா அந்த வண்டியை கிணற்றின் முன்னால் நிறுத்துகிறான்.

அனைவரும் அமைதியாக இருக்கின்றனர். ஒரு நீண்ட இடைவெளிக்கு பின்..

திடீரென! சின்னையா மேனனை தூக்கி கிணற்றில் போடுகிறான்.

தொப் என்ற சப்தத்துடன் மேனன் தண்ணியில் விழுந்து மூழ்குகிறான்.

பழைய நினைவுகள் அனைத்தும் அவன் கண்களில் தெரிந்தது.

CUT TO:

**I/E. CONTESSA, BUSY ROAD - DAY**

கொஞ்சம் விறுவிறுப்பான தெரு ஒன்றில் தன் காரை மெதுவாக ஓட்டி செல்கிறான் லங்கன்.

LANKAN
சிங்காரம், நான் இப்பவும் சொல்றேன், அவ கண்டிப்பா பாம்பே போயிருக்க மாட்டா.

SINGARAM
சும்மா இருடா. ரேகாவ, உன்ன விட எனக்கு நல்லா தெரியும். நா சொல்றேன் அவ ட்ரெயின்லதான் இருக்கா.

காரின் உள்ளிருந்த லைட்டரை அமுக்குகிறான், சிங்காரம்.

MATCH CUT TO:

**I/E. TRAIN, WASH BASIN AREA - DAY**

குழாயை திறந்து கொண்டிருக்கும் ஒருவனின் கைகள் தெரிய அந்த தண்ணியால் தன் முகத்தை கழுவிக் கொள்கிறான். பாழடைந்த வீட்டில் இதற்கு முன் பார்த்த அந்த சாமியாரின் கைகள்தான் அது.

(CONTINUED)

CONTINUED:

யாரையோ அடையாளம் கண்டு அவனின் முகம் மாற தொடங்குகிறது.

திரும்பி பார்த்தால், ரேகாவுடன் அனுப்பிய அந்த சிறுமி நந்தினி. அவள் நந்தினிதான் என்று உறுதி செய்கிறான்.

உடனடியாக தன் கைப்பேசியை எடுத்து யாரையோ அழைக்கத் தொடங்கினான்.

கைப்பேசியின் சப்தம் ஓரிடத்தில் கேட்க தொடங்குகிறது.

CUT TO:

**I/E. CONTESSA, BUSY ROAD INTERSECTION - DAY**

கல்யாண ஊர்வலம் வந்துக்கொண்டிருக்க ரோட்டில் லங்கனின் கார் மறிக்கப்படுகிறது.

SINGARAM
(pointing to the groom)
இவன்லாம் கல்யாணம் பன்னலன்னு எவன் அழுதான்.

ஊர்வலத்திற்க்கு முன்னால் பச்சை கலர் சேலை அணிந்திருந்த ஒரு பெண் கையில் ஒரு தாம்பூல தட்டுடன் நடந்து கொண்டிருக்கிறாள். தாம்பூல தட்டில் இருக்கும் தாலியையும் பார்க்கிறான். அவன் பார்த்த சில விஷயங்கள், ஏதோ ஒன்றை அவன் மனதில் சுட்டி காட்டியது.

LANKAN
ரேகா வீட்ல நான் ஒரு ஃபோட்டோ குடுத்தேனே, அத எடு.

SINGARAM
எந்த ஃபோட்டோ?

LANKAN
அதான்டா அந்த பச்ச புடவ.

ரேகா வீட்டிலுருந்து எடுத்த புகைப்படத்திலிருந்து ஒன்றை மட்டும் உருவுகிறான்.

பச்ச புடவையில் பார்த்த பெண்ணை, புகைப்படத்துடன் சம்மந்த படுத்துகிறான். புகைப்படத்தில் ஏதோ ஒன்றை கண்டுபிடிக்க கார் இருக்கையின் வாரைப் போடுகிறான்.

LANKAN (CONT'D)
பெல்ட்ட போடு.

லங்கன் காரை வேகமாக ஓட்ட ஆரம்பிக்கிறான்.

SINGARAM
(puzzled)
எதுக்கு டா?

(CONTINUED)

CONTINUED:

மிகவும் வேகத்தில் அந்த கார் சென்று கொண்டிருப்பதால், தழுவியப்படி அமர்ந்துக்கொண்டிருக்கிறான் சிங்காரம்.

SINGARAM (CONT'D)
டேய், டேய், டேய், டேய், டேய்... என்ன டா பண்ற?

நெரிசலுக்கு எதிராக சென்று கொண்டிருந்த பல கார்களை ஏமாற்றி சென்றான், லங்கன்.

**EXT. SRIRANGAM STATION - DAY**

இரயில்வண்டி வந்து நிற்க ஒருப்பக்கமாக பயணிகள் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருகிறார்கள். இரயில் வண்டி பெட்டியில் இருந்து பாதி பேர் இறங்க சில பயணிகள் ஏறிக்கொண்டிருக்கிறார்கள்.

CUT TO:

**I/E. CONTESSA/DORAI SINGAM'S HOUSE, CHAMBER - DAY**

சிங்காரத்தின் கைப்பேசி அடிக்கத் தொடங்குகிறது. கைப்பேசியின் திரையை பார்த்து கூப்பிடுபவர் யார் என்பதை அடையாளம் காண்கிறான்.

SINGARAM
டேய் துரைசிங்கம் ஃபோன் அடிக்கிறான்டா.

நன்றாக யோசித்த லங்கன் கைப்பேசியை எடுக்குமாறு சைகை காட்டுகிறான்.

LANKAN
எடு.

விருப்பமே இல்லாமல் ஃபோனை எடுக்கிறான், சிங்காரம்.

SINGARAM
அண்ண?

துரைசிங்கம், சிங்காரம் இருவரும் மாறி மாறி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

DORAI SINGAM
பொண்ணு எங்க?

SINGARAM
ட்யூட்டிக்கு போனது இன்னும் வரல, அண்ண. கூட ரேகாவும் போயிருக்கா.

பல கடைகளை தாண்டி சென்று கொண்டிருக்கிறது.

DORAI SINGAM
எந்த ஏரியா?

(CONTINUED)

CONTINUED:

SINGARAM
நம்ம ஈசிஆர் தான் அண்ண.

DORAI SINGAM
ஈசிஆர்-க்கு போனவ, திருச்சி ட்ரேயின்ல என்னா பண்ணிட்டிருக்காங்க?

SINGARAM
திருச்சி போற ட்ரேயினா?

லங்கனின் முகத்தில் சிறிய புன்சிரிப்பு தெரிகிறது.

DORAI SINGAM
என்னடா? உன் வேலைய என் கிட்டயே காட்றியா?

SINGARAM (V.O.)
இல்லன்ன. நான் பொண்ண கண்டிப்பா கூட்டிட்டு வந்துறன் அண்ண.

DORAI SINGAM (V.O.)
தேவ இல்ல.

திடீரென அழைப்பு துண்டிக்கப்படுகிறது.

SINGARAM
டேய் அவ திருச்சி போய்ட்டு இருக்காலான்டா.

LANKAN
திருச்சி போல. திருச்சி ட்ரேயின்ல போயிட்டு இருக்கா. மூடிகிட்டு வா.

CUT TO:

**I/E. TRAIN, SRIRANGAM STATION/DORAI SINGAM'S HOUSE, CHAMBER - DAY**

கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை, சாமியாரும், துரைசிங்கமும் ஒருவருக்கொருவர் பேசிகொள்கின்றனர்.

சாமியாரின் கைப்பேசி அடிக்க தொடங்கியது.

DORAI SINGAM
டேய் ஸ்டேஷன் வந்தாச்சா?

SAMIYAR
வந்திடுச்சு அண்ணே?

(CONTINUED)

CONTINUED:

DORAI SINGAM (V.O.)
வண்டி கிளம்புறத்துக்கு முன்னாடி, சைரன் அடிக்கும், அப்ப பொண்ண தூக்கிட்டு ரன்னிங்க்ளயே இறங்கிடு...

SAMIYAR
சரி அண்ணா. ரேகா?

சாமியாரிம் கவனம் ரேகா, நந்தினி மேலேயே இருக்கிறது.

DORAI SINGAM
தடுத்தா...அவள போட்று.

**I/E. CONTESSA. TRICHY HIGHWAY - DAY**

வேகமாக சென்ற கார், வலது புரம் சுழன்று திரும்பியதால் அந்த இடமே மண் துகள்களாக காட்சியளிக்கிறது.

**I/E. TRAIN, SRIRANGAM STATION - DAY**

சாமியார், தண்ணிடம் இருந்த மயக்க மருந்தை எடுத்து கைத்துனியில் இட்டு தயாராகுகிறான். விசில் சப்தத்துடன் இரயில்வண்டி குலுங்கியபடி நகர தொடங்குகிறது.

இரயில் வண்டியின் ஜன்னல் வழியாக பார்க்கும்பொழுது, சாமியார் இரயிலை நோக்கி ஓடிவருகிறான். இரயிலை நெருங்கும்போது அவனை சில ஜன்னல்கள் கடந்து செல்கின்றன...

நகரது கொண்டிருந்த இரயில்வண்டியில் ஏறிய சாமியார், ரேகா நந்தினி இருவரையும் நோக்கி நடக்க ஆரம்பித்தான். தன்மேல் போத்தி இருந்த போர்வையை சட்டென்று விசிரியப்படி எடுக்கிறான்.

சாமியார் ரேகா, நந்தினி இருவரையும் நெருங்கிவிட்டான்.

அவர்கள் அமர்ந்திருந்த இருக்கை காலியாக தென்படுகிறது. அவர்கள் இருவரையும் காணவில்லை....

அவர்கள் இருவரை தேடியும் கிடைக்கவில்லை. கீழே இறங்கி நடைப்பாதையிலும் தேட தொடங்குகிறான். அங்கேயும் இல்லை என்றவுடன் மறுபடியும் இரயில்வண்டியில் ஏறி உள்ளே பார்க்கிறான்.

இரயில்வண்டி வேகமாக செல்லத் தொடங்க சாமியாரின் நம்பிக்கை போய்விடுகிறது.

CUT TO:

**I/E. CONTESSA. TRICHY HIGHWAY - DAY**

புகைப்படத்தை மிகவும் ஆர்வமாக பார்த்து கொண்டிருக்கும் சிங்காரம் கேள்வியுடன் தொடங்குகிறான்.

SINGARAM
எப்பிட்றா?

LANKAN
நல்லா உத்து பாரு.

பச்சை கலர் சேலை அணிந்திருந்த பெண்ணையும், ரேகாவிர்க்கு பின்னால் இருக்கும் ஓர் பிம்பத்தையும் ஓரக்கண்ணால் பார்க்க தொடங்குகிறான் சிங்காரம். ஏதோ ஒன்றை உணர்ந்து கொள்ள அவன் கண்கள் விரிய தொடங்கியது.

SINGARAM
அது கோபுரம்...

LANKAN
ஸ்ரீரங்கம் கோபுரம்டா மொக்க. நீ சொன்னியே பாம்பேகாரி அவ பாம்பேல இல்ல; கல்யானமாகி ஸ்ரீரங்கத்துல செட்டில் ஆயிட்டா. கழுத்தில பாரு தாலி. ரேகா ஓடலடா, இங்கதான் போயிருக்கா.

CUT TO:

**EXT. SRIRANGAM STATION, PLATFORM - DAY**

இரயில்வண்டி சென்றுவிட்டது. இனி ஒரு ஆபத்தும் இல்லை என்று உணர்ந்து ரேகா, நந்தினியை தன்னுடன் வருமாறு அழைத்து செல்கிறாள்.

தண்டவாளத்தை தாண்டி இருவரும் நடந்து கொண்டிருக்க, ஒரு வேலி அடைப்பப் நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர்.

நடைப்பாதையில் இருக்கும் ஒரு வழிகாட்டி பலகை. அந்த இடம் ஸ்ரீரங்கம் என்பதை குறிக்கிறது.

**INTERMISSION**

**I/E. DEVANAYAGI'S HOUSE, OUTSIDE DOOR - DAY**

கதவை திறக்க ரேகா, நந்தினி இருவரும் வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை பார்த்து திகைத்து போகிறாள் தேவனாயகி.

DEVANAYAGI
ரேகா! நீயா?

அவளின் முகத்தை பார்த்து பயந்து போகிறாள், தேவனாயகி.

(CONTINUED)

CONTINUED:

DEVANAYAGI (CONT'D)
என்ன ஆச்சு...முகமெல்லாம்...?

REKHA
ஒரு பெரிய பிரச்சன. எல்லாத்தையும் அப்பறம் சொல்றன்.

தேவனாயகி, சூழ்நிலையை புறிந்து கொள்கிறாள்.

DEVANAYAGI
இது யாரு?

மனதில் ஒரு கேள்வியுடன் நந்தினியை பார்க்கிறாள்.

REKHA
இது...நந்தினி.

நந்தினியின் முகத்தில் புன்சிரிப்பு.

REKHA (CONT'D)
நாங்க...ஒரு ரெண்டு மூணு நாள் இங்க...

DEVANAYAGI
முதல்ல உள்ள வா, எல்லாத்தையும் அப்பறம் பேசிக்கலாம்.

வீட்டில் உள்ளே இருவரும் வர, தேவனாயகி கதவை மூடுகிறாள்.

CUT TO:

**I/E. CONTESSA. TRICHY HIGHWAY/ICE FACTORY - DAY**

லங்கன் காரை ஓட்டி வர, சிங்காரம் யாரையோ தொடர்பு கொள்ள முயற்சிக்கிறான்.

LANKAN
யாருக்குடா?

SINGARAM
துரைசிங்கத்துக்கு தான். அவன் வேற கடுப்புல ஃபோன கட் பண்ணிட்டான். பொண்ண தூக்கிட்டான்னா சின்னையாவுக்கு என்னன்னு பதில் சொல்றது?

LANKAN
அப்போ நான் சொல்றத கேளு. சின்னையாக்கு ஒரு ஃபோன் போடு.

லங்கனை கோபத்துடன் பார்க்கிறான் சிங்காரம்.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM
சின்னையா-வுக்கா?

நம்பிக்கையுடன் தன் கண்களை சிமிட்டுகிறான் லங்கன்.

SINGARAM (CONT'D)
டேய், அவன் பேசவே மாட்டான் டா.

கடுமையான பார்வையுடன் பார்க்கிறான், லங்கன்.

SINGARAM (CONT'D)
நான் வேணும்னா ஒரே ஒரு தடவ
துரைசிங்கத்துக்கு போட்டு பாக்குறன்.
(off his look)
பாத்ரூம் கீத்ரூம் போயிருந்தா, எந்திரிச்சு வரதுக்கே
ஒரு மணி நேரம் ஆகும்டா.

LANKAN
டேய், கேக்குறதே உயிர் பிச்ச, அதை சின்னையா
கிட்ட கேளு.

SINGARAM
(to himself)
என்னமோ..ஜான் ஏறுனா மொழம் சறுக்குது.

விருப்பமே இல்லாமல் கைப்பேசியில் அழைக்க தொடங்குகிறான்...

கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை சிங்காரமும் மணியும் ஒருவருக்கொருவர் பேசி கொள்கின்றனர்.

கைப்பேசி அடிக்கத் தொடங்குகிறது.

SINGARAM (CONT'D)
(into phone)
ஹெலோ...சின்னையா..

மணி பதில் அளிக்கிறான்.

MANI
சொல்லு..

SINGARAM
மணியா? பொண்ணு திருச்சி ட்ரேயின்ல
போய்ட்றுக்கு.

MANI
பொண்ண பிடிச்சிட்டு ஃபோன போடு.

காலை துண்டிக்கிறான் மணி... லங்கன் சிங்காரத்தை பார்க்கிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

LANKAN
என்ன ஆச்சு?

SINGARAM
கட் பண்டான் டா. ஒருத்தன் பேசமாட்டான்,
இன்னொருத்தன் பேசுறத கேக்கமாட்டான்.

LANKAN
திருப்பி ட்ரை பண்ணு.

மறுபடியும் அழைக்க தொடங்குகிறான்.

SINGARAM
மணி...ஹெலோ..இருக்கீங்களா? ஹன்..ஒர் சிக்கலு.
அந்த பொண்ணு, துரைசிங்கத்துக்கு சொந்தமானது.
நான் ஒரு நாளைக்கினு சொல்லிதான் எடுத்திட்டு
வந்தன்.

MANI
ம்ம்...அத ஏன் நீ முன்னாடியே சொல்லல?

SINGARAM
எங்க சொல்ல விட்டீங்க?

MANI
சரி இப்ப சிக்கல் என்ன?

SINGARAM
அவனுக்கும் எப்படியோ பொண்ணு ட்ரேயின்ல
போவுதுன்னு தெரிஞ்சுடுச்சு. பொண்ண அவன்
ட்ரேயின்ல தூக்கிட்டான.?

சாய்ந்தபடி, சின்னையாவின் காதுகளில் முனுமுனுக்கிறான், மணி.

SINGARAM (CONT'D)
ஹெலோ மணி...இருக்கீங்களா?

சொல்வதை கேட்ட சின்னையா முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியும் இல்லாமல்
தலையை அசைக்கிறான்.

MANI
(back on the phone)
நீ போற படி போ. பொண்ண துரைசிங்கம் தூக்க
மாட்டாரு. நான் அவர்கிட்ட பேசிக்கிறேன்.

SINGARAM
அப்ப சரி, மணி. நான்...
(...)
சாவுகிராக்கி.

(CONTINUED)

CONTINUED: (3)

MANI
சாவுகிராக்கி.

CUT TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, LIVING ROOM - DAY**

சுமார் 6 வயதிருக்கும் அப்பு என்ற ஒரு சிறுவன், ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டிருக்கிறான். அவனின் அருகே நந்தினி நின்று கொண்டிருக்க சில புகைப்படங்கள் அவ்விடத்தில் ஆங்காங்கே தொங்கி கொண்டிருப்பது தெரிகிறது. அற்ப்பமான பார்வையுடன் அப்பு பார்த்து கொண்டிருக்க நந்தினி அவனை பார்த்து சிரிக்கிறாள்.

NANDHINI
உன் பேர் என்ன?

எந்த ஒரு பதிலும் கொடுக்காமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

NANDHINI (CONT'D)
ஹே, குட்டி குண்டு..உன்ன தான்...

மெதுவாக நந்தினியை பார்க்க தொடங்கினான். செய்கையில் காட்டுகிறாள் நந்தினி.

NANDHINI (CONT'D)
பேச்சு வராதா?
(she sighs)
அய்யோ பாவம்.

அதற்கும் பதில் அளிக்காமல் திரும்பி கொள்கிறான், அப்பு.

NANDHINI (CONT'D)
இங்க பாறேன்..

அப்பு அவள் பக்கம் திரும்ப, திடீரென அவனை பயமுறுத்துகிறாள்.

APPU
அம்மா!

சிரித்துக் கொண்டே திரும்ப, அம்மு என்ற 16 வயது சிறுமியை பார்க்கிறாள், நந்தினி. சுவற்றில் சாய்ந்தபடி, குளிர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்த அவள் நந்தினியை பார்த்து முறைக்க தொடங்குகிறாள்.

அம்மு, நந்தினியின் பக்கத்தில் வருகிறாள்.

AMMU
உன் பேர் என்ன?

சில நொடிகள் ஒருவருக்கொருவர் பார்த்து கொண்டே இருக்கின்றனர்.

(CONTINUED)

CONTINUED:

AMMU (CONT'D)
ம்ம்?

NANDHINI
கந்தசாமி.

ஓரக்கண்ணில் பார்க்க தொடங்குகிறாள், அம்மு.

NANDHINI (CONT'D)
(mimics a tough voice)
ஊருகுள்ள என்ன அப்படிதான் கூப்பிடுவாங்க.

AMMU
ஓ...நீதானா அது? உன்னதான் போலீஸ் தேடிட்டு இருக்கு போல.

அம்மு சொல்வதை கேட்டு, நந்தினி பயந்து போகிறாள்.

DEVANAYAGI (O.S.)
அம்மு...அந்த தண்ணி சுட்டுச்சான்னு கொஞ்சம் பாரு.

போட்டி போடும் பார்வையுடன் இருவரும் பார்த்து கொண்டிருக்க, அம்மு உள்ளே செல்கிறாள்.

தலையை துவட்டிக்கொண்டு ரேகா உள்ளே வருகிறாள்.

REKHA
(to nandhini)
ஏய், எந்திரி. போய் குளிச்சிட்டு வா.

NANDHINI
குளிக்கனுமா? நானா? ஐயோ...ஜுரமா இருக்கு. அப்பறம் குளிக்கிறேனே.

REKHA
நடிச்சது போதும். மொதல்ல போய் குளி. எந்திரி...

அமர்ந்து கொண்டிருந்த நந்தினியை இழுத்து குளியல் அறையின் உள்ளே தள்ளுகிறாள். முடியாது என்று பிடிவாதம் பிடிக்கிறாள், நந்தினி.

NANDHINI
உடம்பெல்லாம் வலிக்குது. ஐயோ...என்ன இப்படி படுத்துறியே.

அப்பு மூக்கை மூடி கொள்ள, நந்தினி அவனை தாண்டி செல்கிறாள்.

NANDHINI (CONT'D)
டேய், குட்டி குண்டு. வந்து உன்ன கவனிச்சிக்கிறன்.

(CONTINUED)

CONTINUED: (2)

திரும்பியப்படி அப்பு ஓடி விடுகிறான்.

CUT TO:

**I/E. TIRUCHI STATION/DORAI SINGAM'S HOUSE. CHAMBER - DAY**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை சாமியாரும், துரைசிங்கமும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கின்றனர்.*

இரயில்வண்டியிலிருந்து வெளியே இறங்கி நடைப்பாதையில் ஓடுகிறான். எல்லா இடத்திலும் தேடி பார்த்த சாமியாரின் கண்களுக்கு அவர்கள் தென்படவில்லை. கைப்பேசியை எடுத்து யாரையோ அழைக்க தொடங்கினான்.

DORAI SINGAM
(into phone)
பொண்ண பிடிச்சிட்டியா?

SAMIYAR
அண்ண, மிஸ் ஆயிடுச்சு. ஸ்ரீரங்கத்திலேயே எகிறிட்டாங்கனு நினைக்கிறன். நம்ம பசங்கள விட்டு தேட சொல்லவா?

மணி, துரைசிங்கத்தின் முன் நின்று கொண்டிருக்கிறான்.

DORAI SINGAM
தேவ இல்ல. விட்ரு.

SAMIYAR
அண்ண?

DORAI SINGAM
விட்டுர்ரா..

தலையை நிமிர்ந்து பார்க்கிறான் துரைசிங்கம். நின்று கொண்டிருந்த மணி அவனை பார்த்து நாகரீகத்துடன் சிரிக்கிறான்.

CUT TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, BATHROOM - DAY**

மர இருக்கை ஒன்றில் நந்தினி அமர்ந்து கொண்டிருக்க, ரேகா அவளை குளிப்பாட்டி கொண்டிருக்கிறாள்.

NANDHINI
இன்னும் கொஞ்சம் ஷாம்பூ போடு, நொறையே வரல.

REKHA
போதும், போதும் நிறைய போட்டாச்சு.

(CONTINUED)

CONTINUED:

நந்தினியின் தலையை பிடித்து விடுகிறாள்.

NANDHINI
ஆமா? நம்மல தேடி போலீஸ் வருமா?

ரேகா புருவம் சுருக்குகிறாள்.

REKHA
யாரு சொன்னா?

NANDHINI
இல்ல நானேதான் கேட்டேன்.

REKHA
அதெல்லாம் வர மாட்டாங்க.

அவளின் தலையை தேய்க்க தொடங்குகிறாள், ரேகா.

NANDHINI
பாத்து தேய்...வலிக்குது.

REKHA
இப்படி தேச்சாதான் அழுக்கு போகும்.

NANDHINI
ஆ..! கண்ணு எறியுது.

REKHA
ஹே, ரொம்ப சீன் போடாத.

தலையை தேய்த்து கொண்டே இருக்க, நந்தினியின் முதுகில் தென்பட்ட தழும்புகளை தடவி பார்க்கிறாள்.

NANDHINI
என்ன்ன பாக்குற? அது..அவ குடுத்தது.

REKHA
அவ...னா?

NANDHINI
அந்த பேய்.

REKHA
யாரு..உன் சித்தியா?

நந்தினி ஆம் என்று தலையை ஆட்டுகிறாள்.

REKHA (CONT'D)
உன் அப்பா..எதும் கேக்கல?

CONTINUED: (2)

NANDHINI
நல்லா கேட்டாரு....நான் கத்தி அழுதத.

ரேகா பேச தொடங்குகிறாள்.

NANDHINI (CONT'D)
உனக்கு ஒன்னு தெரியுமா? மொத மொதல்ல ஸ்கூலுக்கு போறப்ப, எல்லாரும் அழுவாங்க இல்ல? நான் மட்டும் சிரிச்சிகிட்டே போனேனு எங்க அம்மா சொல்லுவாங்க.

நந்தினியின் தலையை துவட்ட தொடங்குகிறாள்.

NANDHINI (CONT'D)
(beat)
அப்பேலர்ந்து எனக்கு...எல்லாமே இப்படி தான்.

REKHA
எப்படி?

NANDHINI
என்ன பாத்துக்குரன்னு வந்தவ, வீடு விட்டு தொறத்திட்டா. பனியன் கம்பெனில சேத்து விடுறன்னு சொல்லி ஒருத்தன் என்ன கொண்டுப்போய் வித்துட்டான். நீ கூடதான்...

ரேகா ஒரு நொடி அவளை பார்க்க...

NANDHINI (CONT'D)
...ட்ரேயின்லேயே என்ன விட்டுட்டு போய்டுவன்னு நினைச்சேன்...

அப்படியே திரும்பியப்படி ரேகாவின் கண்களை பார்க்கிறாள்.

NANDHINI (CONT'D)
விட்டுட்டு போ மாட்ட இல்ல?

REKHA
மாட்டேன்

NANDHINI
ப்ராமிஸ்?

REKHA
ப்ராமிஸ்

நந்தினியின் ஆடையை பிழிந்து கய்ற்றில் காய வைக்கிறாள், ரேகா.

REKHA (CONT'D)
சரி. எந்திரிச்சு வா, போய் சாப்பிடலாம்.

(CONTINUED)

CONTINUED: (3)

NANDHINI
எனக்கு போட ட்ரெஸ் இல்லயே!

CUT TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, ROOM - DAY**

CLOSE SHOT

தேவனாயகி கையிலிருந்த ஜீன்ஸ் பேண்டை பிடுங்க தொடங்குகிறான், அப்பு.

APPU
மாட்டன். நான் தர மாட்டன்...

DEVANAYAGI
டேய், இது உனக்கே பெருசு.

முடியாது என்று தன் தலையை ஆட்டுகிறான்.

APPU
குடுக்க மா....ட்டன்!

DEVANAYAGI
அடம் பிடிக்காத டா.

நந்தினி, ஒரு பெரிய டர்க்கி துண்டை கட்டியப்படி உள்ளே வருகிறாள். அவளை பார்த்தவுடன் இருக்கமாக பிடித்திருந்த பேன்டை விட்டு விடுகிறான்.

தேவனாயகியாள் நம்ப முடியவில்லை.

அவனின் கண்களை பார்த்தபடி தன் கையை நீட்டுகிறாள்.

NANDHINI
குடு.

பயந்து போன அப்பு, ஜீன்ஸ் பேன்டை அவளிடம் கொடுக்கிறான். அதை வாங்கி கொண்டு சென்றுவிடுகிறாள்.

அவள் செல்வதை உற்று பார்த்து கொண்டிருக்கிறான்.

CUT TO:

**INT. DOSS HOUSE, PRAY AREA - DAY**

பூஜை மணியின் ஓசை, ஒரு அலங்கரித்த புனித நினைவுச் சின்னத்தை முழங்கி கொண்டிருக்கிறது. தாஸ் மிகவும் பக்தியுடன் தன் நெற்றியில் பட்டை அடித்தபடி கையில் ஒரு மணியுடன் கடவுளின் முன்னால் மந்திரம் ஓதி கொண்டிருக்கிறார். ருத்ராக்ஷ மாலை ஒன்றை அவரது கழுத்தில் அணிந்திருக்கிறார்.

(CONTINUED)

CONTINUED:

பத்தியின் புகை அந்த இடம் முழுவதும் நிரம்பிய படி தெரிய சின்னையா, மணி, வேலு மூவரும் அறைகுள்ள வருகின்றனர்.

யாரோ அங்கு வந்திருப்பதை உணர்ந்த தாஸ், சூடத்தை பற்றவைத்து பூஜை செய்யும் ஆராத்தியை காண்பிக்கிறார். மணி, வேலு இருவரும் அதை தொட்டு கும்பிட, சின்னையா பணிவான முறையில் அதை மறுக்கிறான்.

பூஜையை முடித்த தாஸ், சின்னையாவை பார்க்கிறார்.

DOSS
சின்னா, அப்பா நல்லா இருக்காரா?

எப்பொழுதும் போல் சின்னையா புலப்படாமல் சிரிக்க தொடங்குகிறான். என்ன செய்ய வேண்டும் என்று, இருவருக்கும் புரிந்துவிடுகிறது.

**INT. DOSS HOUSE, OFFICE ROOM - DAY (CONTINUING ACTION)**

வீட்டில் இருக்கும் ஒரு அறையை அலுவலக அறையாக மாற்றிய தாஸ், அதன் நுடுவில் தேக்கு மரத்தில்லான மேஜை ஒன்றை வைத்திருக்கிறார்.

முக்கியமான விஷயம் பேச நேறிட்டதால் வேலு அந்த அறையின் ஜன்னல் கதவுகள் அனைத்தையம் மூடுகிறான்.

தாஸ் கொஞ்சம் குழம்பி போனார்.

DOSS
சின்னா, என்ன நடக்குது? யார் இவங்கல்லாம்?

தாஸ் சொல்ல வந்ததை முடிப்பதற்க்குள், அவறை ஓர் இருக்கையில் அமர்த்தி கட்டிவிடுகிறான், மணி.

DOSS (CONT'D)
டேய், என்னஙகடா நனைச்சிட்டு இருக்கிங்க?

தாஸ் கத்த தொடங்கியதால் வேலு அவரின் தலையை நிமிற்றி அவர் அணிந்திருந்த ருத்ராட்ச்ச மாலையால் அவரின் வாயை கட்டுகிறான்.

மேஜையின் ஒரு ஓரமாக அமர்ந்திருந்து மிகவும் சாந்தமான முறையில் அவரை பார்த்து கொண்டிருக்கிறான், சின்னையா. கையில் ஒரு கத்திரியை எடுத்து அவர் பக்கத்தில் செல்கிறான்.

பேசவே முடியாமல் பயங்கரமாக உறுமத் தொடங்குகிறார்.

மெதுவாக அவனை நோக்கி நடந்த சின்னையா, குனிந்து அவரை பார்க்கிறான். அந்த ருத்ராட்ச்சத்தை சுமந்து கொண்டிருந்த கயிற்றை பத்திரமாக வெட்டுகிறான், சின்னையா. ருத்ராட்ச்சம் தாஸின் வாயில் தவறி விழுகிறது.

CHINNAIAH
மறந்துட்டன்னு நேனச்சியா?

(CONTINUED)

CONTINUED:

தன் கைகளால் தாஸின் வாயில் அறைய அந்த ருத்ராட்ச்சம் அவரின் தொண்டையில் போய் சிக்குகிறது. மூச்சு திணற ஆரம்பித்தார் அவர்.

தாஸின் கண்கள் மேலே செல்ல, மூச்சு விட முடியாமல் தவிக்க தொடங்குகிறார்.

அவரை அந்த நிலையில் பார்த்த சின்னையா மிகவும் சந்தோஷம் அடைகிறான்.

**INT. DOSS HOUSE, OFFICE ROOM DOOR - DAY (CONTINUING ACTION)**

கதவின் விரிசல் வழியாக பார்க்க,

இருக்கை கீழே விழ தாஸின் தலை பயங்கரமாக தரையில் முட்டுகிறது. இறந்து விட்டார் தாஸ்!

**INT. DOSS HOUSE, OFFICE ROOM - DAY (CONTINUING ACTION)**

சின்னையாவின் முகம் தளர்ந்து காணப்படுகிறது.

இறந்துப்போன தாஸின் பக்கத்தில் சென்று, தலையில் எத்துகிறான் மணி. தொண்டையில் சிக்கி இருந்த ருத்ராட்சம், தாஸின் வாயில் இருந்து உருண்டு சென்றது.

**INT. DEVANAYAGI'S HOUSE, KITCHEN - DAY**

சுவற்றில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்திருக்கிறாள், ரேகா. தேவனாயகி காய்கறியை நறுக்கி கொண்டிருக்கிறாள்.

DEVANAYAGI
என்ன நடந்துச்சுன்னு தான் சொல்ல மாட்டேங்குற.
அந்த குழந்தையாவது யாருனு சொல்லு.

REKHA
என்ன மாதிரி...வீட்ட விட்டு ஓடி வந்தவ.

DEVANAYAGI
என்ன, எதாவது மாமாகிட்ட மாட்டிருப்பா.

ரேகா ஆம் என்று தலையை அசைக்கிறாள்.

DEVANAYAGI (CONT'D)
ம்ம், உலகத்தில என்னனமோ மாறுது, ஆனா
இந்த தொழிலும், மாமா பசங்களும் மாறவே
மாட்டானுங்க.

REKHA
அவ மாட்டினதுக்கு நானும் ஒரு காரணம்.

CONTINUED:

ரேகா சொல்வதை கேட்டு தேவனாயகி அதிர்ச்சி அடைகிறாள்.

REKHA (CONT'D)
அப்படி பாக்காத அக்கா. ஒவ்வொரு நாளும் லாட்ஜ் வாசல்ல எவனாவது வருவானா, நாளு காசு கிடைக்குமான்னு தவிச்சிகிட்டு இருந்த எனக்கு, அப்ப தப்புனு தோனல.
(...)
ஆன என்ன நடக்க போவுதுனு கூட தெரியாம அவ சிரிச்சிகிட்டே இருந்தா பாரேன், அப்பதான் யாரோ என்ன செருப்பால அடிச்ச மாதிரி இருந்துச்சு.
(beat of silence)
வேடிக்கைய பாத்தியா? மாட்டிவிட்ட நானே, இப்ப அவள இங்க கூட்டிட்டு வந்திருக்கேன்.

DEVANAYAGI
(off her look)
நீ திருப்பி தொழிலுக்கு போய் இருக்க கூடாது ரேகா.

REKHA
தப்புதான்...

தேவனாயகியின் பக்கத்தில் செல்கிறாள்.

REKHA (CONT'D)
(whispers)
அக்கா, ஒரு வேல நான் இல்லனா, நீ நந்தினிய பாத்துக்குவியா?

DEVANAYAGI
என்ன பேசர, நீ? எனக்கு புரியல.

REKHA
ஏன், எதுக்கு, என்னனெல்லாம் என்ன கேக்காத. நந்தினிய நீ பாத்துக்குவியா?

ரேகாவின் வேண்டுகோளை மறுக்கிறாள்.

DEVANAYAGI
மாட்டன். அவ உன்ன நம்பிதான் வந்திருக்கா. உன் வாழ்க்கையும் அவளால புதுசா ஆரம்பிச்சி இருக்கு, ரேகா. அத வேணாம்னு ஒதுக்காத.

வெளியே அமர்ந்திருந்த நந்தினியை பார்க்கிறாள், ரேகா.

DEVANAYAGI (CONT'D)
நந்தினிய நீ காப்பத்துலடி; அவ தான் உன்ன காப்பாத்தியிருக்கா.

(CONTINUED)

CONTINUED: (2)

ரேகா, நந்தினி இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து சிரித்து கொள்கின்றனர்.

**I/E. CONTESSA. TRICHY HIGHWAY - DAY**

புகைப்புடத்தை மும்முரமாக பார்க்கிறான், சிங்காரம்.

SINGARAM
அங்கே போய் வீட எப்டிடா கண்டுபிடிக்குறது?

LANKAN
ச்ச! ஃப்ரியா விடுனல்ல? ஃப்ரியா விடு. நான் பாத்துக்குறன்.

SINGARAM
இல்ல, ஃபோட்டொல வேற எதுவும் தெரியல, அதான்...

மரத்தின் அடியில் அமர்ந்திருந்த மாம்பலம் விற்கும் பாட்டியின் பக்கத்தில் காரை நிறுத்துகிறான், லங்கன்.

LANKAN
அந்த பாட்டி கிட்ட ரெண்டு பொட்டலம் வாங்கு.

குளம்பி போகிறான், சிங்காரம்.

SINGARAM
பொட்டலமா? அது கிட்டையா? மாங்கா விக்குற கிழவி கிட்ட, பொட்டலம் கேக்க சொல்ற?

அவனை பார்த்து செயற்கையாக சிரிக்கிறான், லங்கன்.

LANKAN
(confidently)
மாங்காவ? ஹே பாட்டி, இங்க வா.

அந்த பாட்டி காரின் பக்கத்தில் வர,

LANKAN (CONT'D)
(winks)
ரெண்டு மொழம் பூ கிடைக்குமா?

சிரக்கனித்து உள்ளே பார்த்த அந்த பாட்டி,

PAATI
முன்னூறு ரூபா.

LANKAN
டேய், காசு எடு.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM
காசா..?

LANKAN
என்ன, இழுக்குற? ரேகா வீட்ல ஆட்டைய போட்ட இல்ல? அத இங்க குடு.

ரேகாவின் வீட்டில் அவன் சுருட்டிய பணத்தை எப்படி பார்த்தான் என்று யோசித்தபடி, விருப்பமே இல்லாமல் பணத்தை எடுத்து அந்த பாட்டியிடம் கொடுக்கிறான், சிங்காரம்.

SINGARAM
டேய், எப்பட்றா...?

கொடுத்த பணத்திற்க்காக இரண்டு கஞ்சா பொட்டலத்தை கொடுக்கிறாள், அந்த பாட்டி.

LANKAN
(with a smirk)
கண்ண தொறந்துகிட்டே தூங்குறவன் நீ. தூங்குறப்ப கூட கண்ண துறந்துகிட்டு இருக்கிறவன் நான்.

சிங்காரம் முழிக்கிறான்.

LANKAN (CONT'D)
புரியல? நீ வெறும் மாங்காவுக்குதான் லாயக்கி, பேசாம வா, வீடு மேட்டர நான் பாத்துக்குறன்.

கார் மிகவும் வேகமாக செல்ல தொடங்குகிறது.

**INT. DEVANAYAGI'S HOUSE, SLEEP AREA - DAY**

தரையில் படுத்திருந்த ரேகாவின் கண்கள் மூடி இருந்தது. களைப்பாக இருந்தாலும் அவள் மனதில் உள்ள பயம் அவளை அமைதியாக தூங்க விடவில்லை.

**EXT. ALLEYWAY, DREAM - NIGHT**

குறுகிய தெரு ஒன்றிர்க்கு செல்ல, தெருவின் முடிவில் ஒரு கருப்பு நிற கம்பளியுடன் வயதான பெண் ஒருவள் குளிர்காய்வதை பார்க்கிறோம்.

இன்னும் கொஞ்சம் பக்கத்தில் செல்ல....போத்தி இருந்த கம்பளியை விரித்து அவள் யார் என்பதை வெளிப்படுத்துகிறாள். அவள் வேறு யாரும் இல்லை, சிங்காரம் தான். அவன் நந்தினியை பிடித்து வைத்திருக்கின்றான். இருவரும் ரேகாவை பார்த்து சிரிக்க தொடங்குகின்றனர்.

SINGARAM
நம்ம தொழிலுக்கு செண்டிமென்ட் எல்லாம் வேலைக்காகாது ரேகா.

(CONTINUED)

CONTINUED:

மாயமான முறையில் ஸ்விட்ச் ப்ளேட் ஒன்று அவன் கையில் தோன்ற சிங்காரம், நந்தினி இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து கொண்டு தலையை அசைகின்றனர். திடீரென சிங்காரம் நந்தினியின் கழுத்தை அறுக்கிறான்.

CUT BACK TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, SLEEP AREA - DAY (CONTINUING ACTION)**

படார் என்று விழித்தெழுகிறாள் ரேகா. யதார்த்தத்தில் மூழ்குகிறாள்...

ஆடைகளை மாற்றிகொண்டு ரேகா பக்கத்தில் இருந்த மற்றொரு அறைக்கு செல்ல அங்கே நந்தினி ஒரு ஓரமாக சுருண்டபடி படுத்திருப்பதை பார்க்கிறாள். சில நொடிகள் அவளை பார்த்துவிட்டு வரவேற்பறைக்கு செல்கிறாள்.

**INT. DEVANAYAGI'S HOUSE, WELL - DAY**

மெது நாற்காலி ஒன்றில் அமர்ந்தபடி தேவனாயகி, பின்னிக்கொண்டிருக்கிறாள். தலை நிமிர்ந்து அங்கே வந்து  நின்ற ரேகாவை பார்க்கிறாள்.

REKHA
அக்கா, நான் கிளம்புறேன்.

DEVANAYAGI
(puzzled)
ஏய், எங்க கிளம்பிட்ட?

REKHA
நான் இங்க இருக்குறது எனக்கு சரியா படல.
பெரிய பிரச்சனை ஆயிடும்.

தேவனாயிகியின் கண்களை பார்த்து பேசுகிறாள்.

REKHA (CONT'D)
நந்தினிய நீதான் பாத்துக்கனும். தப்பா
நினைக்காத. நான் மாசம் மாசம் எப்படியாவது
பணம் அனுப்புறேன்.

எழுகிறாள் தேவனாயகி.

DEVANAYAGI
என்னடி இது? உனக்கு என்ன பைத்தியமா? இப்ப
தான் அவ்வளவு சொன்னேன்.

REKHA
அதெல்லாம் கேக்க தான்க்கா நல்லா இருக்கும்,
நெஜத்தில ஒத்துவராது.

(CONTINUED)

CONTINUED:

DEVANAYAGI
அந்த பொண்ணு எந்திரிச்சு நீ எங்கனு கேட்டா,
நான் என்னன்னு சொல்லுவன்.

ரேகா ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியின் பக்கத்தில் செல்கிறாள்.

REKHA
நான் போய்ட்டேன்னு சொல்லு. அவ புரிஞ்சுப்பா.

ஒரு சில நொடிகள் மௌனம் காத்த ரேகா மெதுவாக சிரிக்க தொடங்கினாள்.

DEVANAYAGI
நீ எங்கடி போவ?

REKHA
திருப்பி பாம்பே போறேன். என் கஷ்டம்
என்னோடயே போகட்டும். யார் வந்து கேட்டாலும்,
நான் இங்க வந்திட்டு போனன்னு காமிச்சிக்காத.

ரேகா வீட்டை விட்டு வெளியே செல்ல தேவனாயகி முடங்கியபடி நின்று
கொண்டிருக்கிறாள்.

**I/E. CONTESSA, SRIRANGAM STREET - DAY(EVENING)**

ஸ்ரீரங்கத்தின் உள்ளே கார் செல்கிறது. பதட்டத்துடன் எழுகிறான் சிங்காரம்.

LANKAN
ஏய், எந்திரி டா.

SINGARAM
ம்ம்...ம்ம்ம்..?

சிங்காரம் தன் கண்களை திறக்கிறான்.

LANKAN
எந்திரி டா. வந்தாச்சு.

SINGARAM
எங்க, எங்க?

LANKAN
ஸ்ரீரங்கம் வந்தாச்சு டா.

SINGARAM
வீடு?

LANKAN
கண்டு பிடிக்கலாம். கண்ணாடி எறக்கு.

(CONTINUED)

CONTINUED:

லங்கன் காரை மெதுவாக ஓட்டி செல்ல கார் கதவின் கண்ணாடியை இறக்குகிறான் சிங்காரம். நடு வயதிருக்கும் பட்டர் ஒருவர் காரை கடந்து செல்கிறார்.

BHATTAR
(humming a tune)
*மானஸ சன்ச்சரரே..*

LANKAN
(leans across)
சாமி. வெள்ளை கோபுரம் எந்த பக்கம்?

BHATTAR
(with an iyengar twang)
அடே நம்ம கிழக்கு கோபுரம். கிழக்காலே தான் போகனும்.

LANKAN
கிழக்குனா எந்த பக்கம், சாமி?

BHATTAR
அப்படியே லெஃப்ட்ல போங்கோ.

SINGARAM
கார் போகுமா?

BHATTAR
பெருமாள் தேரே போகுது, கார் போகாதா? போங்கோ.

ஒரு இளமையான ஐயங்கார் மாமி அவரை தாண்டி செல்ல, பட்டர் அந்த மாமியை பார்த்து பாடத் தொடங்குகிறார்.

BHATTAR (CONT'D)
(hums)
*மானஸ சன்ச்சரரே...*

SINGARAM
டேய், போகுமான்டா.

LANKAN
(at singaram)
து! கேக்குற கேள்விய பாரு? கண்ணாடிய ஏத்து.

**INT. DEVANAYAGI'S HOUSE, KITCHEN - DAY (FLASHBACK)**

தூக்கத்திலிருந்து எழுந்த நந்தினி ரேகாவை தேடியப்படி தேவனாயகியுடன் செல்கிறாள்.

NANDHINI
ரேகா எங்க?

(CONTINUED)

CONTINUED:

தேவனாயகிக்கு என்ன பதில் அழிப்பது என்று தெரியவில்லை.

DEVANAYAGI
தூங்கி எந்திரிச்சிட்டியா? இடு நான் சாப்பிட எதாவது ரெடி பண்றேன்.

தண்ணை விட்டு சென்றிருப்பாளோ என்று பயந்தாள் நந்தினி.

NANDHINI
ரேகா எங்க?

DEVANAYAGI
அது வந்து...முக்கியமான விஷயமா பாம்பே போயிருக்கா. ஒரு வாரத்துல...வந்து உன்ன கூட்டிட்டு போறன்னு சொன்னா.

அம்மு உள்ளே வருகிறாள்.

DEVANAYAGI (CONT’D)
அம்மு, நீ இன்னைக்கி ட்யூஷன் போகாத. நம்ம எல்லாம் சேந்து மலை கோட்டைக்கு போய், நந்தினி-க்கு புது ட்ரெஸ் எடுதிட்டு வரலாம்.
(tO nandhini)
சரியா?

தோள் அசைத்து அங்கிருந்து செல்கிறாள் அம்மு.

NANDHINI
என்கிட்ட ஒரு வார்த்த சொல்லிட்டு போயிருக்கலாம் இல்லா?

DEVANAYAGI
வந்தா..நீ ரொம்ப அசந்து தூங்கிட்டு இருந்தியா...அதான். கண்டிப்பா ஃபோன் பண்றன்னு சொன்னா.

தகவலை அறிந்த நந்தினி உணர்ச்சிவசப்படவில்லை.

DEVANAYAGI (CONT’D)
ரேகா இல்லனா என்ன, நாங்கல்லா இருக்கோம் இல்ல?

நந்தினி, அம்முவை பார்க்க மென்சிரிப்புடன் இருக்கிறாள் அம்மு.

NANDHINI
ரேகா எப்போ போனா?

**I/E. CONTESSA, SRIRANGAM STREET - DAY(EVENING)**

புகைப்படத்தை பார்த்துக்கொண்டிருக்க அதன் பின்னனி வண்ணம் உண்மையானது. ஏறக்குறைய அந்த இடம் புகைப்படத்தில் இருந்தப்படியே காட்சியளித்தது.

LANKAN
இதான் ஏறியா. இங்க எங்கயோதான் இருக்காங்க. ஒரு ரவுண்ட் உட்டோம்னா வீட கண்டு பிடுச்சிடலாம்.

அந்த இடத்தை பார்த்து சிங்காரத்தின் மனதில் சந்தோஷம் பொங்கியது.

**EXT. SRIRANGAM STREET - DAY(EVENING) (CONTINUING ACTION)**

நந்தினி வேகமாக சாலையை கடந்து செல்கிறார். நுனியிழை அளவில், சிங்காரமும், லங்கனும் அவளை தவற விடுகின்றனர்.

**I/E. CONTESSA, SRIRANGAM STREET - DAY(EVENING)**

லங்கன் சிங்காரம் இருவரும் ஏறியாவுக்குள் செல்கின்றனர்.

காரை மெதுவாக ஓட்டியபடி சிங்காரத்திடம் பேசுகிறான் லங்கன்.

LANKAN
சிங்காரம் அங்கே பார் பட்டம் பறக்குது.

மொட்டைமாடியில் ஒரு ஓரமாக நின்றப்படி பட்டம் விட்டுகொண்டிருக்கிறான் அப்பு.

**INT. DEVANAYAGI'S HOUSE - DAY(EVENING)**

கல்யாண இருக்கையை பார்க்கிறாள், தேவனாயகி.

DEVANAYAGI
நந்தினி...நந்தினி....
(sotto)
இங்க தான இருந்த...

வீடு முழுவதும் நந்தினியை தேடி கொண்டிருக்கிறாள்...

DEVANAYAGI (CONT'D)
நந்தினி...எங்க இருக்க?
(anxious)
அம்மு... நந்தினி எங்க?

AMMU
தெரியல மா. இங்க எங்கயாவது தான் இருப்பா.

வீட்டின் கதவு திறந்து கிடக்க ஏதோ ஒன்றை உணர்கிறாள்...

(CONTINUED)

CONTINUED:

DEVANAYAGI
அய்யயோ!அம்மு, வீட்ட பாத்துக்கோ.

வேகமாக வந்து கதவை திறக்க லங்கன் நின்றுக்கொண்டிருக்கிறான். திகைத்து போனாள் தேவனாயகி.

LANKAN
ரேகா இருக்காங்களா?

DEVANAYAGI
நீ..ங்க?

LANKAN
மட்ராஸ்லேர்ந்து வரன். விடிய காலைல ஃபோன் பண்ணி அவசரமா கொஞ்சம் பணம் வேணும்னு கேட்டு இருந்தாங்க.
(off her look)
உள்ள வரலாங்களா?

குலம்பிபோன தேவனாயகி விருப்பமே இல்லாமல் கதவை திறக்கிறாள்.

DEVANAYAGI
(hesitatingly)
வாங்க.

SINGARAM
(looks OS at singarm)
சர்...இந்த வீடு தான்..

சிங்காரமும் தோன்ற, லங்கனுடன் சேர்ந்து வீட்டின் உள்ளே செல்கிறாள்.

DEVANAYAGI
ஆனா ரேகா இங்க வரலயே.

LANKAN
வரலயா? ம்ம்...ஏதோ பெரிய பிரச்சனனு வேற சொன்னாங்க.

DEVANAYAGI
எனக்கு எதுவும் தெரியாது, சர்.

LANKAN
(to himself)
என்ன பன்னலாம்?
(to devanayagi)
பணத்த வேணா உங்க கிட்ட குடுத்திட்டு போறன்.

DEVANAYAGI
அதெல்லாம் வேணாங்க. உங்க நம்பர மட்டும் குடுத்திட்டு போங்க. ரேகா இங்க வந்தா, நான் கூப்பிட சொல்றன்.

(CONTINUED)

CONTINUED: (2)

சிங்காரத்தின் முகம் வாடத் தொடங்குகிறது.

LANKAN
மேடம், பாத்ரும் யூஸ் பண்ணிக்லாங்களா?

வழி காட்டுகிறாள் தெவனாயகி.

**INT. DEVANAYAGI'S HOUSE, BATHROOM - DAY(EVENING) (CONTINUING ACTION)**

கழிவறையின் உள்ளே சென்ற லங்கன் நந்தினியின் ஆடைகள் காய்ந்து கொண்டிருப்பதை பார்க்கிறான். தனக்குள் ஒரு மனகணக்கை போட்டு கொள்கிறான்.

BACK TO:

**INT. DEVANAYAGI'S HOUSE - DAY(EVENING)**

மறுபடியும், லங்கன் வரவேற்ப்பறைக்கு செல்கிறான்.

LANKAN
சரி, அப்ப நாங்க கிளம்புறோம்.

கிளம்புவதற்க்கு எழுகிறான் லங்கன்.

LANKAN (CONT'D)
குடிக்க தண்ணி கிடைக்குமா?

தலையை சிமிட்டியபடி அடுப்பறைக்குள் செல்கிறாள், தேவனாயகி.

LANKAN (CONT'D)
(to singaram)
போடா, போய் பிஸ் அடிச்சிட்டு வா.

SINGARAM
டேய் இருக்குற டென்சன்ல ஒரு சொட்டு கூட வராதுடா. எல்லாம் உள்ள தான்டா போவுது.

LANKAN
உள்ள போய் அடி, எல்லாம் தானா வெளிய வரும்.

தன் முகத்தை சுழித்துக்கொண்டு கழிவறையினுள் செல்கிறான் சிங்காரம்.

கைகளில் இரண்டு டம்ளர் தண்ணீருடன் வருகிறாள், தேவனாயகி.

அதிர்ச்சி அடைந்த சிங்காரம், கழிவறையிலிருந்து எட்டி பார்க்கிறான்.

'ஷ்ஷ..' என்று சிங்காரத்திடம் செய்கை காண்பித்த லங்கன், தேவனாயகியிடம் இருந்து தண்ணீரை வாங்கி மெதுவாக குடிக்கிறான்...

(CONTINUED)

CONTINUED:

LANKAN (CONT'D)
(threateningly)
எங்கடி ரேகா?

**EXT. SRIRANGAM STATION, PLATFORM, THIS SIDE - DAY(EVENING)**

ஓர் அகல இருக்கையில் ரேகா கையில் பயணச்சீட்டுடன் அமர்ந்திருக்கிறாள். சுமார் நந்தினியின் வயதில் இருக்கும் ஒரு சிறுமி அங்கே விளையாடி கொண்டிருப்பதை பார்க்கிறாள்.

தனக்கே தெரியாமல், ஏதோ ஒரு நினைப்புடன் கையில் வைத்திருந்த பயணச்சீட்டை கசக்க தொடங்குகிறாள். என்ன செய்கிறோம் என்று உணர்ந்து, மீண்டும் அந்த பயணச்சீட்டை சரி செய்கிறாள்.

**EXT. SRIRANGAM STATION, PLATFORM, THE OTHER SIDE - DAY(EVENING)**

கூட்டத்தின் வழியாக நடந்து வந்த நந்தினி, டிக்கெட் கவுன்டர் பக்கத்தில் செல்கிறாள். மிகவும் ஆர்வமாக இருந்தாலும், அவளின் முகத்தில் பயம் தெரியவில்லை.

மிகவும் சுறுசுறுப்பாக கூட்டத்தின் நடுவே நடந்து செல்கிறாள்.

திடீரென யாரோ அவளின் தோளை பிடித்து திருப்ப, நந்தினி ரேகாவை பார்க்கிறாள்.

REKHA
(shocked)
இங்க என்னடி பண்ற? தேவா அக்கா எங்க?

NANDHINI
என்ன விடு.

கையை தட்டிவிட்டு மறுபடியும் நடக்க தொடங்குகிறாள், நந்தினி. நந்தினி அங்கிருந்து ஓட தொடங்க, ரேகாவும் அவளை பின்தொடர்கிறாள்.

REKHA
(annoyingly)
நில்லு...எங்க போற?

ஓடுவதை நிறுத்திய நந்தினி, ரேகாவை பார்த்து கைக்கோர்த்து கும்பிட்டாள்.

NANDHINI
என்ன தயவு செஞ்சு விடுறியா? நான் ஒன்னும்
உன்ன பாக்க வரல. கிளம்பு.

போய் ஒரு இருக்கையில் அமர்ந்து கொள்கிறாள், நந்தினி. ரேகா அவள் பக்கத்தில் செல்கிறாள்.

CONTINUED:

REKHA
என்ன திருப்பி ஓடி வந்திட்டியா?

NANDHINI
(indifferently)
நீ மட்டும் சொல்லிட்டா வந்த?

REKHA
நான் என்ன சொன்னாலும், இப்போ உனக்கு புரியாது.

NANDHINI
நான் உன்ன எதாவது கேட்டனா?

அவர்களை தாண்டி சென்ற ஒருவன், நந்தினியிடம் விசாரிக்க தொடங்குகிறான்.

SOMEONE
என்ன பாப்பா எதாவது பிரச்சனையா?

NANDHINI
(curtly)
உன் வேலைய பாத்திட்டு போ.

SOMEONE
(to rekha)
புள்ளைய பெத்து வெக்க சொன்னா, தொல்லைய பெத்து வச்சிருக்க.

ரேகா சிரிக்க தொடங்க, அதை பார்த்த நந்தினி கொஞ்சம் மென்மையாகிறாள்.

REKHA
அவனும் என்ன உன் அம்மானு நெனச்சிட்டான்.

NANDHINI
(sarcastic)
அவனுக்கி உன்ன பத்தி தெரியல. நீ என் அம்மாவா ஆவ முடியாது.

REKHA
(taps Nandhini’s shoulders)
நந்தினி, நான் சொன்னா கேளு. நீ தேவா அக்கா கூட இருக்குறதுதான் சரி. அவங்க உன்ன நல்லா பாத்துக்குவாங்க.

NANDHINI
எனக்கு அவங்க எல்லாம் வேண்டாம்.
(looks at her)
நான் உன்கூடயே வரன்.

CONTINUED: (2)

REKHA
சொன்னா புரிஞ்சுக்கோ, நீ என்கூட இருக்க முடியாது நந்தினி. பாம்பே ரொம்ப மோசமான இடம்.

NANDHINI
அப்போ நீ ஏன் அங்க போற?

REKHA
எனக்கு வேற வழி தெரியல.

NANDHINI
அப்போ மட்டும் ப்ராமிஸ் பண்ண...விட்டுடே போ மாட்டன்-ன.

இரயில்வண்டி வந்துகொண்டிருக்கும் சப்தம் கேட்க ரேகா கொஞ்சம் யோசித்து முடிவுக்கு வருகிறாள்.

REKHA
சரி, வா கிளம்பலாம்.

**INT. DEVANAYAGI'S HOUSE, LIVING ROOM - NIGHT**

லங்கன், சிங்காரம் இருவரும் தேவனாயகியின் வீட்டில் இருக்கிறார்கள்.

SINGARAM
என்னது பாம்பேவா? டேய் என்னடா சொல்றா? இப்போ என்னடா பண்றது?

LANKAN
(to singaram)
ஏய், வாய மூட்றா.

லங்கன் ஒரு சிகரெட்டை பத்த வைக்கிறான்.

LANKAN (CONT'D)
(to devaayagi)
என்னடி கதையா உட்ற? பாம்பே போறவளுக்கு, மெட்ராஸ்லேர்ந்து போக தெரியாதா? ஸ்ரீரங்கத்துக்கு ஏன் வந்தா...காபி சாப்பிடவா?

DEVANAYAGI
என் வந்தான்னு எனக்கு தெரியாது.

சிகரெட்டின் புகையை தேவனாயகியின் முகத்தில் ஊதுகிறான்.

LANKAN
நான் சொல்லவா? ஏன் வந்தான்னு நான் சொல்லவா? உனக்கும் ரேகாவுக்கும் என்ன கனக்ஷன்னு நான் சொல்லவா?
(MORE)

(CONTINUED)

CONTINUED:

LANKAN (CONT'D)
நீ பாம்பேல என்னவா இருந்தன்னு நான் சொல்லவா? அம்மு குட்டி...உங்க அம்மா யாருனு உனக்கு தெரியுமா?

DEVILISH GUY
(softly)
அந்த பொண்ண விட்டுட்டு போக வந்தா.

LANKAN
என்னது?

DEVANAYAGI
அந்த பொண்ண இங்க விட்டுட்டு போக வந்தா.

LANKAN
அந்த பொண்ணு இப்போ எங்க?

DEVANAYAGI
ஓடிட்டா.

SINGARAM
என்னது?

சிங்காரத்தை முறைக்க தொடங்கினான், லங்கன்.

DEVANAYAGI
ரேகாவை தேடிதான் போயிருப்பான்னு நினைக்கிறன்.

சென்று கொண்டிருக்கும் இரயில்வண்டியின் சப்தம் கேட்க, லங்கன், சிங்காரம் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துகொள்கின்றனர்.

LANKAN
இரயில்வே ஸ்டேஷன் எங்க?

DEVANAYAGI
இங்க தான் பக்கத்துல.

LANKAN
(to devanayagi)
போலாம் வா.
(to singaram)
நீ இங்கயே இருந்து பசங்கள பாத்துக்கோ.

அங்கிருந்து கிளம்பலாம் என்று நினைத்தபோது, தேவனாயகியின் வீட்டில் பெல் அடிக்க தொடங்குகிறது. எல்லோரும் குழம்பி போனார்கள்.

சிங்காரத்தை கதவிற்க்கு பின்னால் மறைந்துக்கொள்ள சொல்கிறான். கதவை மெதுவாக திறக்கிறான் லங்கன்.

(CONTINUED)

CONTINUED: (2)

REKHA
(entering)
அக்கா!

SINGARAM
என்ன ரேகா, சௌக்கியமா?

படால் என்று கதவை மூடுகிறான், லங்கன். ரேகா திரும்பி பார்க்க, சிங்காரம் அங்கே நின்று கொண்டிருக்கிறான். சிங்காரம், ரேகாவின் கண்ணத்தில் அறைய, அவள் கீழே விழுகிறாள்.

SINGARAM (CONT'D)
பொழைக்க வழி சொன்னா, நாயே, என் உசுருக்கே ஒல வக்கிறியா?

கதவின் பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த லங்கன், அவர்களை நன்றாக கவனித்து கொண்டிருக்கிறான்.

SINGARAM (CONT'D)
செத்து இருப்பன்டி, இந்நேரம்.

லங்கன், நந்தினியை பிடித்து கொள்கிறான்.

SINGARAM (CONT'D)
(to devanayagi)
இதான் பாம்பேயா?

தேவனாயகி, அம்மு, அப்பு மூவரும் அலற தொடங்கினர்.

SINGARAM (CONT'D)
(to lankan)
லங்கா, கட்றா அதுங்கள.

மூவரையும் கை காட்டுகிறான் சிங்காரம். லங்கன் அவர்களை கட்டுவதற்க்கு செல்கிறான்.

நந்தினி தன் கைகளை லங்கனிடமிருந்து இழுத்து, ரேகாவிடம் ஓடுகிறாள்.

REKHA
(sobbing)
சிங்காரம், என்ன என்னவேனாலும் பண்ணு, இந்த பொண்ண மட்டும் விட்றுயா.

சிங்காரம் தன் கைப்பேசியை அடுத்து மணிக்கு அழைக்க தொடங்குகிறான்.

SINGARAM
என்னடி பாசமா? பெத்தவ மாதிரி உருகுற?
(into phone)
மணி? பொண்ணு பிடிச்சிட்டோம்... ஸ்ரீரங்கத்துல தான் இருக்கோம். சரிங்க...இங்கயே இருக்கன்..சரிங்க...நான் பாத்துக்குறன்.

(CONTINUED)

CONTINUED: (3)

SINGARAM (CONT'D)
(looks at lankan)
கிளம்பி வராங்க.
(to rekha and Nandhini)
பாருடீ, என் கையெல்லாம் ஒதறுது. பாதி உசுரு போயிடுச்சுடீ. அங்க என்னதான்டீ பண்ணி தொலச்சீங்க.?

**INT. CHINNAIAH'S LIVING ROOM - NIGHT**

மணி சின்னையாவிடம் சென்று முனுமுனுக்கிறான்

MANI
ஸ்ரீரங்கம்

CHINNAIAH
(looks up)
ம்ம்..

MANI
(to velu)
வண்டிய ரெடி பண்ணு.

தலையை சிமிட்டியபடி அங்கிருந்து செல்கிறான், வேலு.

**INT. DEVANAYAGI'S HOUSE, LIVING ROOM - NIGHT**

ரேகா, நந்தினி இருவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் சிங்காரம். லங்கன் ஒரு ஓரமாக அமர்ந்திருந்து நந்தினியை பார்த்து கொண்டிருக்கிறான்.

SINGARAM
பாதி உசுரு  போயிடுச்சு டீ.

ரேகாவை அறைவதற்க்கு கை ஓங்குகிறான் சிங்காரம், தன் கைகளை கட்டுபடுத்தி கொள்கிறான்.

SINGARAM (CONT'D)
பாருடீ, என் கையெல்லாம் ஒதறுது.
(calmly)
அங்க என்னடீ நடந்துச்சு? என்னதான்டீ பண்ணி தொலச்சீங்க.?

ரேகா, நந்தினி இருவரும் தேம்பியபடி அழுது கொண்டிருக்கிறனர்.

FLASH BACK TO:

**INT. SALOON - NIGHT (FLASHBACK)**

**CLOSE SHOT**

நந்தினி அழகு படுத்த படுகிறாள். நந்தினியின் கண் இமைகளுக்கு மை பூச படுகிறது.

NANDHINI
இதல்லாம் எதுக்கு?

REKHA
ஃப்ரெண்ட் வீட்டுக்கு போறோம் இல்ல. அழகா இருக்க வேண்டாமா?

NANDHINI
கூட அவன் வரானா?

REKHA
இல்ல.

NANDHINI
அப்பா...! சரியான லூசு மண்ட.

ரேகா சிரிக்க தொடங்கினாள்.

REKHA
கொஞ்சம் வாய தொற.

உதடு சாயத்தை எடுத்து, நந்தினியின் உதட்டில் போடுகிறாள்.

NANDHINI
நீ போட்டுக்கலையா?

REKHA
(shakes her head)
இன்னிக்கு நீதான் ராணி.

ஒரு நொடி நந்தினியை பார்த்து வியந்து போனாள் ரேகா. மிக வேகமாக அந்த வியப்பிலிருந்து வெளியே வருகிறாள்...

REKHA (CONT'D)
இந்தா, இத போய் போட்டு வா.

புதிய ஆடை ஒன்றை அவளிடம் கொடுக்கிறாள், ரேகா.

அதை வாங்கி கொண்டு அங்கே இருந்த மர தடுப்பிற்க்கு பின்னால் போய் மாற்றி கொள்கிறாள்.

வாங்கி கொண்ட ஜீன்ஸ் பேன்டையும், டி ஷர்டையும் தடுப்பிற்க்கு மேல் போடுகிறாள்.

NANDHINI (O.S.)
இன்னைக்கே திரும்பி வந்துருவோமா?

ரேகாவிடம் கேட்கபட்ட கேள்வியை தவிற்க்கிறாள்.

(CONTINUED)

CONTINUED:

NANDHINI (CONT’D)
ட-டா...எப்படி இருக்கு?

REKHA
ரொம்ப அழகா இருக்க.

கதவை தட்டுகிறான், சிங்காரம்

SINGARAM (O.S.)
ஏய்.. கிளம்பியாச்சா? வண்டி வர நேரம் ஆச்சு.

நந்தினி, ரேகா இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்தபடி கதவை திறக்கிறார்கள்...

MATCH CUT TO:

**I/E. BLACK SEDAN, ECR - NIGHT**

கருப்பு வண்ண நீளமான கார் ஒன்று ஈசிஆர் ரோட்டில் சென்றுகொண்டிருக்கிறது.

ரேகா, நந்தினி இருவரும் அதன் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டிருக்க, பச்சமுத்து அந்த காரை ஓட்டி செல்கிறான்.

சப்தமே இல்லாத அந்த ரோட்டில் பார்த்து கொண்டே அமர்ந்திருக்கிறாள் நந்தினி.

மிகவும் படப்படப்புடன்  அமர்ந்திருந்த ரேகா, நந்தினியை பார்த்து கொண்டிருக்க ஒரு பெரிய இரும்பு கதவுகள் கோரமான சப்தத்துடன் திறக்கப்படுகிறது.

**EXT. BEACH HOUSE, BLACK GATE - NIGHT**

SLOW MOTION

பாம்புகளின் வடிவு போல் அமைக்கபட்டிருந்த அந்த கதவுகள் திறக்க, கருப்பு வண்ண கார் உள்ளே சென்றது.

CUT TO:

**INT. BEACH HOUSE - NIGHT**

வெள்ளை வண்ணத்தில் ஜொலித்த பெரியையா அங்கு தோன்றுகிறார். தன் கைகளை பேண்டின் உள்ளே வைத்து நின்றுக் கோண்டிருக்க, நந்தினி காரில் இருந்து குதித்து வருவதை பார்க்கிறார்.

**EXT. BEACH HOUSE, PORTICO - NIGHT**

ரேகா மிகவும் பத்திரமாக நந்தினியை உள்ளே அழைத்து செல்கிறாள்.

**INT. BEACH HOUSE, LIVING ROOM - NIGHT**

அந்த வீட்டில் உள்ள பெரிய வரவேற்ப்பறையின் உள்ளே போக, ரேகாவின் நிம்மதி பறி போய் விட்டது. சுற்றி பார்த்தால் அனைத்தும் வெள்ளை வண்ணத்தில் இருந்தது. வீட்டின் திரைகள், மார்பிள்கள், தோல் இருக்கைகள் அனைத்தும் வெள்ளையாக காட்சி அளிக்க்கிறது.

PERIAIAH
(to nandhini)
என்ன...குடிக்குற?

நந்தினிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

PERIAIAH (CONT'D)
ம்ம்ம்..?

நந்தினியின் தொண்டை வறண்டு போனதால், விழுங்க முயல்கிறாள்.

PERIAIAH (CONT'D)
ஆரெஞ் ஜூஸ்? இல்ல..கோக்?

நந்தினிக்கு அங்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. நந்தினியை பார்த்து அனுஅனுவாக ரசிக்கிறான், பெரியையா. ரேகா அசௌளகரியமாக அமர்ந்திருக்கிறாள்.

NANDHINI
எது வேணுனாலும்..

PERIAIAH
(with a steely smile)
ரெண்டும் தரேன், பிடிச்சத எடுத்துக்கோ.

நந்தினி சிரிக்க தொடங்குகிறாள்.

அந்த அறையின் ஓரத்தில் இருந்த குளிர் சாதன பெட்டியின் அருகே செல்கிறார், பெரியையா. சிலிர்ந்த காற்று வீச தொடங்க, திரைகள் ஆட தொடங்குகிறது.

ஜொலிக்கும் இரு கண்ணாடி டம்ளர்களில் ஜூஸை ஊற்றி அதை கொண்டு வருகிறார் பெரியையா. அவரின் கண்கள் நந்தினியையே பார்த்து கொண்டிருக்க, கையில் கொண்டு வந்த ஜூஸை மேஜையின் மேல் வைக்கிறார். வைக்கப்பட்ட ஜூஸையும், பெரியையாவையும் உற்று பார்க்கிறாள், நந்தினி. பயத்தினால் ரேகா காய்ச்சல் வருவது போல் உணர்ந்தாள்.

பெரியையா தன் கால்களை மடக்கி மேஜையின் மேல் வைத்தபடி சுருட்டு ஒன்றை பற்ற வைக்கிறார். இன்பத்தை அனுபவிக்க ஆரம்பித்தார்.

PERIAIAH (CONT'D)
எடுத்துக்கோ.

ஆரஞ்ச் ஜூஸை எடுப்பதற்க்கு முன், ஒரு நொடி ரேகாவை பார்க்கிறாள், நந்தினி.

CONTINUED:

பெரியையா சுருட்டை பிடித்து கொண்டிருக்கிறார். அதிலிருந்து வரும் வெள்ளை புகை, அவரின் முகத்தை சுற்றி அழைந்துக் கொண்டிருந்தது. அவரின் நாக்கின் நுனியில் எஞ்சி இருந்த புகையிலையை எடுப்பதற்க்கு தன் விரல்களை பயன்படுத்துகிறார்.

PERIAIAH (CONT'D)
உன் பேர் என்ன?

NANDHINI
(hesitates)
நந்தினி.

இரண்டு கைகள் அந்த கிளாஸை பிடித்துகொண்டு அதை குடித்து கொண்டிருக்கிறாள், நந்தினி.

அவளின் தொண்டையில் இறங்குவதை மிகவும் நுன்னியமாக பார்த்து கொண்டிருக்கிறார் பெரியையா.

குடித்து முடித்த அந்த கிளாஸை கீழே வைக்கிறாள்.

NANDHINI (CONT'D)
இது உங்க வீடா?

பெரியையா 'ஆம்' என்று தலையை ஆட்டுகிறார்.

PERIAIAH
பிடிச்சிருக்கா?

NANDHINI
(she sizes up)
ரொம்ப பெருசா இருக்கு.

நந்தினியிடமிருந்து நகர்ந்து போய் சுருட்டை அனைக்கிறார். வேட்டைக்கு தயாராகிறார் பெரியையா.

அவருக்கு தெரிந்திராத அந்த நேரத்தில் கோக்கை ரேகாவிடம் தள்ளி வைக்கிறாள், நந்தினி.

நந்தினிக்கு நடக்கவிருப்பதை நினைத்து பார்த்தால், ரேகாவினாள் தாங்க முடியவில்லை.

PERIAIAH
வீட சுத்தி பாக்குறியா நந்தினி?

பெரியையா, நந்தினியிடம் தன் கையை கொடுக்க விருப்பமே இல்லாமல் அவரை பிடித்து தன் இருக்கையில் இருந்து எழுகிறாள்.

NANDHINI
(nods)
ம்ம்...

(CONTINUED)

CONTINUED: (2)

நந்தினியை புரிந்து கொண்ட பெரியையா, தன் விரல்களால் அவளின் முகத்தில் தடவ ஆரம்பிக்கிறார். நந்தினி, ரேகா இரண்டு பேரின் எதிர்வினைக்கும் நன்றாக வித்தியாசம் தெரிகிறது.

NANDHINI (CONT'D)
(to rekha)
நீ வரலியா?

நந்தினி ஒரு நொடி நின்று ரேகாவை பார்க்கிறாள். ரேகா கொஞ்சம் அசௌகரியமாக உணர்கிறாள்.

PERIAIAH
அவ வரமாட்டா, நீ வா.

பெரியையாவுடன் சேர்ந்து நந்தினியும் சென்று கொண்டிருக்கிறாள்.

REKHA
காசு?

பெரியையா தன் தலையை திருப்பி ரேகாவின் கண்களை பார்த்து பேசுகிறார்.

PERIAIAH
தரேன். போகும்போது வாங்கிக்க.

படிகட்டுகளை நோக்கி பெரியையா, நந்தினியையும் இழுத்து சென்று கொண்டிருக்கிறார்.

காற்று மிகவும் பலமாக அடிக்க ஜன்னல்கள் படாரென்று அடிக்க தொடங்குகிறது.

அந்த அறையில் சஞ்சலமான மௌனம் சூழ்கிறது. ரேகாவின் தொண்டை வறண்டு போக, அங்கே இருந்த கோக்கை விருப்பமே இல்லாமல் எடுத்து குடிக்க தொடங்குகிறாள். அவளின் கைகள் நடுங்க தொடங்குகிறது.

என்னதான் மென்மையும் வழவழப்புமாய் அந்த அறை இருந்தாலும் அந்த இடம் முழுவதும் துர்கீர்த்தியை உணர்கிறாள்.

ரேகாவின் காதுகளுக்கு யாரோ பெருமூச்சி விடும் சப்தம் மிக தெளிவாக கேட்க அதை பின் தொடர்ந்து ஒரு சிறுமியின் அலறல் சப்தமும் கேட்க தொடங்குகிறது.

NANDHINI
வேண்டாம்...வேண்டாம்...அம்மா....ஐயோ...
அம்மாாா......!

என்னதான் இனைந்த ஒலிகளாக இருந்தாலும் ஒவ்வொன்றும் ரேகாவின் நெஞ்சில் குத்தியது போல் இருந்தது. ரேகாவின் கைகள் பயங்கரமாக நடுங்க தொடங்குகிறது.

எந்த ஒரு சப்தமும் இல்லாமல் மௌனம் சூழ்ந்த அந்த வேளையில் திடீரென அழுகை சப்தம் மேலே இருந்து கேட்க தொடங்குகிறது. ரேகாவின் கையில் இருந்த கிளாஸ் டம்ளர் தவறி கேழே விழுந்து உடைகிறது.

(CONTINUED)

CONTINUED: (3)

மெதுவாக அந்த படிகட்டுகளில் ஏறி அந்த அறையை நோக்கி செல்கிறாள்.

**INT. BEACH HOUSE, CORRIDOR - NIGHT**

ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க ரேகாவின் மனதில் பயம், கோபம். குற்றத்தன்மை அனைத்தும் அதிகமாகிறது.

NANDHINI
அம்மா....அம்மா....அம்மா....

கதவின் கைப்பிடியை பிடித்து திறக்க வெதுவெதுப்பான ஒளி வெளிச்ச அறையினுள் எட்டி பார்க்கிறாள். உள்ளே நடந்திருப்பதை பார்த்த ரேகாவின் கண்கள் மிகவும் அதிர்ச்சி அடைகிறது.

REKHA
அட பாவி!

CUT BACK TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, LIVING ROOM - NIGHT**

சிங்காரத்தின் முகத்தில் மிகவும் கடுமையான அடையாளம் தெரிகிறது.

SINGARAM
என்ன டி பண்ணிட்டு வந்திருக்கீங்க?
ஐயோ, ஐயோ, ஐயோ, ஐயோ.

ரேகா, நந்தினி இருவரும் அறையின் ஓரமாக அமர்ந்தப்படி தேம்பி அழுகிறார்கள்.

SINGARAM (CONT'D)
(to lankan)
கேட்டியா டா?

லங்கன் ஓர் இருக்கையில் அமர்ந்தபடி நந்தினியை முறைத்து கொண்டிருக்கிறான்.

REKHA
சிங்காரம், என்ன என்னவேணுனாலும் பண்ணு;
ஆனா தயவு செஞ்சி இந்த பொண்ண மட்டும்
விட்டுடு.

ரேகாவை அறைகிறான், சிங்காரம். நந்தினி பயத்தினாள் ரேகாவிற்க்கு பின்னால் தன் தலயை மறைத்து கொள்கிறாள்.

SINGARAM
விட்டுட்டு, என்ன சாக சொல்றியா?
(he indicated his
leg)
நீ ஃபோன் எடுக்குலங்குறத்துகே பாத்தியா?

(CONTINUED)

CONTINUED:

அந்த அறையை சுற்றி பார்த்தபடி லங்கனிடம் கூறுகிறான்.

SINGARAM (CONT'D)
டேய், லங்கா என்னடா சும்மா ஒக்காந்திருக்க?
எதாவது சொல்லுடா.
(to himself)
ஐயோ....எனக்கு மண்டை காயுது.

லங்கன் எந்த ஒரு பதிலும் அளிக்கவில்லை. மிகவும் அமைதியாக அழுது கொண்டிருந்த நந்தினியையே பார்த்து கொண்டிருக்கிறான், லங்கன்.

REKHA
சிங்காரம்...சிங்காரம்..பொண்ணு பாவம், சிங்காரம்.
அவள மட்டும் எப்படியாவது காப்பாத்து. நான், நீ
என்ன சொன்னாலும் கேக்குறேன்.

SINGARAM
(ignoring rekha)
இப்போ கேட்டு என்ன ப்ரியோஜனம்? என்ன
காரியம் பண்ணிட்டு வந்து இருக்கீங்கனு தெரிது
இல்ல?
(...)
காலி...மறந்துடு...கத முடிஞ்சுது.

திடீரென சிங்காரத்தின் கைப்பேசி அடிக்க தொடங்க அதை எடுத்து பதில் கூறுகிறான். மணியின் பேச்சு கேட்க தொடங்குகிறது.

MANI
(through the phone)
அரியலூர்...டால்மியா பக்கத்துல இருக்கிற செங்கல்
சூளைக்கி பொண்ண கூட்டிகிட்டு வா.

SINGARAM
சரிங்க மணி.

தலையை சிமிட்டி அழைப்பை துண்டித்த சிங்காரம், நந்தினியின் தலை முடியை பிடித்து கதவை நோக்கி இழுக்கிறான். ரேகா அழுது கொண்டிருக்க, நந்தினியை விடுபெற வைக்க, சிங்காரத்திடமிருந்து மறுபடியும் இழுக்க தொடங்குகிறாள்.

SINGARAM (CONT'D)
லங்கா...பிடிடா அவள.

கதவின் வழியாக நின்ற லங்கன் அவர்களை தடுத்து நிறுத்துகிறான்.

LANKAN
(to singaram)
எங்க போற?

லங்கன் செய்வதை பார்த்து குளம்பிபோகிறான், சிங்காரம்.

(CONTINUED)

CONTINUED: (2)

SINGARAM
சின்னையா ஃபோன் அடிச்சிட்டான் டா.

LANKAN
தெரியும்...உக்காரு...ஏன் அவசர படுற?

குளம்பி போன சிங்காரம் நந்தினியின் கைகளை விடுகிறான். ரேகா, நந்தினியை இழுத்து கொண்டு ஒரு ஓரமாக அமர்ந்து கொள்கிறாள்.

SINGARAM
டேய் என்னடா?

LANKAN
உக்காருடா. சொல்றேன்.

SINGARAM
என்னடா மென்டல் மாதிரி பேசுற?

LANKAN
உன் நல்லதுக்கு தான் சொல்றேன், சிங்காரம்.

SINGARAM
டேய் என்னடா வெளையாடுற? நகரு.

LANKAN
டேய் வெயிட்டு என் கயில. பேசாம உக்காரு.

லங்கன் தன் சாட்டையை இழுத்து மணி பார்க்கிறான்.

SINGARAM
என்னடா!

LANKAN
உக்காரு சொல்றேன்.

லங்கனின் செயலை பார்த்து அதிர்ச்சி அடைந்த சிங்காரம் கொஞ்சம் தள்ளி நின்று அவனையே பார்த்து கொண்டிருக்கிறான்.

தன் முகத்தை துடைத்து தயாராகிய லங்கன் சிங்காரத்திடம் பேசுகிறான்.

LANKAN (CONT'D)
சின்னையாவுக்கு ஒரு ஃபோன போடு.

SINGARAM
எதுக்கு டா?

LANKAN
போட்றா சொல்றன்.

CONTINUED: (3)

விருப்பமே இல்லாமல் தன் கைப்பேசியை எடுத்து சின்னையாவிற்க்கு அழைக்கிறான்.

CUT TO:

**I/E. CHINNAIAH'S SUV, TRICHY HIGHWAY - NIGHT**

பிளாக்பெர்ரி ஒன்று அடிக்க தொடங்க மணி அதை எடுத்து பேசுகிறான்.

MANI
சொல்லு...

SINGARAM
ஹெலோ! யாரு மணியா?

MANI
ஆமாம் சொல்ல!

சிங்காரம் பேச தொடங்க, அதை பிடுங்கி பேசுகிறான், லங்கன்

LANKAN
ஹெலோ, மணி...ஃபோன சின்னையா கிட்ட குடு.

MANI
நீ யாரு?

LANKAN
அத நான் அவர் கிட்ட சொல்லிக்குறன்...குடு..

MANI
நீ என்கிட்டயே சொல்லு.

LANKAN
டேய், குடுடா சின்னையா கிட்ட!

நாகரிகம் இல்லாத பேச்சை கேட்ட மணி திரும்பியபடி சின்னையாவை பார்க்கிறான்.

சினனையா கைப்பேசியை மணியிடமிருந்து வாங்குகிறான்.

CHINNAIAH
ம்ம்...

LANKAN
நீங்க கேக்குற பொண்ணு இப்போ என் கஸ்டடில தான் இருக்கு. உங்களுக்கே தெரியும், பொண்ணு துரைசிங்கத்துக்கும் தேவன்னு. ஆனா பொண்ணு என்னனமோ கதையெல்லாம் சொல்லுது. கதைய கேட்ட, உங்களுக்கு தான் பொண்ணு அதிகமா தேவபடுதுன்னு நெனைக்கிறன் -- ஏன்னா பெரியையா சமந்த பட்ட மேட்டர்ல? மைனர் பொண்ணு வேற, வெளில தெரிஞ்சா ஐயா பேரு...

(CONTINUED)

CONTINUED:

CHINNAIAH
ம்ம்...

LANKAN
(pretends to hesitate)
ஒரு அம்பது ரூபா குடுதீங்கனா..எல்லாதையும் ஸ்மூத்தா முடிச்சிக்கலாம்.

CHINNAIAH
ம்ம்..

அழைப்பை துண்டித்த சின்னையா கைப்பேசியை மணியிடம் குடுத்துவிட்டு எப்பொழுதும் போல் அவன் சிந்தனையில் மூழ்குகிறான்.

CUT TO:

**INT. DEVANAYAGI'S HOUSE, LIVING ROOM - NIGHT**

சிங்காரத்திடம் கைப்பேசியை லங்கன் தூக்கி எறிய, என்ன நடக்கிறது என்று புரியாமல், அதை பிடிக்காமல் போகிறான்.

SINGARAM
டேய் என்ன டா இப்படி பண்ணிட்ட?

LANKAN
கதைய முழுசா கேட்டல?

SINGARAM
அதுக்கு? நீ யாருகிட்ட வெளையாடுறனு தெரியுதா?

LANKAN
டேய், இவனோட பெரிய பீட்டர எல்லாம் நான் போண்டி ஆடி இருக்கன். மேட்டர் இல்லாம பேசுவனா?

SINGARAM
தப்பு பண்ணிட்ட, லங்கா. பெரிய தப்பு பண்ணிட்ட.

LANKAN
மைனர் பொண்ணு. எனக்கு எல்லாம் தெரியும். மூடிகிட்டு பொண்ண மட்டும் தூக்கு டீ.

லங்கன் தப்பு பண்ணியது போல் சிங்காரம் தன் தலையை ஆட்டுகிறான். லங்கனின் செயல் சிங்காரத்திற்க்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை.

CUT BACK TO:

**I/E. CHINNAIAH'S SUV, TRICHY HIGHWAY - NIGHT**

மெயின் ரோட்டில் சென்று கொண்டிருந்த கார் இடது பக்கம் திரும்பி சின்ன பாதை வழியாக செல்கிறது.

**I/E. CONTESSA, COUNTRY ROAD - NIGHT**

நகர்புற எல்லையில் மனித வாடையற்ற வழி ஒன்றில் லங்கன் காரை ஓட்டி செல்கிறான்.

SINGARAM
மெதுவா போ. இங்க எங்கயோ தான் திரும்பனும்

LANKAN
திரும்பி? டேய், நான் என்ன கூமுட்டையா..அவன் கூப்பிடுற எடத்துக்கு போக? ஃபோன போட்டு அவன இங்க வர சொல்லு.

சந்திர வெளிச்சம் நிறைந்த ஒரு பெரிய சமனிலத்தில் நோட்டம் விட்டபடி காரை மெதுவாக ஓட்டி செல்கிறான். மிகவும் இருட்டான ஒரு இடத்தில் காரை நிறுத்திவிட்டு வெளியே இறங்குகிறான்.

**I/E. CHINNAIAH'S SUV - NIGHT**

மணியின் கைப்பேசி மீண்டும் அடிக்க தொடங்குகிறது.

MANI
(into phone)
ஹெலோ...

LANKAN
நான் தான்.

MANI
சொல்லு.

**EXT. DARK OUTSKIRTS, COUNTRY ROAD - NIGHT**

லங்கன் தன் தொண்டையை சரி செய்து கொள்கிறான்.

LANKAN
என்ன, வெயிட் பண்ணறியா? இப்ப நான் சொல்ற எடத்துக்கு வா. வண்டிய நிப்பாட்டி சிக்னல் குடு. சொன்ன அமவுன்டோட வரல?

மணி, சின்னையாவை பார்க்க அவன் தன் தலையை சிமிட்டுகிறான்.

CONTINUED:

MANI
ம்ம்..சரி. பத்து நிமிஷத்துல இருப்போம்.

கைப்பேசியை துண்டித்தான் மணி.

LANKAN
பாத்தியா?

லங்கன் காரில் சாய்ந்தபடி சிகரெட் ஒன்றை பற்ற வைக்கிறான். சிங்காரத்திடம் ஒன்று குடுக்க வேண்டாம் என்று மறுக்கிறான்.

LANKAN (CONT'D)
இதோ பாரு, உன் தொழிலுக்கு ஒரு சென்டிமென்ட்னா, என் தொழிலுக்கும் ஒரு சென்டிமென்ட் இருக்கு. இப்ப நா பண்றது தப்பாதான் தெரியும், ஆனா நம்ம ரெண்டு பேரோட குறிக்கோள் ஒன்னு தான். மனி! பைசா மேகோ, தமாசா தேகோ. நோ மனி, நோ ஹனி.
(to rekha, winking)
என்ன ஹனி, கரெக்ட்டு தானே?

SINGARAM
உனக்கு அவன பத்தி தெரியாது டா.

LANKAN
எனக்கு மட்டும் பயம் இல்லனு நெனைக்கிறியா? எனக்கும் லேசா அள்ளு விடுது, ஆனா அத எல்லாம் பாத்தா வேளைக்கு ஆவுமா? ஆழம் தெரியாம கால விட மாட்டன், இந்த லங்கேஷ். அவன் வெயிட்ட எப்படி காட்றான்னு பாப்போம்? ஹெவீயா இருந்துச்சுனா அப்படியே ப்ளேட்ட மாத்திடுவோம். ஓரமா ஒதுங்கி நின்னு வேடிக்க பார்.

சின்னையாவின் கார் அங்கே வர, வேலு லங்கனிற்க்கு அறிவிப்பொளி காண்பிக்கிறான்.

CHINNAIH'S POV

அந்த பெரிய சமநிலத்தில் எதுவுமே தெரியவில்லை. மணியின் கைப்பேசி ஸ்விட்ச் ஆ்ஃப் ஆனது...

LANKAN (CONT'D)
அங்க நிறுத்து. அவன தனியா பணத்த அடுத்திட்டு வர சொல்லு.

காவி நிற பையுடன் காரில் இருந்து கீழே இறங்கினான், சின்னையா. சமநிலத்தின் நடுவே உள்ள இடத்தை நோக்கி நடந்தான். நடந்து சென்ற சின்னையா தன் கையில் வைத்திருந்த காவி பையை கீழே வைத்து அங்கேயே காத்திருக்கிறான்.

(CONTINUED)

CONTINUED: (2)

‘கிளிக்‘ என்ற சப்தத்துடன் ஒரு துப்பாக்கி, சின்னையாவின் தலையில் வைக்கப்படுகிறது.

LANKAN (CONT’D)
நகராத.

துப்பாக்கியை சின்னையாவின் தலையில் வைத்தப்படி கீழே வைக்கப்பட்டிருந்த காவி நிற பையை திறக்கிறான், லங்கன். மிகவும் கவனமாக தன் கையை உள்ளே விட்ட லங்கன், ஏதோ ஒன்று காகிதத்தில் சுத்தி வைக்கப்பட்டிருப்பதை உணர்கிறான்.

சின்னையாவின் மேல் ஒரு கண்ணை வைத்தபடி உள்ளே இருப்பதை துலவிக்கொண்டிருக்கிறான்.

அவன் கையில் ஏதோ ஒன்று தட்டுப்படுகிறது. குனிந்த பார்த்தால் இதற்க்கு முன்னால் பார்த்த கருநாகம் ஒன்று துரைசிங்கத்தின் வெட்டுப்பட்ட கையில் சுற்றி இருந்தது.

பயந்து போன லங்கன் தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியை கீழே போடுகிறான். சுற்றி இருந்த நாகப்பாம்பு இருளில் மறைந்து போனது.

விழுந்த துப்பாகியின் மேல் தன் காலை வைத்த சின்னையா அந்த சூழ்நிலையை தன் கட்டுப்பாட்டிற்க்கு கோன்டு வந்தான்.

மணி, வேலு இருவரும் சின்னையாவின் பின்னால் வந்து நின்றனர்.

CUT TO:

**EXT. SUGARCANE FIELDS - NIGHT**

சின்னையாவின் கார் வழி நடத்தி சென்றுக்கொண்டிருக்க, அடுக்கு ரொட்டியின் நடுவே வைத்தாற்போல் லங்கனின் கார் போக, அதை பின் தொடர்ந்து மெடடார் வேனும் சென்று கொண்டிருக்கிறது.

**I/E. CONTESSA, SUGARCANE FIELDS - NIGHT**

தன் கால்களை ஒட்டி வைத்து அமர்ந்திருந்த நந்தினியின் கண்களில் பயம் ஆடிக்கொண்டிருந்தது. ரேகா அமைதியாக இருக்க முயற்சிக்கிறாள், ஆனால் அவளால் முடியவில்லை.

லங்கன் மிகவும் அமைதியாக அமர்ந்திருக்க, சிங்காரம் தன் தொண்டையை சரி செய்து கொள்கிறான்.

SINGARAM
போனோமா, பொண்ண குடுத்தோமா, பைசா கிசா குடுத்தா வாங்கிகிட்டு வீட்டுக்கு போனோமானு இருந்திருக்கனும். ம்ம்..ஆசை யார விட்டுச்சு.

லங்கன் எந்த ஒரு பதிலும் கூறவில்லை.

(CONTINUED)

CONTINUED:

SINGARAM (CONT'D)
நான் அப்பவே சொன்னேன். ஓவரா
யோசிக்காதேனு. கேட்டியா? மாங்கா விக்குற
கிழவியும், சின்னையாவும் ஒன்னா? ஏதோ
உயிரோட வந்தோம்னு சந்தோஷ பட்டுக்க.

மெதுவாக எரிச்சல் ஆகிறான் லங்கன்.

LANKAN
(irritated and
helplessly)
டேய், வாய பொத்திகிட்டு வாடா.

SINGARAM
ஆனா ஒன்னு மச்சி. உன் புன்னியத்துல
துரைசிங்கம் பிரச்சனை முடிஞ்சிடுச்சு.

LANKAN
டேய், இப்போ வாய மூட போறியா, இல்லயா?

**I/E. CHINNAIAH'S SUV, SUGARCANE FIELDS - NIGHT**

மணி காரை ஓட்டி செல்ல, சின்னையா ஏதோ ஒரு சிந்தனையுடன் அமர்ந்திருக்கிறான்.

FLASH BACK TO:

**INT. BEACH HOUSE, BEDROOM - NIGHT (FLASHBACK)**

CLOSE SHOT

பெரியையாவின் தலை தரையில் படாரென்று தட்ட, அவரின் முகத்தில் பயங்கர வலி தெரிகிறது. வலியால் பயங்கரமாக கத்த நினைத்தும் அவரால் முடியவில்லை.

ANOTHER ANGLE

பெரியையாவின் உடம்பு முழுவதும் இரத்தம். அந்த குளறுபடியில் இருந்து ஊர்ந்து வர நினைக்கிறார்.

**EXT. DESOLATE PATHWAY - NIGHT**

ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு வழியாக, இரண்டு கார்கள் சென்றுக்கொண்டிருக்க, இறுதியாக பழைய கதவு ஒன்றை நோக்கி திரும்புகிறது.

FLASH BACK TO:

**INT. BEACH HOUSE, BEDROOM - NIGHT (FLASHBACK)**

எப்படியோ முயற்சி செய்து, தொலைப்பேசியின் பக்கத்தில் வந்த பெரியையா, அது வழியாக ஏதோ ஒரு எண்ணிற்கு அழைத்தார். தூரத்தில் ஏதோ கைப்பேசி அடிக்க தொடங்குகிறது...

PERIAIAH
(into phone, groaning)
சின்னா! சின்னா!

நிலை தடுமாறி விழுகிறார், பெரியையா...

BACK TO:

**EXT. BRICK KILN - NIGHT**

சில தூரம் கடந்து வந்த கார்கள் செங்கல் சூளையின் முன் அடுத்தடுத்து வந்து நிற்கிறது.

**I/E. CONTESSA, BRICK KILN - NIGHT**

பின் கதவை திறக்கிறான் சிங்காரம்.

SINGARAM
எறங்கு கீழ.

REKHA
எல்லாமே நான் தான் பண்ண. இந்த பொண்ணு பாவம், இவள மட்டும் விட்டுடு.

காரில் இருந்து கீழ இறங்கிய லங்கன் அந்த இடத்தை நோட்டம் விட அவனுக்குள் பயம் வந்தது.

SINGARAM
எல்லாம் தெரியும் டி, இறங்கு.

அழுதும் கெஞ்சியும் பார்க்கிறாள், நந்தினி.

NANDHINI
(crying)
என்ன விடு...ஐயோ அக்கா...

**I/E. CHINNAIAH'S SUV, BRICK KILN - NIGHT**

மணி, வேலு இருவரும் காரில் இருந்து கீழே இறங்குகின்றனர். மணி கையில் ஒரு துப்பாக்கியுடன், கான்டஸாவின் பக்கத்தில் காத்திருக்க, வேலு காரின் பின்னாலிருந்து கடப்பாரையையும், மண்வெட்டியையும் எடுத்து கொள்கிறான்.

(CONTINUED)

CONTINUED:

தன் கைகளை கட்டிக்கொண்டு சொந்த உலகத்தில் அமர்ந்திருந்தான், சின்னையா.

**EXT. BRICK KILN - NIGHT**

லங்கன், சிங்காரம் இருவரும் நந்தினி, ரேகாவை இழுத்து செல்வதால் இரண்டு பெண்களும் தடுக்க முயற்சிக்கிறார்கள்.

NANDHINI
ஆ...விடுரா என்ன.

லங்கனை தள்ள முயல்கிறாள், ரேகா.

REKHA
(aggressively)
விடுங்கடா அவள. சின பொண்ணுடா.

LANKAN
மூடிட்டு வாடி.

REKHA
(screams)
நீ எல்லாம் மனுஷனே இல்ல.

லங்கன் ரேகாவை அறைகிறாண்.

SINGARAM
விடுறா கத்தட்டும். இங்க எவனுக்குடா கேக்க போவுது?

மணி அந்த இடத்திற்க்கு வருகிறான்.

MANI
விடு நான் பாத்துக்குறேன்.

நந்தினியின் தலை முடியை பிடித்து சின்னையாவின் காரை நோக்கி இழுத்து செல்கிறான், மணி.

REKHA
(to mani)
எல்லாதுகுமே நான்தாங்க காரணம். என்ன என்னவேணாலும் பண்ணுங்க.

சின்னையாவை பார்த்த ரேகா அவனிடம் ஓடுகிறாள். மணி அவளை தள்ளி விடுகிறான்.

REKHA (CONT’D)
(yells at top of her voice)
நீங்க என்ன சொன்னாலும் நான் கேக்குறேன்.
(MORE)

(CONTINUED)

CONTINUED:

REKHA (CONT'D)
பாவம் அந்த சின்ன பொண்ணுக்கு ஒன்னும் தெரியாது...

மணியிடம் அவதி பட்டு கொண்டிருக்கும் நந்தினியை உற்று பார்க்கிறான், சின்னையா. கார் கதவை திறந்து நந்தினியை உள்ளே தள்ளுகிறான் மணி.

REKHA (O.S.)(CONT'D)
...அத மட்டும் விட்ருங்க.

NEW ANGLE

வேலு ஒரு பெரிய நாற்கட்ட வடிவத்தை அந்த மண் தரையில் வரைந்து; சிங்காரம், லங்கன் இருவரையும் பார்த்து தலையை ஆட்டுகிறான்.

VELU
(to singaram and Lankan)
தோண்டு.

சிங்காரம், லங்கன் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து கொள்ள அவர்களின் கவனம் சொருகி இருந்த கடப்பாறையின் பக்கம் திரும்பியது.

**INT. CHINNAIAH'S SUV, INSIDE - NIGHT**

சின்னையா அமைதியாக அமர்ந்திருக்க, நந்தினி அழுது கொண்டே இருந்தாள்.

CHINNAIAH
அழாத.

நந்தினியால் அழுகையை நிறுத்த முடியவில்லை.

CHINNAIAH (CONT'D)
அழாத...

மிகவும் பயந்து போன அவள் கையாள் தன் வாயை மூட முயற்சிக்கிறாள்.

CHINNAIAH (CONT'D)
பேர் என்ன?

NANDHINI
(sobbing)
நந்தினி.

பாட்டில் தண்ணீரை பார்த்து கொண்டிருக்க, அதை பார்த்த சின்னையா எடுத்து அவளிடம் கொடுக்கிறான்.

CHINNAIAH
குடி.

CONTINUED:

அதை வாங்கி குடித்து, தாகத்தை அடக்க முயற்சி செய்கிறாள். ஆனால் முடியவில்லை.

மீண்டும் அழ தொடங்கவில்லை.

CHINNAIAH (CONT'D)
என் அப்பாவ உனக்கு தெரியுமா?

NANDHINI
ஹன்?

பால் பாயின்ட் பேனாவை அழுத்த தொடங்கினான், சின்னையா.

CHINNAIAH
என் அப்பாவ உனக்கு தெரியுமா?

'ஆம்' என்று தலையை ஆட்டுகிறாள்.

NANDHINI
நான் வேனுன்டே பன்னல.

அதிகமாக அழ தொடங்குகிறாள், நந்தினி.

CHINNAIAH
வாய மூடு. அழாத.

தன்னை கட்டு படுத்தி கொள்கிறாள்.

CHINNAIAH (CONT'D)
அவரு உன்ன என்ன பண்ணாரு?

NANDHINI
ஞாபகம் இல்ல.

பேனா அழுத்துவதை நிறுத்துகிறான்.

CHINNAIAH
பொய்.
(menacingly)
என்ன பன்னாரு?

NANDHINI
என்ன வீட சுத்தி பாக்க கூட்டிட்டு போனாரு.

மறுபடியும் அழுத்த தொடங்குகிறான்.

CHINNAIAH
அப்புறம்?

FLASH BACK TO:

**INT. BEACH HOUSE, STAIRWELL - NIGHT**

நந்தினியின் கைகளை பிடித்து படிகட்டுகளை ஏறுகிறான், பெரியையா.

**INT. BEACH HOUSE, BEDROOM/CHINNAIAH'S SUV, INSIDE - NIGHT**

*பின்வரும் காட்சியில் நிகழ்காலத்தையும், முந்நிகழ்வுகளையும் மாற்றி மாற்றி காண்பிக்கப்பட்டிருக்கிறது.*

மிகவும் பலமான காற்றில் ஜன்னல்கள் பயங்கரமாக ஆடிக்கொண்டிருக்க அந்த அறை சப்தமே இல்லாமல் தென்படுகிறது.

NANDHINI
ரூம்குள்ள கூட்டிட்டு போனாரு. சூரு பெரிய கயறு எடுத்தாரு.

ஒரு கயிற்றை கொண்டு வருகிறார், பெரியையா.

CHINNAIAH
கட்டி போட்டாரா?

நந்தினி 'ஆம்' என்று தலையை ஆட்டுகிறாள்.

CHINNAIAH (CONT'D)
அப்புறம் என்ன நடந்துச்சு?

ஒரு சின்ன குழந்தையின் கைகள் கட்டப்பட்டு அறையின் உட்கூறையிலிருந்து தொங்கிக் னொண்டிருக்கும் படி ஒரு ஓவியம் தெரிகிறது.

NANDHINI
எனக்கு பயம் வந்துடுச்சு... பயத்துல நான் கத்தினேன்.

நந்தினி அலற தொடங்குகிறாள்.

CHINNAIAH
ம்ம்..

NANDHINI
அப்பதா..ன்...அப்பதான் அவர் ஒரு கத்தி...ஒரு கத்தி....வாய மூட சொன்னாரு.

ஒரு கத்தி உறையிலிருந்து கதியை எடுத்தபடி நந்தினியை நெருங்குகின்றார், பெரியையா.

மிகவும் மும்முரமாக கேட்க தொடங்குகிறான் சின்னையா.

CHINNAIAH
அதுக்கு அப்புறம்?

(CONTINUED)

CONTINUED:

சின்னையாவை பார்த்து தேம்பி அழ ஆரம்பிக்கிறாள்.

NANDHINI
என்னால அழுகைய அடக்க முடியல...கொவத்தில
பக்கத்தில வந்தாரு.

CHINNAIAH
(pressing the ball
point)
நீ என்ன பண்ண?

NANDHINI
என்னால ஒன்னும் பன்ன முடியல, அப்பதான்
ரேகா அக்கா உள்ள வந்தாங்க.

கதவை திறந்து ரேகா உள்ளே எட்டி பார்க்கிறாள்.

REKHA
அட பாவி!

NANDHINI
அக்கா...அக்கா....

PERIAIAH
உன்ன யாருடி உள்ள வர சொன்னா?

REKHA
என்னடா பண்ணிட்டிருக்க?

ரேகா, நந்தினியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, பெரியையா ரேகாவின் முகத்தில் குத்துகிறார். அவளின் கண்கள் வீங்கியபடி காணப்படுகின்றன.

PERIAIAH
போடி வெளிய...பரதேசி நாயே.

பெரியையாவை நெருங்க விடாமல் செய்ய, ரேகா தன் கூர்மையான நகத்தினாள் பெரியையாவின் முகத்தில் கீறுகிறாள்.

காட்டுமிராண்டி தனமாக ரேகாவை பிடித்து மல்லு கட்டுகிறார் பெரியையா. தட்டி தடுமாறி அஙிருந்த ஒர் பித்தளை விளக்கை எடுத்து பெரியையாவின் தலையில் அடிக்கிறாள். சுயநினைவு இல்லாமல் போனார், பெரியையா.

நந்தினியிடம் ஓடி போய் கட்டி இருந்த கைகளை அவிழ்கிறாள் ரேகா.

REKHA
வா கண்ணு...வா வா.

ரேகா திரும்பி பார்க்க, பெரியையா ஒரு முரட்டு குணமுள்ள விலங்கு போல அவளை தாக்க வருகிறார்.

உள்ளிருந்து மிக சப்தமாக அலறுகிறாள், நந்தினி.

(CONTINUED)

CONTINUED: (2)

NANDHINI

அக்கா!

அங்கு பக்கத்தில் இருந்த கத்தியை எடுத்து நந்தினி பெரியையாவின் வயிற்றில் குத்துகிறாள். ரத்தம் பீச்சி அடிக்க பெரியையா, நிலை தடுமாறி கீழே விழுகிறார்.

NANDHINI (CONT'D)

நான் வேணுன்டே பன்னல.

அவள் சொன்னதை கேட்டு சின்னையா, பேனா அழுத்துவதை நிறுத்துகிறான். அவன் கண்களில் எந்த ஒரு மாற்றமும் தெரியாமல் இருக்க, மெதுவாக கண்ணீர் வர தொடங்கியது. அவன் என்ன நினைக்கிறான் என்று யாராலும் கணிக்க முடியாது.

திடீரென கார் கதவை திறந்து வெளியே செல்கிறான், சின்னையா.

மிகவும் பயந்தபடி நந்தினி மறுபடியும் அழ தொடங்குகிறாள்.

**EXT. BRICK KILN - NIGHT**

வெகுநேரமாக கையில் வைத்திருந்த சிகரெட் பாக்கெட்டை திறந்து, முகர்ந்து பார்க்கிறான்.

காரில் இருந்து வெளியே இறங்கிய நந்தினி, ரேகாவிடம் ஓடி செல்கிறாள்.

NANDHINI

(anxious to be next to her)

அக்கா.

ரேகா காரின் பக்கத்தில் வருகிறாள்.

REKHA

(yells)

நந்தினி! நந்தினி!

பட படவென்று காரை விட்டு இறங்கி ரேகாவை கட்டிகொள்கிறாள் நந்தினி.

NANDHINI (O.S.)

அக்கா, ஒரே பயமா இருக்கு அக்கா!

சின்னையா மணியிடம் சைகை காட்டுகிறான்.

அதை புரிந்து கொண்ட மணி - ரேகா, நந்தினி இருவரையும் குழியின் பக்கத்தில் இழுத்து வருகிறான்.

REKHA

(screams)

அவள விடுங்கடா.

CONTINUED:

NEW ANGLE

பயத்தையும், சோர்வையும் மறைத்தபடி சிங்காரம், லங்கன் இருவரும் தன் வேலையை மறுபடியும் செய்ய தொடங்குகின்றனர்.

MANI
போதும். எந்திரிங்க.

சிங்காரம், லங்கன் இருவரும் குழியிலிருந்து வெளியே வர அங்கிருந்து தப்பிப்பதற்க்கு வாய்ப்பை எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

தப்பிக்க நினைத்த இருவரையும் கவனித்த சின்னையா மணியிடம் தன் கண்களால் செய்கை காட்டுகிறான்.

சிங்காரம், லங்கன் இருவரையும் கத்துகிறான் மணி.

MANI (CONT'D)
எங்க போறீங்க? இருந்து வேடிக்க பாத்திட்டு போ.

REKHA
(screams)
அவள விடுங்கடா

CHINNAIAH
(to rekha)
வாய மூடு.

அனைவரும் அமைதி காக்கின்றனர்.

CHINNAIAH (CONT'D)
என் அப்பா செத்து போயிட்டாரு. யார் பதில் சொல்ல போறீங்க.

லங்கன், சிங்காரம் இருவரும் பார்க்க அங்கிருந்து ஓட தாயாராகின்றனர்.

CHINNAIAH (CONT'D)
(to nandhini)
நீ வா.

சின்னையா தன் கையை நீட்ட, விருப்பமே இல்லாமல் அவனிடம் நடந்து செல்கிறாள் நந்தினி.

கொலைவெறியுடன் அந்த கடப்பாறைய எடுத்து வீசுகிறான், சின்னையா.

'படால்' என்ற சப்தத்துடன் அந்த கடப்பாறையை லங்கனின் தலையில் அடித்தது. லங்கன் இறந்து போகிறான். அவன் உடம்பின் கீழே ரத்தம் பரவ தொடங்குகிறது.

ரேகா, நந்தினி இருவரும் பேச்சு மூச்சு இல்லாமல் நின்று கொண்டிருக்கிறார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்ள, அடுத்தது அவர்கள் தான் என்ற பயம் அவர்கள் கண்ணில் தெரிகிறது.

(CONTINUED)

CONTINUED: (2)

சின்னையா திரும்பியபடி சிங்காரத்தை பார்க்கிறான். அங்கிருந்து ஓட முயன்ற சிங்காரத்தின் கால்களில் கடப்பாறையால் அடிக்கிறான், சின்னையா. நடக்க முடியாமல் கீழே விழுகிறான் சிங்காரம்.

CHINNAIAH (CONT'D)
(looks at nandhini)
இந்தா...

கடப்பாறையை நந்தினியின் கையில் கொடுக்கிறான், சின்னையா.

CHINNAIAH (CONT'D)
...புடி.

நந்தினி புலம்ப தொடங்குகிறாள்.

NANDHINI
வேணாம்! ப்ளீஸ்!

சாவை பார்த்து பயப்பட தொடங்கினான், சிங்காரம்.

CHINNAIAH
குத்து...ம்ம்...சாவடி. இவனால தான என் அப்பாவ நீ குத்தின?

கடப்பாறையை நந்தினியிடமிருந்து பிடுங்கி சிங்காரத்தை குத்துகிறான், சின்னையா.

ரத்தம் பீச்சி அடிக்க சிங்காரம் கீழே விழுகிறான். சுயநினைவை இழந்து, செத்து போகிறான், சிங்காரம்.

இவ்வளவு முரட்டுதனத்தை பார்த்த நந்தினி, தாங்கமுடியாமல் மயக்கம் போட்டு கீழே விழுகிறாள்.

மணி, வேலு இருவரும் சேர்ந்து இறந்து போனவர்களை குழியில் தள்ளினார்கள்.

தன் கண்ணால் எதோ ஒன்றை சின்னையா சுட்டிக்காட்ட, மணி வேலு இருவரும் காரிலிருந்து ஒரு பிணத்தை இழுத்து வருகிறார்கள். அதுதான் பெரியையா.

குழியின் பக்கத்தில் அவரை இழுத்து வந்தனர்.

CHINNAIAH (CONT'D)
பாரு? நல்லா பாரு. பாத்தியா?

இனிமேல் எந்த ஒரு ப்ர்யோஜனமும் இல்லை என்று தலை எழுத்தை ஏற்று கொள்ள தொடங்குகிறாள், ரேகா.

CHINNAIAH (CONT'D)
ம்ம்...? உன்ன இப்போ என்ன பண்ணலாம்?

ரேகா அழுது கொண்டே இருக்க, மயங்கியபடி நந்தினி அவளின் மடியில் படுத்திருக்கிறாள்.

CONTINUED: (3)

சின்னையா தன் அப்பாவின் பிணத்தை குழியின் உள்ளே தள்ளி அவர் மேல் துப்புகிறான்.

FLASH BACK TO:

**INT. BEACH HOUSE, BEDROOM - NIGHT (FLASHBACK)**

தன் கடைசி நொடிகளில், வலியில் அவதி படுகிறார், பெரியையா.

இரக்கமே இல்லாமல் அமைதியாக அமர்ந்திருந்து அவரை பார்த்து ரசிக்கிறான்.

DISSOLVE TO:

**EXT.  BRICK KILN - NIGHT**

ஈர மண்ணால் அந்த குழி மூடப்படுகிறது.

சின்னையாவின் முகம் கொஞ்சம் தளர்ந்து காணப்படுகிறது.

CHINNAIAH
(to mani)
எங்கே போனும்னு கேட்டு போய் விட்டுடு.

திரும்பியப்படி தன் காரை நோக்கி நடக்கிறான்.

**I/E. CHINNAIAH'S SUV, CONTESSA, BRICK KILN - NIGHT**

சிங்காரத்தின் கான்டெஸா கார் திரும்பியப்படி சின்னையாவின் காருக்கு இணையாக வந்து நிற்கிறது. ரேகாவிடம் செய்கை காட்டிய சின்னையா கார் கண்ணாடியை திறக்க சொல்கிறான்.

ரேகா அதற்க்கு கீழ்படுகிறாள்.

CHINNAIAH
எல்லாம் பணத்துக்க் தான?

சின்னையா பெரிய இரு பணகட்டுகளை எடுத்து அவளிடம் கொடுக்கிறான்.

CHINNAIAH (CONT'D)
ம்ம்.. பொண்ண பாத்துக்கோ.

இரண்டு கார்களும் நேர் மாறாக செல்கிறது.

**I/E. CHINNAIAH'S SUV, TRICHY HIGHWAY - NIGHT**

அமைதியாக அமர்ந்திருந்த சின்னையா ஏதோ ஒன்றை யோசித்து கொண்டிருக்கிறான். முன்னால் நடந்த ஏதோ ஒன்று அவனின் நினைவுக்கு வருகிறது....

FLASH BACK TO:

**EXT. PLAYGROUND - NIGHT (FLASHBACK)**

முந்நிகழ்வு ஒன்று அவன் நினைவுக்கு வருகிறது.

மைதானத்தில் விளையாடி கொண்டிருக்கும் சில குழந்தைகள், வீட்டின் பால்கனியை பார்த்து கொண்டிருக்கிறார்கள். ஊஞ்சல் ஒன்று ஆடிக்கொண்டிருக்க, 12 வயதாகிய ஒரு சிறுவன் அவன் வயதில் இருக்குக் ஒரு சிறுமியை உட்காரவைத்து தள்ளி கொண்டிருக்கிறான். இருவரும் சந்தோஷமாக ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மனிதன் தன் சைக்கிளில் டிப்பன் காரியர் சுமந்து செல்வதை நாம் பார்க்கிறோம். மற்றொரு பெண் ஒரு சேலையை பெரிய கல் ஒன்றில் அடித்து துவைத்து கொண்டிருக்கிறாள்.

சூரிய வெளிச்சத்தால் உண்டாக்கிய அந்த வீட்டின் மேல்தள நிழல்கள், அதற்க்கு எதிர்புறம் இருக்கும் ரோட்டின் மேல் தெரிகிறது.

அங்கு பறந்து கொண்டிருந்த பட்டாம்பூச்சி ஒன்று அந்த சிறுமியை திசை திருப்புகிறது.

வயதான ஒரு மனிதனின் நிழல், பூமியில் தெரிய ஒரு சில நொடிகள் அங்கே காத்திருக்கிறான்...

OLDER MAN (O.S.)
டேய், விளையாடுனது போதும். அவள மேல
கூட்டிட்டு வா.

ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த இருவரையும், மேலே வருமாரு அவர் அழைக்க, அதைகேட்டு இருவரும் மேலே செல்கின்றனர்.

அந்த சிறுமி பறந்து கொண்டிருந்த பட்டாம்பூச்சியை பிடிக்க முயற்சி செய்ய, அது அவளை விட்டு தூரம் பறந்து சென்றுவிடுகிறது...

**INT. PERIAIAH'S HOUSE, UPSTAIRS - NIGHT (FLASHBACK)**

சிறு வயதிலிருந்த சின்னையாவும், சிறுமியும் மேலே சென்றனர். அந்த வயதான மனிதன் தன் விரல்களால் அந்த சிறுமியின் முடியை சரி செய்கிறான்.

PERIAIAH
உன் பேர் என்ன மா?

(CONTINUED)

CONTINUED:

பெரியையா அந்த சிறுமியை அறைக்குள் கூட்டி செல்கிறார். அவரின் நண்பர்கள் மேனன், தாஸ் இருவரும் அறைக்குள் இருக்கின்றனர். இருவரும் இளமையாகவும், ஆரோகியமாகவும் இருக்கின்றனர்.

BOY
அப்பா, வேணாம்பா. வேணாம் பா...

சின்னையாவை கடுப்பாக பார்த்தபடி பெரியையா அறையின் கதவை மூடுகிறார்.

ஜன்னலின் பக்கத்தில் சென்று எட்டி பார்க்கிறான், சின்னையா.

BOY (CONT'D)
வேணாம்..விட்றுங்க.

தாஸ் விளையாட்டு தனமாக ருத்ராட்ச்சத்தை பிடித்து கொண்டிருக்க, சின்னையாவின் வேண்டுதலை மறுக்கிறான்.

BOY (CONT'D)
ப்ளீஸ்...ப்ளீஸ்...

அழுது கொண்டே அந்த சிறுமியை விடுமாறு கெஞ்சுகிறான், சின்னையா.

அறையின் ஒரு ஓரத்திலிருந்து உதித்த மேனன், ஜன்னலை மூடுகிறான்.

யாரின் உதவியும் கிடைக்காமல் ஜன்னல் கம்பியில் தன் தலையால் முட்டி கொள்கிறான்.

FADE OUT.

FADE IN:

**EXT. WELL - DAY (FLASHBACK)**

இதற்க்கு முன்னால் பார்த்த பழைய கிணறு தெரிய, அந்த சிறுமியின் பிணம், கிணற்றின் உள்ளே மிதந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அவ்விடத்தில் கூட்டம் சேர்ந்து நின்றனர்...

இளமையான சின்னையாவை காண்பிக்க, ஒரு வயதான மரத்தின் பக்கத்தில் நின்றபடி அந்த கூட்டத்தை பார்த்து கொண்டிருக்கிறான். முகத்தில் எந்த ஒரு மாறுதலும் இல்லாமல் சூரியன் மறைவதை உற்று பார்த்து கொண்டிருக்கிறான்.

MATCH CUT TO:

**I/E. CHINNAIAH'S SUV, TRICHY HIGHWAY - DAY (MORNING)**

விடியும் வேளையில் சின்னையாவின் கண்ணில், கண்ணீர் நிரம்புகிறது..

**I/E. BUS, PICTURESQUE ROAD - DAY (MORNING)**

பேருந்தின் கடைசி வரிசையில் ரேகா, நந்தினி இருவரும் அமர்ந்திருக்கின்றனர். நந்தினி ஜன்னலின் ஓரத்தில் அமர்ந்திருக்கிறாள்.

NANDHINI
அக்கா, அங்க என்ன நடந்துச்சு?

REKHA
அங்க எதுமே நடக்கல.
(beat)
எல்லாதையும் மறந்திடு. அங்க பார்.

சூரியனின் முதல் தங்க ஒளிகள் ஜொலித்தபடி, நந்தினியின் முகத்தில் விழுகிறது.

அந்த பேருந்து நல்ல காற்றோட்டம் உள்ள கண்ணை கவருகிற ரோட்டின் வழியாக சென்று மறைகிறது. இது ஒரு புதிய விடியல், இது ஒரு புதிய நாள்...

NANDHINI (O.S.)
அக்கா, நான் உன்கிட்ட ஒரு பொய் சொல்லிட்டேன்.

REKHA (O.S.)
தெரியும். ஆனா நந்தினிங்குற பேரே உனக்கு நல்லா இருக்கு....

**CREDITS ROLL**